
# வருடாந்த அறிக்கை 2018

நாளைய சக்தி வலு **இன்றே**



ශ්‍රී ලංකා සුනිත්‍ය බලශක්ති අධිකාරිය
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை
Sri Lanka Sustainable Energy Authority

# நாளைய சக்தி வலு இன்றே



தேசத்திற்கு மீள் சுழற்சி சக்தி வலுவை, பதினொரு வருடங்களாகப் பெற்றுக்கொடுக்கும் சிறப்பு மிகு வரலாற்றைக் கொண்டுள்ள நாம், இலங்கையர்கள் மீள் சுழற்சி மின்சார உற்பத்தியில் செயற்திறனை அடைந்துகொள்ளும் தேவைப்பாட்டை தேசிய மட்டத்தில் முன்னின்று செயற்படுத்தி வருகின்றோம். இலங்கையை மீள் சுழற்சி மின்சாரத்தை நோக்கி தொடர்ந்தும் செயற்படுத்திக் கொண்டிருக்கும் நாம், மீள் சுழற்சி சக்தி வலு உருவாக்கத்தில் பாரியளவு முதலீடுகளைக் கொண்டுவந்து சேர்க்கும் பொறுப்பையும் பெற்றுள்ளோம்.

உலகம் வெப்பமடையும் சர்ச்சை மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் சக்தி வலுவின் போதாத தன்மை, நாடுகளை தமது மின்சக்தி எரிசக்திகளைப் பயன்படுத்துவதில் மீளாய்வுகளை மேற்கொள்ளவும், எரிபொருள்கள் மூலம் மின் சக்தியை உருவாக்குவதை விட்டும் விலகி, சக்தி வலுக்கள் மீது கவனம் செலுத்தவும் தூண்டுகிறது. இந்த அடிப்படையில், இ.நி.வ.அ.ச. தேசத்தின் சக்தி வலு தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு மீள் சுழற்சி சக்தி வலுவை தொடர்ந்து பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. எதிர்காலத்தின் சக்தி வலுவான இதனை இலங்கை மக்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்கில் நாம் அதுபற்றி அறிவுறுத்தியும், கல்வி நிகழ்ச்சிகளைப் பெற்றுக்கொடுத்தும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியும் வருகின்றோம். இதற்கு மேலதிகமாக, இவ்வாறு சக்தி வலுவைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இடையூறுகள் மற்றும் குறைபாடுகளை இனங்கண்டு, அவற்றைப் பூர்த்தி செய்வதன் மூலம் இந்த சக்தி வலுக்களினால் பெருமளவு பயன்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இதனால், எரிபொருள் மூலம் சக்தி வலுகை உற்பத்தி செய்வதை விட்டும் விலகி, அனைத்து வாழ்க்கை முறைகளிலும் செயற்திறன் மிக்க சக்தி வலு பயன்பாட்டை அறிமுகப்படுத்தி, செயற்பாடுகளை மேலும் சுமுகமாக்கும் நவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

# உள்ளடக்கம்

## எம்மைப் பற்றி


எமது நோக்கம் எமது பணி 6

எம்மைப் பற்றி 8

இந்த அறிக்கை பற்றி 9

செயற்திறன் சிறப்பம்சங்கள் 10

முக்கிய மைல்கற்கள் 12

மின் சாதனங்களின் சக்தி வலு பயன்பாட்டை அடையாளப்படுத்துவதற்கான நியமங்களும் தராதரங்களும் 14

எமது பெறுமானங்கள் 15

சக்தி வலு தொழிற்துறையில் காபன் வெளியீட்டை பூச்சியமாக மாற்றும் நீண்டகால தொலைநோக்கை அடைந்து கொள்ளல் 2050

தலைவரது அறிக்கை 16

மீள் சுழற்சி சக்தி வலு உற்பத்தி எல்லை அடைந்துள்ள அளவு 750 Mw

பணிப்பாளர் நாயகத்தின் மதிப்பாய்வு 18

முகாமைத்துவ சபை 20

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 21


## கூட்டிணைப்பு ஆளுமை


கூட்டிணைப்பு ஆளுமை 24

இடர் முகாமைத்துவம் 26

## முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்


செயல்திறன் மதிப்பாய்வுகள் 30

நிரம்பல் பிரிவில் முகாமைத்துவ நடவடிக்கைகள் 30

கேள்விப் பிரிவில் முகாமைத்துவ நடவடிக்கைகள் 35

நிதியுதவி வழங்கிய வேலைத் திட்டங்கள் 40

மனித வள அபிவிருத்தி 43

2019 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டம் 45


## நிதித்துறைத் தகவல்கள்


வருமான அறிக்கை 48

நிதி நிலைமை அறிக்கை 49

பங்குகளில் மாற்றம் பற்றிய அறிக்கை 50

காசுப் பாய்ச்சல் அறிக்கை 52

நிதி அறிக்கைகள் மீதான குறிப்புகள் 54

தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை 75

கணக்காய்வாளர் நாயகத்தின் 2018 ஆம் ஆண்டு அறிக்கையில் SLSEA இன் அவதானிப்புக்கள் 76


## மேலதிகத் தகவல்கள்


இணைப்பு 1 87

இணைப்பு 2 88

கூட்டு நிறுவனத் தகவல்கள் 94



மக்களோடு இணைந்து, அவர்களுக்குப் புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுப்பதிலும், கொண்டு சேர்ப்பதிலும், மீளாய்வு செய்வதிலும், அவற்றைக் களஞ்சியப்படுத்துவதிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம். மக்களின் அறிவை வளர்க்கும் அதேவேளை, இந்த நடவடிக்கைகள் மூலம் தொழிற்துறையில் மக்களிடையே பிணைப்புக்களை ஏற்படுத்தி, தொழிற்துறை நடவடிக்கைகளை அதிகரிக்க முடியும். இதனால், ஒருங்கிணைப்பு மற்றும் பங்காளித்துவமும் அதிகரிக்கப்படும்.



# எம்மைப் பற்றி



# எமது தூரநோக்கு

இலங்கையை சக்திப் பாதுகாப்புடைய ஓர் நாடாக விளங்கச் செய்தல்.



# எமது செயற்பணி

சிறந்த நிலைபெறுதகு செயன்முறைகளை பின்பற்றி இயற்கை வளங்களையும் மனித வளங்களையும் மற்றும் பொருளாதார செல்வத்தையும் பாதுகாத்து இலங்கை சக்தி பாதுகாப்பை அடைவதற்கு வழிகாட்டும் தேசிய அபிவிருத்தி பயணத்தில் ஆய்வு செய்தல், வசதிகளை ஏற்பாடு செய்து வழங்குதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அறிவு முகாமைத்துவத்தைப் பிரயோகித்தல் ஆகியவற்றினூடாக சுதேசிய சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் சக்தி வளங்களை பாதுகாப்பதற்கும் தேசத்திற்கு அதன் முயற்சிகளில் வழிகாட்டுதல்.

# எம்மைப் பற்றி

## இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசு பாராளுமன்றத்தின் 2007 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தின் கீழ், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையில் நிலையான சக்தி வலு நடவடிக்கைகளில் முன்னோடியாகச் செயற்பட்டு வரும் அதேவேளை, நாடு முழுவதும் எரிசக்தி செயல்திறனை ஊக்குவிக்கும் முக்கிய அரச நிறுவனம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் இ.நி.வ.அ.ச. உருவாக்கப்பட்டது. இது, இலங்கையின் சக்தி வலு தேவைப்பாட்டுக்கான வளங்களை சூழலுக்குப் பாதிப்பின்றி, செயற்திறன் மிக்க முறையில் அடையாளம் கண்டு, முன்கூட்டியே மேற்கொண்டு வருகிறது. இலங்கையின் இந்த முக்கியமான எதிர்கால செயற்பாடு ஒன்றைக் கண்காணிக்கும் ஒரு மிக முக்கிய நிறுவனம் என்ற வகையில், நாம் எமது நாட்டின் நிறைவான வளங்களான சூரிய சக்தி, காற்று, நீர் மற்றும் உயரியல் வாயு போன்ற சக்தி வலுக்களை தொடர் அபிவிருத்திக்கு உள்வாங்கும் வகையில் பணியாற்றி வருகின்றோம்.

இ.நி.வ.அ.ச. ஆகிய நாம், சக்தி வலு துறையில் முக்கிய முதலீடுகளைக் கொண்டு வந்து சேர்க்கும் வகையில், இலங்கை சுத்தமான நிலையான மற்றும் உள்நாட்டிலேயே பெற்றுக்கொள்ளக்கூடிய சக்தி வலு தீர்வுகளை எதிர்காலத்தில் அடைந்துகொள்ளும் வாய்ப்பை உருவாக்குகிறது. எமது சக்தி வலு வளங்களை அபிவிருத்தி செய்யும் அதேவேளை, நாட்டின் எதிர்கால நிலையான சக்தி வலு தேவைப்பாட்டுக்கு அவசியமான அடிப்படை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அறிவுப் பரிமாற்றத் திட்டங்களை மேற்கொள்வதிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.



# இந்த அறிக்கை பற்றி

## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் இ.நி.வ.அ.ச. 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்கு உங்களை வரவேற்கின்றோம்

இ.நி.வ.அ.ச. ஆனது, தனது வருடாந்த அறிக்கையைத் தொடர்ந்து விருத்தி செய்வதில் அவதானம் செலுத்தி வருகிறது. அதன் மூலம் தொழில் வல்லுமை கொண்ட, தெளிவான மற்றும் தகவல்கள் நிறைந்த அறிக்கையை, கடந்த வருடங்களைவிடச் சிறப்பாகப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அடிப்படையில், 2017 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் மேலே கூறப்பட்ட இந்த அம்சங்களையும் சேர்த்து எமது ஆர்வம் காட்டுவோருக்கு சமநிலைப்படுத்தப்பட்ட மற்றும் சகல தகவல்களையும் உள்ளடக்கிய, நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டின் அனைத்துவிதமான செயற்பாடுகளையும் வெளிப்படுத்தக்கூடிய ஒரு வருடாந்த அறிக்கையை நாம் சமர்ப்பிக்கின்றோம்.

இந்த அறிக்கையானது, இ.நி.வ.அ.ச. யின் 2018 ஜனவரி 01 முதல் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான செயற்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.






# செயல்திறன் சிறப்பம்சங்கள்

| விபரம் | அலகு | 2018 | 2017 |
|---|---|---|---|
| **செயல்திறன் சிறப்பம்சங்கள்** | | | |
| புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி | கி.வொ.ம | 1,742 | 1,462 |
| நீர் மின் திட்டங்களில் இருந்தான ஒட்டுமொத்த திறன் | மெ.வொ | 379.61 | 364.12 |
| சோலார் திட்டங்களில் இருந்தான ஒட்டுமொத்த திறன் (தரையில் ஏற்பட்ட) | மெ.வொ | 51.36 | 51.36 |
| காற்று திட்டங்களின் மூலமான ஒட்டுமொத்த திறன் | மெ.வொ | 128.45 | 128.45 |
| உயிரினத் தொகுதி திட்டங்களில் இருந்து ஒட்டுமொத்த திறன் | மெ.வொ | 33.61 | 32.62 |
| தேசிய மின்சார வலையமைப்பில் இணைக்கப்பட்ட ஒட்டுமொத்த சூரிய மின் சக்தித் தொகுதிகள் | எண்ணிக்கை | 19,164 | 10,389 |
| சோலார் கூரைத் திட்டங்களில் இருந்து ஒட்டுமொத்த திறன் | மெ.வொ | 176.37 | 93.72 |
| சோலார் கூரைத் திட்டங்களில் இருந்து உற்பத்தி | கி.வொ.ம | 215.14 | 129.65 |
| திறமைச் சாதனங்களில் இருந்து ஆற்றல் சேமிப்பு | கி.வொ.ம | 721.29 | 705.84 |
| SLNEEA தலையீடு காரணமாக மின்சார சேமிப்பு | கி.வொ.ம | 27 | n/a |
| SLNEEA தலையீட்டினால் சேமிக்கப்படும் உலை எண்ணெய் அலகுகள் | மில்லியன் லீற்றர்கள் | 16.5 | n/a |
| $CO_2$ தவிர்க்கப்பட்டது | மெற்றிக் தொன் | 2,193,563 | 1,862,805 |
| **மனித மூலதனம்** | | | |
| இ.நி.வ.அ.ச. இன் மொத்த ஊழியர்கள் | எண்ணிக்கை | 100 | 103 |
| 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஊழியர்கள் | எண்ணிக்கை | 45 | 41 |
| 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஊழியர்கள் | எண்ணிக்கை | 71 | 61 |
| ஊழியர்களின் மொத்தக் கொடுப்பனவு | ரூபா மில்லியன் | 94.375 | 89.676 |
| **சமூக மற்றும் தொடர்புடைய மூலதனம்** | | | |
| மேற்கொள்ளப்பட்ட மொத்த சக்தி வலு கணக்காய்வுகள் | எண்ணிக்கை | 23 | 7 |
| கருவிகள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட நாட்கள் | நாட்கள் | 1,220 | 1,580 |
| பிரசுரிக்கப்பட்ட சக்தி வலு அடையாளப்படுத்தல் தராதரங்கள் | எண்ணிக்கை | 2 | 1 |
| ஹம்பாந்தோட்டை சூரிய மின் பேட்டையை பார்வையிட்ட நாட்கள் | எண்ணிக்கை | 1,364 | 3,434 |
| இ.நி.வ.அ.ச. யில் பதிவு செய்யப்பட்டுள்ள சூரிய மின்சார சேவை நிறுவனங்கள் | எண்ணிக்கை | 251 | 185 |
| பிரசுரிக்கப்பட்ட மொத்த சூரிய மின் தராதரங்கள் | எண்ணிக்கை | 2 | 7 |
| அரச / சமய வழிபாட்டுத் தலங்களில் நிறுவப்பட்ட மொத்த சூரிய மின் தொகுதிகள் | எண்ணிக்கை | 95 | 116 |
| மொத்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் | எண்ணிக்கை | 4 | 2 |
| மொத்தப் பிரசுரிப்புக்கள் | எண்ணிக்கை | 7 | 7 |


| புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி | மின்சார சேமிப்பு | உலை எண்ணெய் அலகுகளின் சேமிப்பு |
|---|---|---|
| 1,742 GWh | 748 GWh | 16.5 மில். லீ. |

| $CO_2$ தவிர்ப்பு | தேசிய மின்சார வலையமைப்பில் இணைக்கப்பட்ட கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் தொகுதிகள் |
|---|---|
| 2.2 Mn MT | 8,775 |

கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் தொகுதிகளின் வளர்ச்சி




பொது மின்சாரத்தில் NRE இன் பங்களிப்பு



## 2007

இலங்கை நிலைபேறுதகு வலு அதிகார சபையின் ஸ்தாபிதம்



## 2010

- விதுல்கவின் ஆரம்பம் கண்காட்சி + கருத்தரங்கு + தேசிய மின்சார செயற்திறன் விருதுகள்
- கட்டாயப்படுத்தப்பட்ட முதலாவது மின்சக்தி அளவிடப்பட்ட உற்பத்தி கம்பக்ட் புளோரசன்ட் லாம்ப்
- கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் உற்பத்திக்கு நெற் மீற்றரிங் முறை அறிமுகம்



01

சிறந்த செயற்பாட்டுக் கொள்கைகளை அறிமுகப்படுத்தல்



02

நிலையான சக்தி வலு பயன்பாட்டை அதிகரித்தல்

## 2011

- பாடசாலைகளில் சக்தி வலு கழகங்கள் உருவாகுதல்
- முதலாவது சூரிய மின் உற்பத்தி நிலையத்தை 1.237 Mw சக்தியுடன் ஹம்பாந்தோட்டையில் ஆரம்பிக்க உறுதியளித்தல்



## 2014

இலங்கையின் சூரிய சக்தி வலு வரைபடத்தை வெளியிடுதல்






## 03

சக்தி வலு பயன்பாட்டின் செயற்திறனை அதிகரித்தல்


## 04

மக்களுக்கு சக்தியைப் பெற்றுக்கொடுத்தல்



## 2015

கொள்கைசார் இலக்குகளை அடையாளம் கண்டு நிலையான மின்சக்தி உற்பத்தியில் 10% ஐ அடைந்து கொள்ளல்



## 2016

கூரையில் பொருத்தப்பட்ட சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் சூரிய பல சங்கிரமய திட்டத்தில் நெற் மீற்றரிங் முறையைப் பிரசித்தி பெறச்செய்தல்



## 2017

ஜனாதிபதி செயலணி ஒன்றை அமைப்பதன் மூலம் DSM செயற்பாடுகளினால் 10 உடனடி செயற்திட்டங்களை ஆரம்பித்தல்



## 2018

- சூரிய பல சங்கிரமய திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட கூரையில் பொருத்தப்பட்ட 100 Mw சூரிய மின் உற்பத்தி இலக்கை அடைந்து கொள்ளல்
- UNDP/FAO/GEF மூலம் மேற்கொள்ளப்பட்ட உயிரியல் வாயு எரிசக்தி உற்பத்தி வேலைத் திட்டத்தை மிகவும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்

# மின் கருவிகளுக்கு சக்தி வலு அளவினை அடையாளப்படுத்தும் தராதரங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்துதல்

மின்சாரத் தேவைப்பாட்டின் கேள்விப் பகுதி செயற்திறனை அதிகரிப்பதில் பிரதான அம்சமாக, மின் சாதனங்களின் மின்சக்திப் பயன்பாட்டுச் செயற்திறனை அதிகரிப்பது முக்கியமாகும். இந்த இலக்கினை அடைந்துகொள்ள, சந்தையில் மின் சக்தியை செயற்திறனுடன் பயன்படுத்தும் உற்பத்திகளை பெருமளவில் பயன்படுத்தச் செய்வதன் மூலமும், மின் சக்தியை சேதப்படுத்தும் உற்பத்திகள் சந்தைக்கு வருவதைத் தடுப்பதன் மூலமும் அடைந்துகொள்ள முடியும். இதனடிப்படையில், மின்சாதனங்களின் மின்சக்திப் பயன்பாட்டினை அளவிட்டுக் கூறும் செயற்திட்டமானது, செயற்திறன் மிக்க மின்சாதனங்கள் சந்தையை வந்தடைவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும்.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மின் சாதனத்திலும், அதன் மின்சக்தி செயற்திறனாகப் பயன்படுத்தும் தன்மையைப் பொறுத்து அதற்கு நட்சத்திரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலான ஒரு வகைப்படுத்தல் வழங்கப்படுகின்றது. இவற்றின் மூலம் வாடிக்கையாளர்கள் சந்தைகளில் காணப்படும் மின் சாதனங்களின் மின்சக்தி செயற்திறன்மிக்க பயன்பாட்டினை வேறுபடுத்தி அடையாளம் கண்டு, தங்களது கொள்வனவுகளை விபரமறிந்த கொள்வனவாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த அடையாளப்படுத்தலுக்கு மேலதிகமாக, குறைந்தபட்ச தேவைப்பாடாக, மின்சாதன செயற்திறன் அளவு ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம், வாடிக்கையாளர்கள் அதிகளவு செயற்திறனுடன் சக்தி வலுவைப் பயன்படுத்தக்கூடிய மின் சாதனங்களை இலகுவாக அடையாளம் காண முடியும். ஒவ்வொரு மின் உற்பத்தியினதும் மின் சக்திப் பயன்பாட்டு செயற்திறனை அடையாளப்படுத்திக் குறிப்பிடுவது அரசாங்க வர்த்தமானி மூலம் கட்டாயப்படுத்தப்பட்ட ஒரு சட்டமூலமாகும். இதன் மூலம் செயற்திறனற்ற உற்பத்திகள் உள்நாட்டில் இறக்குமதி செய்யப்படுவது தடுக்கப்படுகிறது.

மின்சாதன பயன்பாட்டுச் செயற்திறன் அளவுகோல் மூலம் கட்டுப்பாட்டு அளவுகளைப் பரிசோதிக்கும் முறைகள் உட்பட மேலும் பல விபரங்கள் இந்த செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றன. இந்தத் தராதரங்கள் இலங்கை SLS தராதர அங்கீகார சபையின் தர நிர்ணயங்களுக்கு அமைய பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. கீழே அந்த தராதர அங்கீகார முத்திரையின் இலக்கமும் வர்த்தமானி இலக்கமும் (இன்று வரை காணப்படும் சகல வர்த்தமானிகளும்) ஒவ்வொரு மின்சாதன கருவிகளுக்கும் ஏற்ப இந்த வேலைத் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

## தராதர அங்கீகாரத்திற்கு அமைய பின்வரும் மின்சாதனப் பொருட்களுக்கு தர நிர்ணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன

கொம்பேக்ட் புலொரசென்ற் லாம்ப்ஸ் (**CFL**கள்)
தராதர இலக்கம்
**SLS 1225:2002**
ஒழுங்குமுறை
2009 ஜுலை 22 இன் 1611/10 இலக்க வர்த்தமானி
வளர்ச்சி
மின்சாதனங்களின் மின்சக்தி அடையாளப்படுத்தல் தராதரத்தில் திருத்தம் CFLகளுக்கு 2016 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது

கூரை மின்விசிறிகள்
தராதர இலக்கம்
**SLS 1600:2011**
ஒழுங்குமுறை
2013 ஜனவரி 22 இன் 1794/15 இலக்க வர்த்தமானி
வளர்ச்சி
தரநிலைகள் அமுலிலுள்ளன. பரிசோதனை வசதிகளும் உள்ளது.

புலொரசென்ற் லாம்ப் பொலாட்ஸ்
தராதர இலக்கம்
**SLS 1200:2012**
ஒழுங்குமுறை
2016 ஜுன் 15 இன் 1971/13 இலக்க வர்த்தமானி
வளர்ச்சி
பரிசோதனை ஆய்வுகூடங்களை அமைக்கும் நடவடிக்கை அமுலிலுள்ளது

ரியூபியுலர் புலொரசென்ற் லாம்ப்
தராதர இலக்கம்
**SLS 1625:2012**
ஒழுங்குமுறை
2016 ஜுன் 15 இன் 1971/13 இலக்க வர்த்தமானி
வளர்ச்சி
பரிசோதனை ஆய்வுகூட அமைப்புப் பணிகள் நடைமுறையில் உள்ளது

இலக்ரிக் மோட்டர்கள்
தராதர இலக்கம்
**SLS 1525:2013**
ஒழுங்குமுறை
செல்லுபடியாகாது
வளர்ச்சி
பரிசோதனை ஆய்வுகூடம் அமைக்க நிதியுதவி கோரியுள்ளது

குளிரூட்டிகள்
தராதர இலக்கம்
**SLS 1586:2018**
ஒழுங்குமுறை
செல்லுபடியாகாது
வளர்ச்சி
மின்சாதன சக்தி பயன்பாட்டு அளவீட்டுத் தராதரங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன

கணனிகள்
தராதர இலக்கம்
**SLS 1580:2018**
ஒழுங்குமுறை
செல்லுபடியாகாது
வளர்ச்சி
மின் சக்தி தரநிலை தீர்மானிக்கப்பட்டுள்ளது

**LED** விளக்குகள்
தராதர இலக்கம்
**SLS 1530:2016**
ஒழுங்குமுறை
செல்லுபடியாகாது
வளர்ச்சி
தொண்டர் மின்சாதன பயன்பாட்டு அளவீட்டுத் திட்டம் அறிமுகம்

குளிர்சாதனப் பெட்டிகள்
தராதர இலக்கம்
**SLS 1230:2003**
ஒழுங்குமுறை
செல்லுபடியாகாது
வளர்ச்சி
தராதரக் கட்டுப்பாடுகள் திருத்தப்பட்டுள்ளன. மேலும், குறைந்தபட்ச மின் சாதன செயற்பாட்டுத் தராதரங்களும் (**MEPS**) அறிமுகப்படுத்தப்பட்டுள்ள

# சக்தி வலு ஊடக விருது 2018

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை, 2019/2020 ஆம் ஆண்டுக்காக சக்தி வலு ஊடக விருதுகள் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதன் மூலம், ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடையவர்களிடையே நிலைபெறுதகு வலு பயன்பாடு மற்றும் சக்தி வலுவை முறையாக முகாமை செய்தல் தொடர்பாக இலங்கையின் பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் நோக்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





# இலங்கை தேசிய சக்தி வலு செயற்திறன் விருதுகள்

பொது மக்களுக்கு சிறந்த சக்தி வலு பயன்பாட்டிற்கான பெறுமானம் ஒன்றைப் பெற்றுக்கொடுத்து, செயற்திறனுடன் சக்தி வலுவைப் பயன்படுத்தும் நடவடிக்கைகளுக்காக, சக்தி வலு சேவை வழங்குநர்கள் மற்றும் சக்தி வலு முகாமையாளர்கள் ஆகியோரை ஊக்குவித்து, ஈடுபாட்டுடன் செயற்படச் செய்ய வேண்டும். இதன் மூலம், செயற்திறனை அதிகரித்து, சக்தி வலுவைப் பாதுகாத்து, முகாமைத்துவப்படுத்தி, பாரியளவிலான சேமிப்புக்களை அடைந்து கொள்வதே சக்தி வலு செயற்திறன் விருதுகளை அறிமுகப்படுத்துவதன் நோக்கமாகும். மேலும், தொழிற்துறைகளிடையே சிறந்த பயன்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதையும் இந்தத் திட்டத்தின் மூலம் நாம் ஊக்குவித்து வருகின்றோம்.

இந்த விருது வழங்கும் விழா, மூன்று பிரதான அம்சங்களைக் கொண்டுள்ளது. அவை, தேசிய சக்தி வலு செயற்திறன் விருது, மிகச் சிறந்த சக்தி வலு சேவை வழங்கும் நிறுவன (ESCo) விருது மற்றும் வருடத்தின் மிகச் சிறந்த சக்தி வலு முகாமையாளருக்கான விருது என்பனவாகும்.

# 2050 இல் சக்தி வலு துறையில் காபன் வெளியேற்றத்தை முற்றாக ஒழிக்கும் நீண்டகால இலக்கினை அடைந்து கொள்ளல்.

தற்போதைய உலகளாவிய நடைமுறையான சக்தி வலு துறையில் காணப்படும் நிலையான சக்தி வலு நடவடிக்கைகளின் அபிவிருத்திக்காக பல்வேறு முன்னுரிமைகளை அரசாங்கம் வழங்கி வருகிறது. CoP21 பரிஸ் இணக்க ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு அமைய, ஐக்கிய நாடுகள் சபை ஒன்றியத்தினால் வரையப்பட்ட கட்டமைப்பின் தேவைப்பாடான தேசிய அளவில் கணக்கிடப்பட்ட பங்களிப்புக்கள் (NDC) என்பது காலநிலை மாற்றப் பிரிவில் ஒரு கட்டாயப்படுத்தப்பட்ட இலக்காகக் காணப்படுகிறது.



> 2018 ஆம் ஆண்டில் அடைந்துள்ள வளர்ச்சி கண்டு நாம் திருப்தியடையும் அதேவேளை, எமது இலக்குகளை நடுத்தர காலப்பகுதியிலும், நீண்ட காலப்பகுதியிலும் தொடர்ந்தும் அடைந்து கொள்வதற்காக செயற்பட வேண்டும். நாடு தழுவிய ரீதியில் நிலையான சக்தி வலு உருவாக்க முறைகளைச் செயற்படுத்தும் கட்டமைப்புக்களை வர்த்தக மட்டத்தில் உருவாக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை மிகவும் மகிழ்ச்சியுடன் உங்களிடம் சமர்ப்பிக்கும் இந்த வேளையில், சவால்கள் நிறைந்த அதேவேளை, பல சந்தர்ப்பங்களும் நிறைந்த ஒரு வருடத்தில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்குத் (இ.நி.வ.அ.ச.) தலைமை தாங்கியமை தொடர்பாக நான் பெருமையடைகிறேன்.

## நிலையான சக்தி வலு புரட்சியின் முன்னோடியாக செயற்படுதல்

இலங்கையில் நிலையான சக்தி வலு புரட்சியை முன்னெடுத்து வருவதில் முன்னோடியாகச் செயற்பட்டு வரும் அதேவேளை, ஒரு அரச நிறுவனம் என்ற வகையில் கண்காணிப்புக்களை மேற்கொண்ட நிறுவனமாகவும் இ.நி.வ.அ.ச. திகழ்ந்து வருகிறது. இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு கோட்பாடுகளில் ஒன்றாக, செயற்திறன் மிக்க சக்தி வலு பயன்பாட்டை நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தல் மற்றும் நிலையான சக்தி வலு வளங்களை அடையாளம் கண்டு அவற்றை செயற்திறனுடனும் சூழலுக்குப் பாதிப்பின்றியும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதும் நோக்கமாக அமைந்திருந்தன. எமது சகல செயற்பாடுகளும் சக்தி வலு பயன்பாட்டின் செயற்திறனை அதிகரிக்கும் வகையில் அமைந்திருந்தது. விசேடமாக, சக்தி வலுவைப் பயன்படுத்தும் நபர்கள் மற்றும் நிறுவனங்களிடம் நாம் எமது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். அதேவேளை, பல்வேறு மீள் சுழற்சி சக்தி வலுக்களான சூரியக்கதிர், காற்று, நீர் மற்றும் உயிரியல் சக்தி வலு ஆகிய பிரிவுகளை தம்வசம் கொண்டுள்ள ஒரு நாடாக எமது தேசத்தை இத்துறையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் நாம் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றோம்.

## 2018 இன் மீள்பார்வை

தற்போதைய உலகளாவிய நடைமுறையான சக்தி வலு துறையில் காணப்படும் நிலையான சக்தி வலு நடவடிக்கைகளின் அபிவிருத்திக்காக பல்வேறு முன்னுரிமைகளை அரசாங்கம் வழங்கி வருகிறது. CoP21 பரிஸ் இணக்க ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு அமைய, ஐக்கிய நாடுகள் சபை ஒன்றியத்தினால் வரையப்பட்ட கட்டமைப்பின் தேவைப்பாடான தேசிய அளவில் கணக்கிடப்பட்ட பங்களிப்புக்கள் (NDC) காலநிலை மாற்றப் பிரிவில் ஒரு கட்டாயப்படுத்தப்பட்ட இலக்காகக் காணப்படுகிறது. இதற்கமைய, சக்தி வலுத் துறையில் NDC இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிலையான சக்தி வலு தீர்வுகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் பெருமளவு முக்கியத்துவம் பெறுகின்றன. ஆய்வுக்குட்பட்ட ஆண்டில் இலங்கை தொடர்ந்து சக்தி வலு துறையில் தன்னிறைவை நோக்கிச் செயற்படும் ஈடுபாட்டை நன்கு காண்பித்துள்ளது. இதற்கமைய, நிலையான சக்தி வலு நடவடிக்கைகள் தற்போதைய மட்டத்தில் மிகவும் பொருத்தமாகவும், இலக்குகளை நோக்கிய வகையிலும் செயற்பட்டு வருகின்றன.

2018 ஆம் ஆண்டில் இ.நி.வ.அ.ச. யினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள், 2050 ஆம் ஆண்டில் சக்தி வலுத் துறையில் காபன் வெளியேற்றத்தை முற்றாக ஒழிக்கும் நீண்டகால இலக்கிற்கு வழிவகுத்துள்ளது. இ.நி.வ.அ.ச. யினால் செயற்படுத்தப்பட்ட நிலையான சக்தி வலு அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் இரண்டு முக்கிய அம்சங்கள் நோக்கப்படுகின்றன. இவை, நிரம்பல் பிரிவை முகாமைத்துவம் செய்தல் (SSM) மற்றும் கேள்விப் பகுதியை முகாமைத்துவம் செய்தல் (DSM) என்பனவாகும். எமது சகல நடவடிக்கைகளும், (SSM) மற்றும் (DSM) ஐ நோக்கியதாகவும், அதன் மூலம் எமது இலக்குகளை அடைந்து கொள்வதற்காக செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் உள்ளது. இந்த இரண்டு வழிகளிலும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடைந்து வருவதை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் அவதானித்து வருகின்றேன்.

## எதிர்கால நோக்கு

2018 ஆம் ஆண்டில் நாம் அடைந்துள்ள வளர்ச்சி கண்டு திருப்தியடையும் அதேவேளை, எமது இலக்குகளை நடுத்தர காலப்பகுதியிலும், நீண்ட காலப்பகுதியிலும் தொடர்ந்தும் அடைந்து கொள்வதற்காக செயற்பட வேண்டும். நாடு தழுவிய ரீதியில் நிலையான சக்தி வலு உருவாக்க முறைகளைச் செயற்படுத்தும் கட்டமைப்புக்களை வர்த்தக மட்டத்தில் உருவாக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. நிலையான சக்தி வலு துறையில் நாம் தொடர்ச்சியாக பெருமளவு புதிய உருவாக்கங்களை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளோம். காலநிலை மாற்றத்திற்கு முகம் கொடுக்கும் நடவடிக்கைகளில் இது மிகவும் முக்கியமான பங்களிப்பைக் கொண்டிருப்பதனால், அதில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. காலநிலை மாற்றத்தை எதிர்த்து செயற்படும் மத்திய நிலையம் (C4) என்ற தொனிப்பொருளை ஆரம்பிப்பதன் மூலம், இதற்கான ஆரம்பக்கட்ட முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளோம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இந்தத் திட்டத்தின் கீழ் முப்படையினரின் சக்தியையும், கட்டுப்பாடுகளையும் பயன்படுத்தும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. அதன் மூலம் நாட்டின் சக்தி வலு பயன்பாட்டு செயற்திறன் அபிவிருத்தி நடவடிக்கைகளில் கணிசமான அளவு வளர்ச்சியை அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்தப் புதிய நுட்பத்தின் மூலம், எமது முப்படையின் திறமை மிக்க உத்தியோகத்தர்கள், மேலும் சக்தி பெற்று, நிலையான சக்தி வலு இலக்கினை அடைந்துகொள்ள முன்னோடிகளாக தலைமைதாங்கிச் செயற்படுவார்கள். உலகிற்கே ஒரு எடுத்துக்காட்டான இந்தச் சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது, காலநிலை மாற்றத்தை எவ்வாறு சமாளிப்பது என்பதை வெளிப்படுத்தலாம் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

## நன்றி நவிலல்

இந்த வேளையில், மின்வலு மற்றும் சக்தி வலு அமைச்சின் சகல அங்கத்தவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களில் முக்கியமாக கௌரவ அமைச்சர், கௌரவ இராஜாங்க அமைச்சர் மற்றும் செயலாளர், அமைச்சின் உத்தியோகத்தர்கள் உட்பட தொடர்புடைய அனைவரும், எமக்கு வருடம் முழுவதும் பெற்றுக்கொடுத்த வழிகாட்டல் மற்றும் உதவிகளுக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், இ.நி.வ.அ.ச. இன் பணிப்பாளர் சபை மற்றும் முக்கிய அதிகாரிகளுக்கும் இந்த வேளையில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், அவர்களது பெறுமதிமிக்க கருத்துக்கள் மற்றும் யோசனைகள் மூலமும் இ.நி.வ.அ.ச. குழுவின் அனைத்து அங்கத்தவர்களினது கடின உழைப்பு, ஈடுபாடு மற்றும் ஆர்வம் என்பனவற்றை இங்கு ஞாபகப்படுத்த விரும்பகிறேன். மேலும், எமது நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்ட ஆர்வமுடைய அனைவருக்கும், அவர்களின் தொடர்ச்சியான உதவிகளை வருடம் முழுவதும் பெற்றுக் கொடுத்தமைக்கு நான் நன்றி கூற விரும்புகின்றேன். ஒரு குழுவாக இணைந்து செயற்படுவதன் மூலம் எமது நாட்டை சவால்களில் இருந்து வெற்றிகரமாக மீட்டெடுத்து நிலையான சக்தி வலுவை நோக்கிய ஒரு பயணத்திற்கு இட்டுச்செல்ல முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.



**கீர்த்தி விக்ரமரத்ன**
தலைவர்

# அடையப் பெற்ற மீள் எரிசக்தி மின் உற்பத்தித் திறன்

# 750MW



எமது நாட்டின் பெறுமதிமிக்க மூலோபாய வளங்களான சூரிய ஒளி, காற்று, நீர் மற்றும் உயிரியல் சக்தி வலு என்பனவற்றை மேம்படுத்தி, அவற்றில் உபாயகரமான முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம். அதன் மூலம் இலங்கையை சூழல் மாசற்ற, நிலையான மற்றும் உள்நாட்டிலேயே திரட்டக்கூடிய சக்தி வலு தீர்வுகளைக் கொண்ட எதிர்காலத்தை நோக்கியதாக அமைந்திருக்கும்.

## பல்வேறு செயற்பாடுகள் நிறைந்த மற்றுமொரு வருடத்தின் இறுதியை நாம் அடைந்துள்ளோம். இ.நி.வ.அ.ச. யின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் 2018 ஆம் ஆண்டில் நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பெறுபேறுகளை உங்களிடம் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் நிலையான சக்தி வலு புரட்சியை மேற்கொள்வதில் ஒரு முன்னோடியாகவும், பொறுப்புடைய நிறுவனமாகவும் இ.நி.வ.அ.ச. செயற்பட்டு வருகிறது. எமது நாட்டின் பெறுமதிமிக்க மூலோபாய வளங்களான சூரிய ஒளி, காற்று, நீர் மற்றும் உயிரியல் சக்தி வலு என்பனவற்றை மேம்படுத்தி, அவற்றில் உபாயகரமான முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம். அதன் மூலம் இலங்கையை சூழல் மாசற்ற, நிலையான மற்றும் உள்நாட்டிலேயே திரட்டக்கூடிய சக்தி வலு தீர்வுகளைக் கொண்ட எதிர்காலத்தை நோக்கியதாக அமைந்திருக்கும். அத்துடன், தற்போதைய சக்தி வலு பயன்பாட்டை செயற்திறனுடன் மேற்கொள்ளும் திட்டங்களையும் நாம் கொண்டுள்ளோம். அதற்கமைய தேவையான ஆய்வு மற்றும் அபிவிருத்தி ஏற்பாடுகள், அறிவு பரிமாற்றச் செயற்பாடுகள் மூலம் புதுவிதமான நவீன சக்தி வலு தீர்வுகளையும், நடைமுறைகளையும் அறிமுகப்படுத்தி நாட்டிற்கு நிலையான சக்தி வலு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கமாகும்.

### நம்பிக்கை மிகுந்த வருடம்

நிரம்பல் துறையின் சிறந்த முகாமைத்துவத்துடன் (SSM), எரிபொருள் பயன்பாட்டிற்கு மாறாக, மீள் சுழற்சி சக்தி வலு உருவாக்கல் நடவடிக்கைகளால் 2020 ஆம் ஆண்டில் மொத்த மின் சக்தி உற்பத்தியில் 20% மாற்று வழிகள் மூலம் உற்பத்தி செய்ய நாம் எதிர்பார்க்கின்றோம். அதேவேளை, கேள்விப் பகுதியின் முகாமைத்துவத்தை நோக்கினால் (DSM), அதில் நாம் மொத்த சக்தி வலு பயன்பாட்டை 10% இனால் குறைப்பதற்கு 2020 ஆம் ஆண்டில் பல்வேறு சக்தி வலு பாதுகாப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 2018 ஆம் ஆண்டு இ.நி.வ.அ.ச. வுக்கு வெற்றிகரமான ஒரு ஆண்டாக அமைந்திருந்தது என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 2017 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 653.72 மெகாவொட் மீள் சுழற்சி சக்தி வலு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் 749.86 மொகாவொட் மீள் சுழற்சி சக்தி வலுவை உற்பத்தி செய்ய முடிந்துள்ளது.

### எதிர்காலத்தை நோக்கிய பயணம்

காலநிலை மாற்றம் மற்றும் எதிர்கால சக்தி வலு தேவைப்பாடு ஆகிய இரண்டு விடயங்களிலும் முழு உலகமும் கடுமையான சவால்களை எதிர்நோக்கி வருகின்றன. இதனடிப்படையில், இலங்கை, நிலையான சக்தி வலு மூலோபாயங்களைப் பயன்படுத்துவதில் சிறப்பாகப் பணியாற்றி, தேசிய மற்றும் சர்வதேச இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் (SDG இலக்கு 5 - பால் சமத்துவம்) திட்டத்திற்கமைய, புதியதொரு வேலைத் திட்டத்தின் மூலம் நிலையான அபிவிருத்திக் கோட்பாடுகளின் அடிப்படையில் சக்தி வலு துறையில் மகளிரை வலுப்படுத்தும் நீண்டகால வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தை நோக்கிய வேலைத்திட்டங்களான தொழில்நுட்பம், கொள்கைகள், உபாய நுட்பங்கள், ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி போன்ற துறைகளிலும், விளக்கமளிப்பு வேலைகளிலும் இ.நி.வ.அ.ச. தொடர்ந்து ஈடுபட்டு வரும். தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் மூலம் சிறந்த பெறுபேறுகளை அடையப்பெற்று வருகின்றன. அதேவேளை, எதிர்கால நடவடிக்கைகள் மூலமும் எதிர்வரும் வருடங்களில் மிகச் சிறந்த அனுகூலங்களை அடைந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அதேபோன்று, அரசாங்கம் தொடர்ந்தும் எமக்கு சக்தி வலு துறையில் நிலையான தன்மையைப் பேணுவதற்கு முழுமையான பங்களிப்பையும், ஆதரவுகளையும் பெற்றுக்கொடுக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

### நன்றி தெரிவித்தல்

கௌரவ அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் செயலாளர் உட்பட மின்வலு மற்றும் சக்தி வலு அமைச்சின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில், எமது நடவடிக்கைகளில் அவர்களின் பூரண ஆதரவுகள் மிகவும் உறுதுணையாக இருந்தது. இ.நி.வ.அ.ச. இன் தலைவர் மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இ.நி.வ.அ.ச. ஒரு குழுவாகச் செயற்பட்டு சிறந்த பெறுபேறுகளை அடைந்து கொள்ள, குழுவின் திறமையான அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய ஊழியர்களே காரணமாக இருந்தார்கள். அரச துறையில் இவ்வாறு கடுமையாகச் செயற்பட்டு வரும் அவர்களுக்கு நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எமது இலக்குகளை அடைந்துகொள்வதில் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்ட ஆர்வமுடைய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நிலையான சக்தி வலுவை நோக்கிய எமது பயணம் ஒரு நீண்ட தூரமாக இருந்தாலும், இ.நி.வ.அ.ச. மட்டுமன்றி சகல ஆர்வமுடையோரையும் அரவணைத்துச் செல்லும் போது ஒரு தேசம் என்ற ரீதியில் இலங்கைக்கு எதிர்காலத்தில் பல்வேறு பெரிய சாதனைகளை நிலைநாட்ட முடியுமென நான் எதிர்பார்க்கின்றேன்.



**ரஞ்சித் சேபால**
**பணிப்பாளர் நாயகம்**

# முகாமைத்துவ சபை

**திரு. கீர்த்தி விக்ரமரட்ன**
தலைவர் - இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

**செல்வி கே. எம். மாலினி குமாரிஹாமி**
மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள்) மின்வலு மற்றும் மீள் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு

**செல்வி ஐ. ஜே. அபேரத்ன**
பணிப்பாளர் (வர்த்தக மற்றும் R&D) கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு

**திரு. பி. என். தமிந்த குமார**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**திரு. ஜீ. விஜித நந்த குமார்**
மேலதிகச் செயலாளர் - காணி அமைச்சு

**திரு. டீ. வீ. பந்துலசேன**
மேலதிகச் செயலாளர் - விவசாய அமைச்சு

**திரு. கே. பீ. குருகே**
பிரதம கணக்காளர் - பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**திரு. டப்ளியூ. ரீ. எச். ருச்சிர விதான**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

**திரு. டீ. டீ. ஆரியரத்ன**
மேலதிகச் செயலாளர் - நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு

**செல்வி தேஜானி திலகரத்ன**
மேலதிகச் செயலாளர் - (நிர்வாகம்) நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு (2018 பெப்ரவரி 09 முதல்)

**திரு. ஏ. எம். ஆர். ஜே. கே. ஜயசிங்க**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு

**திரு. எஸ். தர்ஷன்**
உதவிப் பணிப்பாளர் - நிதி அமைச்சு

**திரு. தமித்த குமாரசிங்க**
பணிப்பாளர் நாயகம் - இலங்கையின் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு

**திரு. டீ. டீ. ஆனந்த நாமல்**
நியமன உறுப்பினர்

**திரு. ஈ. எம். பியசேன**
நியமன உறுப்பினர் (2018 நவம்பர் 09 முதல்)

**திரு. சரத் ஜயதிலக**
நியமன உறுப்பினர்

**திரு. ஹிரான் அஜித் கருணாரத்ன**
நியமன உறுப்பினர்

**திரு. ஏ. எம். சீ. பெரேரா**
நியமன உறுப்பினர்

**திரு. ஜீ. மஹேந்திர பெரேரா**
நியமன உறுப்பினர்

**செல்வி பர்ஸானா அனீப்**
சட்டத்தரணி, நியமன உறுப்பினர்

**திரு. சந்திரசிரி செனவிரத்ன**
சட்டத்தரணி, நியமன உறுப்பினர் (2018 நவம்பர் 09 முதல்)

**திரு. கிஷான் நாணயக்கார**
நியமன உறுப்பினர்

**திரு. எம். இஸ்மாயில் நஸார்**
நியமன உறுப்பினர் (2018 நவம்பர் 09 முதல்)

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு இணைப்பாளர்

**திரு. எஸ். தர்ஷன்**
தலைவர்

**செல்வி கே. எம். மாலினி குமாரிஹாமி**
உறுப்பினர்

**செல்வி பர்ஸானா அனீப்**
உறுப்பினர்

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அவதானிப்பாளர்

**செல்வி எச். ஏ. டீ. சாந்தனி**
கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்

**செல்வி பி. ஏ. டீ. ஏ. அபேவர்தன**
மின்வலு மற்றும் மீள் புத்தாக்க சக்தி அமைச்சு



சகல மக்களிடத்திலும் நிலையான சக்தி வலுவை பரந்தளவில் இட்டுச் செல்வதற்கும், சகல விதமான மீள் சுழற்சி சக்தி வலு வளங்களை மக்கள் அடைந்து கொள்வதையும் நாம் பெருமளவில் ஊக்குவித்து வருகிறோம். இதன் அடிப்படையில் நீர் மின்சாரம், காற்றின் மூலம் மின்சார உற்பத்தி, உயிரியல் வாயு மற்றும் சூரியக் கதிர்கள் மூலம் சக்தி வலுவை உருவாக்குதல் போன்ற நிலையான அபிவிருத்தித் திட்டங்களால் மக்கள் இலகுவாக சக்தி வலுவை அடைந்து கொள்ளவும், எதிர்காலத்தில் தொடர்ந்தும் சக்தி வலுவைப் பெற்றுக் கொள்ளவும், காபன் வெளியேற்றத்தைக் குறைக்கவும், அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியையும், சௌபாக்கியத்தையும் அடைந்துகொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம்.



# கூட்டிணைப்பு ஆளுமை

## கூட்டிணைப்பு ஆளுமை

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை யின் (இ.நி.வ.அ.ச.) முகாமைத்துவ சபையானது, சமத்துவம், நியாயம், பக்கச் சார்பின்மை, தெளிவு மற்றும் பொறுப்பு ஆகிய கொள்கைகளை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் ஒரு நிறுவனமாகும். இந்தக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளே இ.நி.வ.அ.ச. யின் அடிப்படையாக உள்ளது. அதன் மூலம், சகல ஆர்வம் காட்டுவோருக்கிடையிலும் சிறந்ததொரு பிணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நிலையான சக்தி வலு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இணைந்த சூழல் ஒன்றில் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

அதிகார சபையின் அனைத்துச் செயற்பாடுகளும், சகல இலங்கையர் நலன்களையும் கருத்திற் கொண்டவாறு, நியாய தர்மங்களைப் பின்பற்றிய வகையில் செற்படுத்தப்படும். இதற்காக உரிய பதவிகளில் தகுதியானவர்கள் இணைக்கப்பட்டு, அவர்களை ஈடுபாட்டுடன் செயற்படச் செய்து, முறையான கட்டமைப்புகள் மற்றும் தகவல் பரிமாற்றங்களை மேற்கொண்டு, அரச கொள்கைகளை பின்பற்றும் வகையில் முன்னெடுக்கப்படும்.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை யின் (இ.நி.வ.அ.ச.) முகாமைத்துவ சபையானது, சமத்துவம், நியாயம், பக்கச் சார்பின்மை, தெளிவு மற்றும் பொறுப்பு ஆகிய கொள்கைகளை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் ஒரு நிறுவனமாகும். இந்தக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளே இ.நி.வ.அ.ச. யின் அடிப்படையாக உள்ளது. அதன் மூலம், சகல ஆர்வம் காட்டுவோருக்கிடையிலும் சிறந்ததொரு பிணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நிலையான சக்தி வலு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இணைந்த சூழல் ஒன்றில் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அதிகார சபையின் அனைத்துச் செயற்பாடுகளும், சகல இலங்கையர் நலன்களையும் கருத்திற் கொண்டவாறு, நியாய தர்மங்களைப் பின்பற்றிய வகையில் செற்படுத்தப்படும். இதற்காக உரிய பதவிகளில் தகுதியானவர்கள் இணைக்கப்பட்டு, அவர்களை ஈடுபாட்டுடன் செயற்படச் செய்து, முறையான கட்டமைப்புகள் மற்றும் தகவல் பரிமாற்றங்களை மேற்கொண்டு, அரச கொள்கைகளை பின்பற்றும் வகையில் இவை முன்னெடுக்கப்படும். அதிகார சபை நடவடிக்கைகள் சிறந்த தரத்திலான செயற்பாடுகளை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுவதனாலும், இலங்கையர் அனைவரினதும் நலன்களைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படுவதனாலும், இதற்குக் கிடைக்கும் ஈடுபாடு மற்றும் ஆதரவுகள் என்பன அபரிமிதமாகக் காணப்படுகின்றது. அத்துடன், சரியான அலுவலர்களை உரிய இடத்தில் செயற்படுத்துதல், முறையான கட்டமைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் என்பன திறம்பட செயற்படுவதனால் அரச கொள்கைகளுக்கு ஏற்ப பணியாற்ற இலகுவாக இருக்கிறது.

### முகாமைத்துவ சபை

முகாமைத்துவ சபையானது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தின் கீழ், இக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புக்களுக்கு முழுமையாக பொறுப்புக் கூற வேண்டியவர்களாவர். இது, இந்த விஷயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவரால் வழிநடத்தப்படுகிறது.

### பொறுப்பு

குறித்த சட்டமூலத்தினால் வழங்கப்பட்டுள்ள சகல இலக்குகளையும் அடைந்து கொள்வதில் முகாமைத்துவ சபை முழுமையாகப் பொறுப்புக்கூற வேண்டியுள்ளது. அதற்கு மேலதிகமாக, சட்டமூலத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பன முறையாகச் செயற்படுவதை உறுதிப்படுத்தல், நிதித் தகவல்களை சரிவர சமர்ப்பித்தல் போன்ற விடயங்களுக்கும் பொறுப்பாகவுள்ளது. அதிகார சபையின் நடவடிக்கைகள், சபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் முன்னெடுக்கப்படும். அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், சபையின் பொதுவான இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் தொலைநோக்கு என்பனவற்றைத் தீர்மானிப்பவராகவும் இருப்பார். சபையானது, மற்றுமொரு உப குழுவினால் ஆதரவு

வழங்கப்பட்டு வருகிறது. இந்த உப குழு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு என்று பிரிக்கப்பட்டுள்ளது. இது பிரதானமாக, அதிகார சபையின் நிதிசார் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து வருகிறது. மேலும், சபையானது, மற்றுமொரு ஆலோசனைக் குழுவினால் உதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆலோசனைக் குழு, தேவைக்கேற்ப பணியில் அமர்த்தப்படும். கடுமையான தொழிற்துறை அறிவு மற்றும் தொழில் வல்லமை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே இவ்வாறான குழுக்கள் பணியில் அமர்த்தப்படும்.

சகல விதமான பொருட்கள் கொள்வனவுப் பணிகளும், அரச பொருட்கள் கொள்வனவு வரையறைகளை கடுமையாகப் பின்பற்றியதாக, அதற்கு அமைந்த வகையில் சபையினால் முன்னெடுக்கப்படுகின்றன. சுயாதீன தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க, அதிகார சபை அதிகாரிகளினால் இவை முன்னெடுக்கப்படும். கொள்வனவு செய்யும் பொருட்களின் பெறுமதிக்கு அமைய இரண்டு பொருட்கள் கொள்வனவு குழுக்கள் இதற்காக செயற்பட்டு வருகின்றன.

## உள்ளடக்கம்

சபையில் 21 அங்கத்தவர்கள் அடங்கியிருப்பர். இவர்களில் 12 பேர் முன்னாள் உத்தியோக அங்கத்தவர்களாவர். மேலும், நியமனம் பெற்ற 09 அங்கத்தவர்களுடன் தலைவரும் அடங்கியிருப்பார்.

## சபைக் கூட்டங்கள்

சபைக் கூட்டங்களை மாதாந்த அடிப்படையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கூட்டங்களின் போது, சபையானது, அதிகார சபையின் உபாயகரமான நடவடிக்கைகளையும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பிரதிபலன்களை மீளாய்வு செய்வதும், தற்போதைய நடைமுறை வேலைத் திட்டங்களின் வளர்ச்சி மற்றும் அடைந்துள்ள பெறுபேறுகள் பற்றியும், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மூலதனச் செலவினங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் பற்றியும் மீளாய்வு செய்யும். இந்தக் கூட்டங்களின் போது, அதிகார சபை அங்கத்தவர்கள் புதிய திட்டங்களை முன்வைக்கவும் இந்தக் கூட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன்போது அதிகார சபையின் இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடிய முன்மொழிவுகள் கவனத்திற் கொள்ளப்படும். சபை உறுப்பினர்களுக்கு குறித்த ஒவ்வொரு கூட்டத்திற்கும் முன்னரே அதில் கலந்துரையாடப்படும் விடயங்கள் பற்றிய தகவல்கள் அனுப்பி வைக்கப்படும். 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கூட்டங்களின் போது முகாமைத்துவ சபையின் பங்கேற்பு பின்வருமாறு அமைந்திருந்தது:

| இலக்கம் | கூட்டத் திகதி | பங்கேற்பு |
|---|---|---|
| 1 | 2018 ஜனவரி 18 | 12 |
| 2 | 2018 பெப்ரவரி 21 | 14 |
| 3 | 2018 மார்ச் 21 | 13 |
| 4 | 2018 மே 17 | 13 |
| 5 | 2018 ஜுன் 19 | 13 |
| 6 | 2018 ஜுலை 31 | 13 |
| 7 | 2018 செப்டம்பர் 19 | 11 |
| 8 | 2018 ஒக்டோபர் 08 | 11 |
| 9 | 2018 டிசம்பர் 10 | 13 |

## சட்டத் தேவைகளுக்கு இணங்குதல்

சட்டங்கள், உரிய முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகள் என்பனவற்றை தமது ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் கடுமையாகப் பின்பற்றும் நடைமுறைகளை முகாமைத்துவ சபை கொண்டுள்ளது. அது, அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் இவ்வாறான அனைத்து ஆவணங்களையும் பரீட்சித்து அவற்றுக்கு ஏற்ற வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. மேலும், சபையானது, அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் இலங்கையின் அரச கணக்கியல் தரங்களுக்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படுவதையும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் சமர்ப்பிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துகிறது.

இடர் முகாமைத்துவம் என்பது, சிறந்த முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கியமான விடயமாகும். இதனைக் கருத்திற் கொண்டு சில பொதுவான இடர்களையும், நிலையான சக்தி வலு துறைக்கான இடர்களையும் அடையாளம் கண்டு இ.நி.வ.அ.ச. செயற்பட்டு வருகிறது.

விசேடமாக, இத்துறைக்கே உரிய இடர்கள் எனக் கருதுகையில், சக்தி வலு திறன் மேம்பாடு, மீள் சுழற்சி சக்தி வலு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சூழல் சம்பந்தமான கொள்கைகள் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. முகாமைத்துவக் குழு இவற்றில் கூடுதல் அவதானம் செலுத்தி வருகிறது. எனவே, இ.நி.வ.அ.ச. யின் சிரேஷ்ட முகாமைத்துவம், இந்தப் பிரிவுகளின் இடர் முகாமைத்துவத்தை உன்னிப்பாகக் கவனம் செலுத்தி சிறந்த நிதி மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டங்களின் செயற்திறனையும், செயற்பாடுகளையும் பெறுபேறுகளையும் உள்ளகக் கணக்காய்வாளர்களும், முகாமைத்துவக் குழுவும் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வது சபையின் ஒரு கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும்.

## இடர் கலாசாரம்

முகாமைத்துவக் குழு தமது செயற்பாடுகளை சரிவர அடையாளம் கண்டு, இடர்களை உரியவர்களிடம் கையளிப்பதில் சீரான வழிமுறையொன்றை மேற்கொண்டுள்ளது. நெறிமுறைக் கொள்கைகளுக்கான உறுதிப்பாட்டைப் பிரதிபலிப்பதில் முகாமைத்துவமானது, அனைத்து ஆர்வம் காட்டுவோரையும் உள்ளடக்கியே தமது தீர்மானங்களை மேற்கொண்டது. தலைமைத்துவத்துடன் இணைந்து எமது ஊழியர்களும் நியாயமான கொள்கைகளை செயற்படுத்துவதை நன்கு உணர்ந்து அவற்றைப் பின்பற்றி செயற்பட்டு வருகின்றனர்.

## இடரை இனங்காணல்

வெளிச் சூழல்களை நன்கு அவதானித்து வருவதன் மூலம் ஏற்படக்கூடிய இடர்களை சபையானது எப்போதும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. மேலும், இந்த இடர்களை வகைப்படுத்தி அவற்றை சர்வதேச சக்தி வலு துறைக்கு உரியவை மற்றும் நாட்டிற்கு மட்டுமே பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என்ற வகையில் பிரித்து முறையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீர்மானிக்கின்றது. இதற்கு மேலதிகமாக, தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது, நாட்டின் கொள்கை ரீதியான சூழலை அவதானித்து, தேசியக் கொள்கைகளினால் ஏற்படக்கூடிய பாதிப்பு மிகக் குறைந்த திட்டங்களையே தெரிவு செய்வதற்கு எப்போதும் முன்வருகிறது.

## இடர் முகாமைத்துவம்

சபையானது, மீள் சுழற்சி சக்தி வலு வளங்களையும் சக்தி வலுவின் சேதங்களை குறைப்பதையும் முக்கியமாக் கொண்டுள்ளது. அது, குறைந்து வரும் எரிபொருள் விலையை ஒரு முக்கிய இடராகக் காண்கிறது. இது மீள் சுழற்சி சக்தி வலுவுக்கு மாற்றுப் பொருளாகச் செயற்படக்கூடும் என்பதோடு, செலவினங்களுடன் ஒப்பிடுகையில், இதன் மூலம் சக்தி வலுவைப் பயன்படுத்துவோருக்கு எந்தவிதமான வித்தியாசமும் ஏற்படாத நிலை தோன்றினால், சக்தி வலுவைப் பயன்படுத்துபவர் அதனை வீணடிப்பதற்கு இது காரணமாக அமையலாம்.

இதற்கமைய இ.நி.வ.அ.ச. இடர் முகாமைத்துவ உபாய வழிமுறையொன்றைச் செயற்படுத்தி, நிலையான சக்தி வலு சந்தையை முடிந்தவரை குறைந்த செலவினத்துடன் செயற்படுத்துவதற்கும், அதன் மூலம் மிகக் குறைந்த எரிபொருள் விலை நிலவும் வேளைகளிலும் கூட நிலையான சக்தி வலு முறைகளுக்கு உள்ள கேள்வி குறையாதவாறு பேணும் வகையில் செயற்படுகிறது. இ.நி.வ.அ.ச. யின் ஆதரவின் ஊடாக மீள் சுழற்சி சக்தி வலுவை குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனூடாக மின்சாரக் கட்டணங்களில் இதுவரை காலம் காணப்படாத ஒரு விலை வீழ்ச்சி காணப்படுகின்றது. சூரிய சக்தி மின்சாரத்துறையை முன்னேற்றுவதற்காக அதிகளவில் புதிய நிறுவனங்களை

துறைக்குள் வரவழைப்பதன் மூலம் இத்துறையில் போட்டியை ஏற்படுத்தி, அதன் மூலம் சேவைத் தரங்களை அதிகரித்து, அதேவேளை கூரையில் பொருத்தப்படும் சூரிய மின் உற்பத்தித் தொகுதிகளை அதிகரித்து, சூரிய மின் உற்பத்திகளை குறைந்த செலவில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று, சக்தி வலு சேவை வழங்கும் இந்த நிறுவனங்களுக்கு உதவி வழங்கி முன்னேற்றும் வகையில் செயற்படுவதன் மூலம் அவர்கள் தொடர்ந்தும் இத்துறையில் பணியாற்றுவதற்கும், செயற்திறன் மிக்க சக்தி வலு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் குறைந்த செலவினத்தில் மின்சாரத்தைப் பெற்றுக்கொடுக்கவும் குறைந்த எரிபொருள் விலையிலும் கூட செயற்பட வைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட இரண்டு பாதகமான ஆண்டுகளைவிட சிறந்த மழை வீழ்ச்சி காணப்பட்டதன் மூலம் நீர் மின்சார உற்பத்தி சிறந்த வளர்ச்சி கண்டது. எவ்வாறாயினும், அதிகரித்த மழை வீழ்ச்சியினால், சூரிய மின் உற்பத்தி பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அது அவ்வாறு நடைபெறாமல் இருந்தமை ஒரு மீள் சுழற்சி சக்தி வலு துறைக்கு நிம்மதியைப் பெற்றுத்தரக்கூடிய விடயமாகக் காணப்பட்டது.

## வளங்களை இழக்கும் இடர்

நாட்டின் பெறுமதி மிக்க சக்தி வலு வளங்கள், மனிதர்களின் பிழையான நடவடிக்கைகள் மற்றும் காணிப் பிரயோகங்கள் காரணமாக, கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளன. காற்றின் மூலம் பாரியளவில் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய பிரதேசங்கள், மனிதர்களின் குடியேற்றம் காரணமாக அந்த வாய்ப்புக்களை இழந்து வருகின்றன. அதேபோன்று, சிறந்த நீர் மின்சார உற்பத்திப் பிரதேசங்களாகக் காணப்பட்ட மேலும் சில பகுதிகள் தற்போது காடழிப்பு மற்றும் மனிதர்களின் குடியேற்றங்களினாலும், நிலங்களைக் கைப்பற்றுவதனாலும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக, பெருமளவிலான பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, மழை வீழ்ச்சிகளில் ஏற்பட்ட வேறுபட்ட தன்மை மற்றும் காலநிலை மாற்றங்கள் போன்றவற்றின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றை மேலும் வலுப்படுத்தும் வகையில், சிவில் சமூக நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள், மீள் சுழற்சி சக்தி வலு உற்பத்தித் திட்டங்கள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன. இ.நி.வ.அ.ச. யினால் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட மீள் சுழற்சி சக்தி வலு உற்பத்தித் திட்டங்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை தற்போது மூன்றாக அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலைமைகளினால், பெருமளவில் கிடைக்கவிருந்த சக்தி வலு நாட்டிற்கு கிடைக்காமல் போய்விட்டன.

## சக்தி வலு சேவைகளின் விலை குறைவு காரணமான இடர்

மின்சாரக் கட்டணங்கள் 2014 ஆம் ஆண்டில் 25% வீழ்ச்சியை எதிர்நோக்கின. இது, சக்தி வலு சேவைத் துறையில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இது, இத்துறையில் ஆர்வம் குறைவுக்கும், ஈடுபாட்டுக் குறைக்கும் காரணமாக அமைந்தது. தொழிற்சாலைகளின் மின் பயன்பாட்டிற்காக பகல் நேரங்களில் அறவிடப்பட்ட கட்டணங்கள் குறைவாகவே காணப்பட்டன. இதற்கு, உற்பத்தியின் விலை குறைவே காரணமாகும். இதனால், சக்தி வலுவை சேதமின்றி பயன்படுத்தும் ஈடுபாடு குறைவடைந்ததோடு, மின் சக்தியை செயற்திறனுடன் பயன்படுத்தும் தேவைப்பாடு மற்றும் அதற்காக சேவை வழங்கும் நிறுவனங்களின் தேவைப்பாடும் கடுமையாக குறைவடைந்தது. இதற்கு மேலதிகமாக, தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் விலைகளும் குறைவாகக் காணப்பட்டமையினால் இதன் தாக்கம் மேலும் அதிகரித்தது. எவ்வாறாயினும், சில தொழிற்துறை நிறுவனங்கள் தனது நிலையான தன்மைக்கான இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில், பாரியளவிலான சக்தி வலு செயற்திறன் அதிகரிப்பு வேலைத் திட்டங்களை மேற்கொண்டன. இதன் மூலம் கணிசமான அளவு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை, காபன் வெளியேற்றத்தைக் குறைத்து, செயற்பாட்டுச் செலவினங்களையும் குறைத்துக் கொண்டனர்.

## இடர் மேற்பார்வையும் மீளாய்வும்

சபையின் இடர் முகாமைத்துவப் பிரிவு நடவடிக்கைகளில் ஒன்றாக, உள்ளக மற்றும் வெளியகச் சூழல்களின் நிலைகளுக்கு ஏற்ப விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளில் காணப்படும் குறைபாடுகளை அடையாளம் காணுதல் முக்கிய அம்சமாகும். சிரேஷ்ட முகாமைத்துவமும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவும் இந்த மேற்பார்வை செயற்பாடுகளின் மொத்த பொறுப்புக்களையும் வகிக்கின்றன. இதற்கு மேலதிகமாக, மூன்றாம் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள், உள்ளகக் கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்படும் தொடர் கணக்காய்வுகள் என்பன மூலமும் சபையின் பல்வேறு பிரிவுகள் தொடர்ந்தும் கவனத்திற்குள்ளாகி வருகின்றன. இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளின் செயற்திறன், வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு, தற்போதைய நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



ஒரு விடயத்தை குறைந்தளவு சக்தியுடன் மேற்கொள்வதே, “சக்தி வலு செயற்திறன்” என்பதற்கு சிறந்த விளக்கமாகும். அதாவது, சேதங்களை முற்றாக ஒழிப்பதாகும். சக்தி வலு செயற்திறன் மூலம், பல்வேறு நன்மைகள் கிடைக்கும். அவற்றில், எமது வீட்டுச் செலவினங்களைக் குறைப்பது, முழு நாட்டினதும் பொருளாதாரச் செலவினங்களையும் குறைப்பது போன்ற நன்மை தரும்.




# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.), நாட்டில் நிலையான சக்தி வலு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் மத்திய செயற்பாட்டு நிறுவனமாகும்.

இ.நி.வ.அ.ச. யின் 2018 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள் யாவும், 2050 ஆம் ஆண்டில் காபன் வெளியேற்றத்தை முற்றாக ஒழிக்கும் நீண்டகால இலக்கை அடைந்துகொள்ளத் தேவையான பாதையை உருவாக்கும் நடவடிக்கைகளாக அமைந்திருந்தன.

இ.நி.வ.அ.ச. யினால் செயற்படுத்தப்படும் நிலைபெறுதகு சக்தி வலு அபிவிருத்தி நடவடிக்கைகளின் எதிர்வரும் அனைத்து வேலைத் திட்டங்களும், பின்வரும் இரண்டு எண்ணக்கருக்களுக்கு அமைவாக இரண்டு பிரதான அம்சங்களாக அமைந்திருக்கும்.

ஒவ்வொரு திட்டத்தின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயற்பாடுகளின் தகவல்கள் பின்வரும் பிரதான தலைப்புக்களின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில வேலைத்திட்டங்கள் பல்வேறு துறைகளையும் சார்ந்திருக்கின்றன. இதற்குக் காரணம், இந்த வேலைத்திட்டங்கள் நிதி வழங்கும் நிறுவனங்களின் வழிகாட்டல்களின் கீழ் அவர்களின் தொழில்நுட்ப / நிதிசார் உதவிகளுடன் மேற்கொள்ளப்பட்டமையாகும். இந்த வேலைத்திட்டங்களின் தகவல்கள் மற்றுமொரு பிரிவாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.

### ∞ வழங்கல் பிரிவு முகாமைத்துவம் (SSM)

எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டில் புதிய மீள் சுழற்சி சக்தி வலு உற்பத்தி வளங்கள் மூலம் மொத்த மின்சார உற்பத்தியில் 20% வரை உற்பத்தி செய்தல்.

### ∞ கேள்விப் பகுதி முகாமைத்துவம் (DSM)

சக்தி வலுவைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதன் மூலம் 2020 ஆம் ஆண்டில் மொத்த சக்தி வலு பயன்பாட்டை 10% ஆல் குறைவடையச் செய்தல்.

### ∞ நிரம்பல் பிரிவில் முகாமைத்துவ நடவடிக்கைகள்

நிரம்பல் பகுதி முகாமைத்துவ நடவடிக்கைகளின் அடிப்படையில் வளங்களைப் பிரித்துக் கொடுப்பதிலேயே முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டது. இந்த நடைமுறைகளில் பிரதானமாக தேசிய மீள் சுழற்சி அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேம்படுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டது. நேரடி ஈடுபாட்டின் மூலமாக வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தும் தன்மையை அதிகரித்து அரசாங்கம் முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு "சக்தி வலு பூங்காக்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்களையும் முன்னெடுத்துள்ளது. இதன் அடிப்படையில், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பரீட்சார்த்த வேலைத் திட்டங்கள் போன்ற மேலும் பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை காலம் அபிவிருத்தி செய்யப்படாத வளங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்காகவும் சபையினால் நேரடி ஈடுபாடு காண்பிக்கப்பட்டது.

#### (அ) மீள் சுழற்சி சக்தி வலு வள ஒதுக்கீடு

மீள் சுழற்சி சக்தி வலு வேலைத்திட்டங்களுக்காக வளங்களைப் பெற்றுக்கொடுப்பதில் அரசாங்க அனுமதி (சக்தி வலு சான்றிதலுக்கு பகுதி அங்கீகாரம்) பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை வருடம் முழுவதும் இடம்பெற்றுள்ளது. சட்டமூலத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய ஒவ்வொரு வேலைத் திட்டத்திற்குமான அனுமதி வழங்கல் செயற்பாடுகளும் முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்தன.

வேலைத் திட்டங்களை மேற்கொள்வதில் மிக முக்கிய அம்சம் காணிகளைப் பெற்றுக்கொள்வதாகும். இது வருடம் முழுவதும் சிறந்த வளர்ச்சியைக் காண்பித்துள்ளது. வேலைத்திட்ட மேம்பாட்டாளர்கள் இ.நி.வ.அ.ச. சட்டத்தின் 38வது பிரிவு விதிகளுக்கு அமைய காணிகளைப் பெற்றுக்கொள்ள உதவி வழங்கப்படும். மூன்று நீர் மின்சார வேலைத் திட்டங்களுக்காக காணிகள் கையேற்கப்பட்டன. அவற்றில் ஒரு வேலைத்திட்டம் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளது.

வேலைத் திட்டங்களுக்கான அனுமதிகளைப் பெற்றுக் கொடுக்கும் வழிமுறைகளைத் துரிதப்படுத்தும் நோக்குடன் உரிய அரச அதிகாரிகளுக்கு இரண்டு நாள் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இதில் பிரதேச செயலாளர்கள், காணி ஆணையாளர் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## பகுதி அனுமதிகளை வழங்குதல் (PA)

**5.68** MW
நீர் மின்சாரத் திட்டங்கள்

**40** MW
சூரிய மின் திட்டங்கள்

**10** MW
கடல் வழி சக்தி வலு திட்டங்கள்

**0.4** MW
கழிவுப்பொருள் வேலைத் திட்டங்கள்

**30** MW
காற்று வழி வேலைத் திட்டங்கள்

## சக்தி வலு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குதல் (EP)

**21** MW
சூரிய மின் திட்டங்கள்

**5.5** MW
நீர் மின் திட்டங்கள்

**10** MW
கழிவுப்பொருள் வேலைத் திட்டங்கள்

**20** MW
காற்று வழி வேலைத் திட்டங்கள்

### (ஆ) மீள் சுழற்சி சக்தி வலு பூங்காக்கள் - மீள் சுழற்சி சக்திவலு வேலைத் திட்ட அபிவிருத்தியில் புதிய முன்னெடுப்பு

மீள் சுழற்சி சக்தி வலு அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு புதிய மைல்கல்லாக, மீள் சுழற்சி சக்தி வலு பூங்காக்கள் உருவாக்கப்பட்டன. இந்தப் பூங்காக்களில் பெரியளவிலான சக்தி வலு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். அவற்றில், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, துரிதப்படுத்தப்பட்ட அனுமதி வழங்கல் கட்டமைப்புக்கள் உட்பட பல்வேறு வளர்ச்சிப் படிகளைக் கொண்ட நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வேலைத்திட்டத்திற்கான அனைத்து ஆரம்ப நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டதும், இந்தப் பூங்காக்கள் முதலீட்டாளர்களுக்காக திறந்து வைக்கப்படும். அவர்கள் இவற்றில் தமது நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முடியும். சக்தி வலு பூங்காக்கள், செயற்படுத்தத் தயாரான வேலைத் திட்டங்களை உருவாக்கும் ஒரு வழிமுறையாக அமைந்திருக்கும். இது தேசிய மீள் சுழற்சி சக்தி வலு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஒரு மைல்கல்லாகக் காணப்படும்.

### சியம்பலாண்டுவயில் சூரிய மின்சக்திப் பூங்கா

முதலாவது சூரிய மின்சாரப் பூங்கா மொனராகல மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட உள்ளது. அது, சுமார் 100 Mw மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. மொனராகல மாவட்ட செயலாளர் மற்றும் வன பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்த இந்த நடவடிக்கைகள் மூலம் பொருத்தமான காணித் துண்டுகளை இ.நி.வ.அ.ச. அடையாளம் கண்டுள்ளது. வேலைத் திட்ட நடவடிக்கைகள் இ.நி.வ.அ.ச. மற்றும் இலங்கை மின்சார சபை என்பனவற்றின் இணைந்த நடவடிக்கையாக முன்னெடுக்கப்படும். ஆய்வுக்குட்பட்ட வருடத்திலேயே இந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், இதுவரை மொத்தம் 500 ஏக்கர்களை உள்ளடக்கிய வகையில் 10 காணித்துண்டுகள் இந்த வேலைத் திட்டத்திற்கென அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை மூலம் 148 GWh மின்சாரம் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்படும் தொகையில் வருடம் ஒன்றுக்கு ரூபா 3,383 மில்லியன் சேமிக்கப்படும்.

### பூநகரி சூரிய - காற்று கலப்பினப் பூங்கா

நாட்டின் வட பிராந்தியத்தில், விசேடமாக கடற்கரை சார்ந்த பிரதேசங்களில் சிறந்த காற்று மூலமான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை காணப்படுகின்றது. இதற்கமைய, பூநகரி பகுதி, பாரியளவிலான சூரியக் கதிர் மற்றும் காற்றின் மூலமான இணைந்த மின்சார உற்பத்திப் பூங்கா ஒன்றை உருவாக்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. “அவிபுவான ஆராய்ச்சி” என்பது காற்றின் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு சூழல் மதிப்பீட்டு ஆராய்ச்சித் திட்டமாகும். இது, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து, அதன் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது. அவிபுவானா ஆராய்ச்சி மூலம், பிரதேசத்தில் வாழும் பறவை இனங்கள் பற்றிய விஞ்ஞான ரீதியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். காற்றின் மூலம் மின்சார உற்பத்தியினால் பாதிக்கப்படும் அனைத்து விலங்கு இனங்களிலும் பறவைகளே பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றன. பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டப் பகுதிகள் பெரும்பாலும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதோடு, இதற்காக காணிகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (இ) மீள் சுழற்சி சக்தி வலு வேலைத் திட்டங்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள்

மீள் சுழற்சி சக்தி வலு வேலைத் திட்டங்களை பாரியளவில் ஊக்குவிக்கும் வகையிலான இரண்டு பிரதான வேலைத் திட்டங்கள் பொது மக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவை, சூரிய பல சங்கிராமய மற்றும் சுலன் பல மெஹயும என அழைக்கப்படும்.

# செயற்திறன் மதிப்பாய்வுகள்



சியம்பலாண்டுவயில் சூரிய மின் பூங்காவுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பிரதேசம்

## சூரிய பல சங்கிரமய

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சூரிய பல சங்கிரமய வேலைத் திட்டமானது, பல்வேறு சமூக மட்டங்களிலுமுள்ள மக்களை மீள் சுழற்சி சக்தி வலு உற்பத்தி செயற்திட்டத்தில் ஈர்ப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இது, தற்போது சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுத்து வருகிறது. சூரிய மின்சாரத்தை, தேசிய மின்சக்தி வலையமைப்புடன் இணைக்கும் இந்த நடவடிக்கை, நெற்-மீற்றரிங், நெற்-எக்கவுன்டிங் மற்றும் நெற் பிளஸ் ஆகிய மூன்று திட்டங்களின் அடிப்படையில் செயற்படுகின்றன. 2018 ஆம் ஆண்டின் இறுதியின் போது, கூரையில் பொருத்தப்படும் சூரிய மின் உற்பத்தி வேலைத் திட்டத்தின் மூலம் 130 மெ.வொ க்கும் அதிகமாக பல்வேறு பிரிவினர்களினாலும் உருவாக்கப்பட்டுள்ளது. அரச கட்டடங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் வர்த்தக செயற்பாட்டு நிலையங்கள் மற்றும் ஏனைய பல்வேறு பிரிவுகளிலும் இந்தத் திட்டத்தைப் பிரபல்யப்படுத்தும் நடவடிக்கைகளில் இ.நி.வ.அ.ச. தொடர்ந்து கடுமையான ஈடுபட்டு வருகிறது. சேவை வழங்கும் நிறுவனங்களைத் தெரிவு செய்யும் போது, இ.நி.வ.அ.ச. மற்றும் இலங்கை தராதர அங்கீகார சபை (SLSI) என்பனவற்றினால் இணைந்து தயார் செய்யப்பட்ட தராதரங்களுக்கு அமைய, கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் உற்பத்தி சாதனங்கள் காணப்படுகின்றனவா என்பது பரிசோதனை செய்யப்பட்ட பின்ரே அனுமதி வழங்கப்படுகின்றது. இதற்கமைய வருட இறுதியின் போது 251 கூரையில் பொருத்தும் சூரிய மின் உற்பத்தி சேவை வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

## சூரிய பல சங்கிரமய திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களில் சோலார் PV முறைமைகளை பொருத்துதல்

அரச நிறுவனங்களில் சூரிய மின் உற்பத்தித் தொகுதிகளைப் பொருத்துவதற்கான நிதி வசதிகளை தேசிய வரவு செலவுத் திட்டத்திலிருந்து இ.நி.வ.அ.ச. பெற்றுக்கொண்டது. இதற்கமைய நாடு தழுவிய ரீதியில் 72 வைத்தியசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அவை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இதற்கான கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின், தேசிய போட்டி அடிப்படையிலான கேள்வி முறையின் கீழ் கட்டட நிர்மாண நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன. அத்துடன், இ.நி.வ.அ.ச. மூன்று சூரிய சக்தி மின் உற்பத்தி நிறுவனங்களுடன் இணைந்து விநியோகம், பொருத்துதல், பரிசோதனை மற்றும் செயற்பாடு ஆரம்பம் என்பனவற்றை மேற்கொண்டது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 28 ஆதார வைத்தியசாலைகள், 20 மாவட்ட பொது வைத்தியசாலைகள், 09 போதனா வைத்தியசாலைகள் மற்றும் 02 மாகாண பொது வைத்தியசாலைகள் உட்பட மேலும் 13 வைத்தியசாலைகள் பயனடைந்தன. இதன்மூலம் மொத்தம் 20 கி.வொ மின்சாரம் தேசிய மின் உற்பத்தியில் சேர்க்கப்பட்டது. இ.நி.வ.அ.ச. வின் பொறியியலாளர்களும், தொழில்நுட்ப அதிகாரிகளும் குறித்த நிலையங்களுக்குச் சென்று அங்கு பணியாற்றும் ஒவ்வொரு வைத்தியசாலைகளின் செயற்பாட்டு அதிகாரிகளுக்கும் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்தனர். இந்தத் தொகுயின் மூலம் ஒரு வருடத்தில் தேசிய மின் உற்பத்திக்கு 2 கி.வொ.ம தூய சக்தி வளம் சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வேலைத் திட்டத்தின் மூலம் குறித்த வைத்தியசாலைகளின் மின்சாரக் கட்டணங்களை வெகுவாகக் குறைக்கவும், சமூகத்தின் பயன்பாட்டிற்காக மீள் சுழற்சி சக்தி வலுவைப் பயன்படுத்தம் முறையை அறிமுகப்படுத்தவும் அதேவேளை, முழு நாட்டிற்கும் அதன் நலன்களைப் பெற்றுக்கொடுக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## சூரிய பல சங்கிரமய விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு நிதியுதவிகள்

இது, இ.நி.வ.அ.ச. ஊடாக குறைந்த வட்டி வீதங்களின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மூலம் கிடைக்கப்பெற்ற 50 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதி ஊடாக வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காகவே பெறப்பட்டது. இதன் மூலம் 50 கி.வொ சூரிய மின்சக்தி கூரைத் தொகுதிகளை அமைக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கடன் திட்டத்திற்கு சிறந்த வரவேற்புக் கிடைத்துள்ளது. இதற்காக பல்வேறு நிறுவனங்கள் முன்வந்து தமது விண்ணப்பங்களைப் பதிவு செய்து கொண்டன. மற்றுமொரு 100 மில்லியன் அமெரிக்க டொலரை இதே தேவைக்காக இந்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சர்வதேச சூரிய மின்சார ஒன்றுகூடல் கூட்டுத்தாபனத்தில் (ISA) இலங்கையும் ஒரு அங்கத்துவ நாடு என்ற அடிப்படையில் குறித்த நிறுவனத்திலிருந்து இலங்கையில் சூரிய மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கைகள் விடுத்திருந்தது.



அரச வைத்தியசாலைகளின் கூரைகளில் சூரிய மின் உற்பத்தித் தொகுதிகள் பொருத்துதல்

### "ரிவி பலய லிய சவியட்ட" - சூரிய பல சங்கிரமய வேலைத் திட்டத்திற்காக மகளிரைப் பயிற்றுவித்தல்

சூரிய பல சங்கிரமய வேலைத் திட்டத்தின் ஆரம்பத்தின் பின்னர் சூரிய மின்சார PV உற்பத்தித் துறையானது, புதிய எல்லைகளை அடைந்துள்ளன. இதன் மூலம் நாடு தழுவிய ரீதியில் இலங்கையின் இளம் சந்ததியினருக்கு 5000 க்கும் மேற்பட்ட புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. இந்தத் தொழில் வாய்ப்புக்களில் பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், முகாமையாளர்கள், விற்பனை உத்தியோகத்தர்கள், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சந்தைப் பகுப்பாய்வாளர்கள், வாடிக்கையாளர் உதவி உத்தியோகத்தர்கள் உட்பட மேலும் பல தொழில் வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்கள் சர்வதேச சந்தைகளை அடைந்து கொள்ளவும், உள்நாட்டுச் சந்தைகளில் விஸ்தரிப்புக்களை மேற்கொள்ளவும் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டது. உதாரணமாக, அலுமினிய உற்பத்தி நிறுவனங்கள், DC கேபிள் உற்பத்திகள், AC கேபிள்கள், மின்சார மீற்றர்கள், கேபிள் உதிரிப்பாகங்கள், பொதி செய்யும் பெட்டிகள் உட்பட மேலும் பல உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்கள் என்பன இதற்கென உயர் தரத்திலான உற்பத்திகளை மேற்கொள்வதற்காக முன்வந்துள்ளன.

எவ்வாறாயினும், பெரும்பாலான சூரிய மின்சார முறைமைகளைப் பொருத்தும் வேலைகள், வெளிக்கள வேலைகள் என்பனவற்றை ஆண்களே முன்னின்று மேற்கொண்டு வந்தனர். சோலார் தொகுதிகளைப் பொருத்துவதில் பெண் ஊழியர்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்பட்டன. தற்போது, சூரிய மின்சார சேவை வழங்கும் பெரும்பாலான நிறுவனங்கள் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைத் தொழில் வாய்ப்புக்களை பெண்களுக்குப் பெற்றுக்கொடுத்து வருகின்றன. தொழில்நுட்பத் துறைகளில் பெண்கள் குறைந்த வாய்ப்புக்களையே பெற்றுள்ளனர். எவ்வாறாயினும், சில பெண்கள் ஆண் பயிலுநர்களை விட சில பகுதிகளில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். செயற்பாடுகளை முறையாகப் பின்பற்றி ஒழுங்காகவும், சட்டங்களையும் நியதிகளையும் பின்பற்றி பாதுகாப்பாகவும், சுத்தமாகவும் தமது பணிகளை மேற்கொள்ளும் வகையில் பெண்கள் முன்னணியில் திகழ்ந்து வருகிறார்கள். அத்துடன், அவர்கள் பல்வேறு வேலைகளை ஒரே சமயத்தில் மேற்கொள்வதிலும் வல்லுநர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இ.நி.வ.அ.ச. சூரிய சக்தித் துறையில் ஆர்வமுள்ள பெண்களுக்கு சிறந்த பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம், இலங்கையின் சமூகத்திற்கு சிறந்த நன்மை கிடைக்கும் என்று விளங்கிக் கொண்டதோடு, இதன் மூலம் பெண் தொழிலாளர்களுக்கு சிறந்த வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கவும், அத்துடன் தொழில்நுட்பத் துறையில் தொழில் வளர்ச்சியை எதிர்பார்க்கும் பெண்களுக்கு சிறந்த வாய்ப்பாக இது அமையும் என்றும் இ.நி.வ.அ.ச. நம்பிக்கை தெரிவித்துள்ளது. எனவே, இலங்கையில் சோலார் சேவை வழங்கும் நிறுவனங்கள் தங்களின் பெண் ஊழியர்களின் தொழில்நுட்ப அறிவை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக இ.நி.வ.அ.ச. ரிவி பலய லிய சவியட்ட என்ற வேலைத் திட்டத்தின் கீழ் செயற்படுகிறது.

"ரிவி பலய லிய சவியட்ட" வேலைத் திட்டம் என்பது, சூரிய சக்தி முறைமைகளைக் கூரைகளில் பொருத்தும் நடவடிக்கைகளில் பெண்களுக்கு வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இந்த வேலைத் திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்தலங்களையும் சென்று பார்வையிடுதல், நடைமுறை அமர்வுகள் மற்றும் வேலைத்தலங்களுக்குச் சென்று பொருத்தும் முறைகளைப் பார்வையிடுதல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. 18 இளம் பெண்கள் இந்த முதலாவது பயிற்சி அமர்வுகளில் வெற்றிகரமாகப் பங்குபற்றியிருந்தார்கள். மகளிர் தினமான 2019 மார்ச் 08 ஆம் திகதி இவர்களது பாடநெறி பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சுலன் பல மெஹயும - சிறிய அளவிலான காற்று விசையாழிகளுக்கான ஒரு புதிய நோக்கு

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான காற்று விசையாழிகளைப் பயன்படுத்தி, காற்றின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கை ஒன்று "சுலன் பல மெஹயும" என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள மீள் சுழற்சி சக்தி வலு பூங்காவில் சிறிய அளவிலான காற்று விசையாழிகள் நிறுவப்பட்டன. இந்த விசையாழிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டமிடல் நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





ரிவி பலய லிய சவியட்ட

### (ஈ) தொழில்நுட்ப அபிவிருத்தி, ஆய்வு மற்றும் அபிவிருத்தி மற்றும் பரீட்சார்த்த வேலைத் திட்டங்கள்

பல்வேறு விதமான தொழில்நுட்ப அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் இ.நி.வ.அ.ச. மேற்கொண்டுள்ளது. தொழில்நுட்ப ரீதியாகக் காணப்பட்ட கடப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக விசேடமாக மீள் சுழற்சி சக்தி வலு துறையில் தொழில்நுட்ப ரீதியில் காணப்பட்ட ஒருங்கிணைப்பு சம்பந்தமான குறைபாடுகளையும், அதனை தேசிய மின்சார வலையமைப்புடன் இணைப்பது சம்பந்தமான தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் முக்கியமாக அவதானம் செலுத்தப்பட்ட தொழில்நுட்ப அபிவிருத்திப் பணிகள் பின்வருமாறு - ஒவ்வொரு வேலைத் திட்டத்தின் கீழும் அவை பற்றிய ஒரு சிறிய விளக்கம் தரப்பட்டுள்ளது.

#### சக்தி வலுவை களஞ்சியப்படுத்தும் முறைகள் (ESS)

சக்தி வலுவைக் களஞ்சியப்படுத்தும் முறைகள் மூலம் மின்சக்தி உற்பத்தித் துறையில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கு சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும். அதிகூடிய மின்சாரத் தேவைப்பாடு காணப்படும் வேளைகளில் சூரிய மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கு இது உதவியாக இருக்கும். ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள தேசிய மீள் சுழற்சி சக்தி வலு பூங்காவில் இதற்கான சிறியளவிலான பரீட்சார்த்த வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதற்கு கொரிய அரசின் தொழில்நுட்ப உதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

#### நுண் மின் வலையமைப்புத் தொகுதிகள்

சிறியளவிலான மின் வலையமைப்புத் தொகுதிகள் மூலம் செயற்திறன் மிக்க சிறந்த மீள் சக்தி வலு சூரிய சக்தி முறைமைகளை உருவாக்க முடியும். காலநிலைத் தகவல்களை முன்னரே அறிந்து, அதற்கு ஏற்ற பொருத்தமான முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உற்பத்திகளை அதிகரிப்பதற்கும், அதன் மூலம் சூரிய மின்சக்தியை தேசிய வலையமைப்பில் சேர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இலகுவாக இருக்கும். இந்தப் பிரிவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மேலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென பேராதனை பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மற்றும் மின்சாரப் பொறியியல் திணைக்களத்தின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

#### மிதக்கும் சூரிய மின் உற்பத்தி வேலைத் திட்டங்கள்

பண்டாரகமையில் 50 Mw உற்பத்தித் திறன் கொண்ட மிதக்கும் சூரிய மின்சாரத் தொகுதி ஒன்றை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலத்தில் பொருத்தப்படும் சூரிய மின் உற்பத்தி முறைமைகளுக்குப் பதிலாக, மிதக்கும் தொகுதிகள் தற்போது பிரபல்யம் பெற்று வருகின்றன. இலங்கை போன்ற சிறிய நிலப்பரப்பு கொண்ட ஒரு நாட்டிற்கு இவ்வாறான வேலைத் திட்டங்கள் சிறந்ததொரு பலமாக அமையும் என நம்பப்படுகிறது.

### (உ) புதிய வளங்களையும் தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்துவதில் தலையீடு

#### கடல் அலைகளில் சக்தி வலு வளங்களை உருவாக்கும் வேலைத் திட்டம்

கடல் வலையம் ஒன்றை அதிகமாகக் கொண்ட ஒரு தீவாக அமைந்திருக்கும் நாடு என்ற வகையில், இலங்கைக்கு கடல் அலைகள் மூலம் கிடைக்கும் சக்தி வலு முக்கியமான புதிய மீள் சுழற்சி சக்தி வலுவாகக் கருதப்படுகிறது. இந்த வளங்களை முறையாக அபிவிருத்தி செய்ய பேராதனைப் பல்கலைக்கழக இயந்திரப் பொறியியல் திணைக்களத்தின் உதவியுடன் கடல் அலை சக்தி வலு வள மதிப்பீட்டுத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. IEC 62000-101 தராதரங்களுக்கு அமையவே இந்த ஆராய்ச்சி நடைபெறும். சிறந்த கடல் அலைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும், அதன் மூலம் அவற்றின் அனுகுமுறைகளை விளங்கிக் கொள்ளவும், அலைகள் மூலம் சக்தி வலுவை உருவாக்கும் மிகச் சிறந்த முறைகளை அடையாளம் காணவும் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையில், இலங்கை முழுவதுமாக கடல் அலைகள் மூலம் சக்தி வலு உருவாக்கும் சிறந்த பகுதிகளை அடையாளம் காணலாம்.

## வேற்று சக்தி வலு தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல்

வேற்று சக்தி வலு தொழில்நுட்பங்களை (நாட்டில் இதுவரை காலமும் முயற்சி செய்யப்படாத சக்தி வலு முறைகள்) அடையாளம் கண்டு அவற்றை செயற்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை ஊடாக சர்வதேச மட்டத்தில் போட்டி அடிப்படையில் கேள்விப்பத்திரம் கோரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## ∞ கேள்வி பிரிவில் முகாமைத்துவ நடவடிக்கைகள்

### (அ) சக்தி வலு தகவல்கள் மற்றும் தரவுகள்

சக்தி வலு தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்களை முறையாக முகாமைப்படுத்தி, சக்தி வலு வளங்களை இனங்காணவும், அவை தொடர்பாக கொள்கைகளை வகுக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை அறிந்து கொள்ளவும் முடியுமாக இருக்கிறது. இ.நி.வ.அ.ச. யினால் பிரசுரிக்கப்பட்ட மின்சாரப் பயன்பாட்டுத் தரங்கள் மூலம் நாட்டில் மின்சாரப் பயன்பாடுகளை கட்டுப்படுத்தவும், மேற்பார்வை செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய சம நிறுவனங்களுடன் ஒப்பிட்டு, செயற்திறன் மட்டங்களை அடையாளம் காணவும், இதனை இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியேயும் உள்ள நிறுவனங்களுடன் ஒப்பிடும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தராதரங்கள் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கு அமைய மாற்றியமைக்கப்பட்டதோடு, நிறுவனங்களுக்கு அவற்றின் சக்தி வலு செயற்திறனை முறையாக அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் இ.நி.வ.அ.ச. கட்டடங்கள் மீது ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வர்த்தக ரீதியான கட்டடங்களில் காணப்படும் தராதரங்களில் மாற்றங்களை மேற்கொள்ள திட்டங்கள் வகுக்கப்பட்டன.

### (ஆ) சக்தி வலு முகாமைத் தொகுதிகளும் சேவைகளும்

இ.நி.வ.அ.ச. ஆனது, சக்தி வலு முகாமைத்துவச் செயற் திட்டங்கள், சக்தி வலு செயற்திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான விதிமுறைகள் மற்றும் நியமங்களை விதிப்பது தொடர்பான சகல தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளது.

சக்தி வலு முகாமையாளர் / சக்தி வலு கணக்காய்வுக் கட்டுப்பாடுகளின் கீழ், சக்தி வலு முகாமையாளர் மற்றும் சக்தி வலு கணக்காய்வாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டு, செயற்திறன் மிக்க சக்தி வலு செயற்பாடுகளை தொடர்ந்து மேம்படுத்தவும், சக்தி வலு பாதுகாப்புச் செயற்திட்டங்களைத் துரிதப்படுத்தவும், வர்த்தக மற்றும் தொழிற்துறைகளில் இவற்றை முன்னெடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சக்தி வலு முகாமையாளர் என்பது, ஒரு முக்கியமான பதவியாகும். இதன் ஊடாக சக்தி வலு முகாமைத்துவ நடவடிக்கைகளை நிறுவனத்தில் முன்னெடுப்பதற்கான சகல அத்தியாவசியத் தேவைகளையும் அவர் பூர்த்தி செய்கின்றார். மேலும், சக்தி வலு முகாமையாளர் என்ற வகையில், நிறுவத்திற்குள் அனைத்து தர ஊழியர்களிடையேயும் சக்தி வலுவை செயற்திறனுடன் பயன்படுத்தும் வழக்கம் ஒன்றைக் கொண்டு வரும் தேவைப்பாடும் பூர்த்தி செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் இருந்து இந்த வேலைத் திட்டம் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றது.

அறிவுசார் மற்றும் திறன்களைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான உதவிகளும் தொழில்நுட்ப வழிகாட்டல்களும் இ.நி.வ.அ.ச. ஊடாக பெற்றுக்கொடுக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் மாவட்ட அடிப்படையிலான கருத்தரங்குகளை நடத்த இ.நி.வ.அ.ச. ஏற்பாடு செய்திருந்தது. அரச துறைகளில் சக்தி வலு முகாமை உத்தியோகத்தர்களை உள்ளடக்கி, சக்தி வலுவைப் பாதுகாப்பதற்கும், முகாமை செய்வதற்குமாக இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சக்தி வலு பாதுகாப்பு சுற்று நிருபத்திற்கு அமைய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய குருநாகல், புத்தளம், கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியவாறு நான்கு செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. சக்தி வலு சேவை வழங்கும் நிறுவனங்கள் (ESCO), இ.நி.வ.அ.ச. யின் கீழ் பதிவு செய்யப்பட்ட சக்தி வலு சேவை வழங்கும் நிறுவனங்கள் (ESCO) என்பன இதில் இணைந்து கொண்டன. அவற்றின் உதவியுடன் சக்தி வலு கணக்காய்வுகள் மற்றும் சக்தி வலு செயற்திறன் அதிகரிப்பு வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துதல் என்பனவும் முன்னெடுக்கப்பட்டன. மேலும், சக்தி வலுவை அளவிடும் உபகரணங்களை வைத்திருப்பதற்காக இ.நி.வ.அ.ச. யினால் வங்கி போன்ற ஒரு நிறுவனம் நடத்தப்பட்டு வருகிறது. உபகரணங்கள் யாவும் இதில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இதன் சேவையை ஆலோசகர்கள், தொழில் வல்லுநர்கள், ESCO க்கள் மற்றும் சக்தி வலு தொடர்பாக செயற்பட்டு வரும் அனைத்து நிறுவனங்களுக்கும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். மேலும், இ.நி.வ.அ.ச. நிறுவனமானது, பல்வேறு விதமான சக்தி வலு கணக்காய்வுகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் ISO 50001 EnMS கணக்காய்வுகளையும் அரச மற்றும் ஏனைய நிறுவனங்களில் முன்னெடுத்துள்ளது.




சக்தி வலு முகாமையாளர்கள் மற்றும் சக்தி வலு கணக்காய்வாளர்கள்



கேகாலையில் சக்தி வலு முகாமைத்துவ அதிகாரிகளுக்கான வேலைத் திட்டம்




குருநாகலில் சக்தி வலு முகாமைத்துவ அதிகாரிகளுக்கான வேலைத் திட்டம்

### சக்தி வலு செயற்திறன் மிக்க கட்டடங்களுக்கான நடைமுறை விதிகள்

சக்தி வலு செயற்திறன் மிக்க கட்டடங்களுக்காக 2009 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை விதிகள் மீளாய்வு செய்யப்பட்டு மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த மாற்றங்களுக்கு அமைய, கட்டட நிர்மாணத் துறையில் ஈடுபட்டுள்ள தொழிற்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, இதனை நடைமுறைப்படுத்துவதைக் கட்டாயமாக்க முன் அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்ட வருகின்றன. இதற்கமைய, நிலையான சக்தி வலு வீடமைப்புக்களை உருவாக்குவதற்கான வழிகாட்டல்களும், மக்களிடையே சக்தி வலு பற்றிய விளக்கத்தை அதிகரிக்கும் தேவைப்பாடுக்கான வழிகாட்டல்களும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

### மின் உபகரணங்களில் சக்தி வலு பயன்பாட்டை அளவிடும் வேலைத் திட்டம்

மின் உபகரணங்களில் சக்தி வலு பயன்பாட்டை அளவிடும் வேலைத் திட்டம் காரணமாக, செயற்திறன் மிக்க மின் உபகரணங்களை மக்களிடையே பிரபல்யப்படுத்தவும், அதன் மூலம் சந்தையில் அதிக சக்தி வலுவைப் பயன்படுத்தும் செயற்திறனற்ற உற்பத்திகளை அகற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கான சட்ட திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனால், மக்களிடையே விழிப்புணர்வு அதிகரிக்கும். சக்தி வலுவை செயற்திறனுடன் பயன்படுத்தும் உற்பத்திகளை எவ்வாறு கொள்வனவு செய்வது, அடையாளம் காண்பது என்பது பற்றி மக்களுக்கு விளக்கும் அதேவேளை, பொருட்களை விற்பனை செய்வோர், சக்தி வலுவில் செயற்திறன் கொண்ட மின் உபகரணங்களைத் தயாரிக்கவும், அதேவேளை, சக்தி வலு செயற்தின் குறைந்த உற்பத்திகளை தடை செய்யவும் முடியும். மின் சக்தியைப் பயன்படுத்தும் கருவிகளுக்கு நச்சத்திர எண்ணிக்கை கொண்ட அடையாளக் குறியீடு அல்லது குறைந்தபட்ச சக்தி வலு செயற்திறன் (MEP) அளவு கொண்ட ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்த அளவுகளை மின் உபகரணங்களில் பொறிப்பதன் மூலம் அதிக செயற்திறன் கொண்ட உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. CFL மின் விளக்குகள் மூலம் இது கடுமையாக முன்னெடுக்கப்படுகிறது. இதனடிப்படையில், தரம் குறைந்த உற்பத்திகளுக்குக் காணப்பட்ட கேள்விகள் குறைந்துள்ளதை நன்கு அவதானிக்க முடிகிறது. LED விளக்குகளுக்கு கட்டாயப்படுத்தப்படாத அளவீட்டுச் செயற்பாடு ஒன்று இப்போது நடைமுறையிலுள்ளது. இதனை எதிர்காலத்தில் கட்டாயப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், சில மாதங்களில் கூரை மின் விசிறிகளுக்கு இவ்வாறான அளவீட்டு செயற்பாடு அறிமுகப்படுத்தப்படும். வீட்டுப் பயன்பாட்டு குளிர்சாதனப் பெட்டிகளுக்கு குறைந்தபட்ச மின்சக்தி செயற்திறன் அளவீடு ஒன்றை அறிமுகப்படுத்தவும், ஏற்கனவே உள்ள இந்தச் செயற்திறன் அளவுகளை மீளாய்வு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (NERD) மையத்தில் இந்த சக்தி வலு செயற்திறன் பரிசோதனைகள் குளிர்சாதனப் பெட்டிகளுக்காக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பெறுபேறுகளைக் கொண்டு புதிய குறைந்தபட்ச சக்தி வலு செயற்திறன் தேவைப்பாடுகள் மற்றும் தராதரங்கள் தீர்மானிக்கப்படும்.

கணனிகள் மற்றும் குளிரூட்டிகளுக்கான சக்தி வலு அளவீட்டுத் தராதரங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவை, இலங்கை தராதர அங்கீகார சபையின் SLS 1580:2018 மற்றும் 1586:2018 ஆகிய கட்டுப்பாடுகள் மூலம் செயற்படுத்தப்பட்டுள்ளன. மொறட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப உதவியுடன் கணனிகளுக்கான தொழில்நுட்ப தேவைப்பாட்டு ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### (இ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களும் பரீட்சார்த்த நடவடிக்கைகளும்

தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளில் சக்தி வலு செயற்திறன் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியதை அடுத்து, சக்தி வலு செயற்திறனை மேலும் உயர்த்தும் வகையிலான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பரீட்சார்த்த வேலைத் திட்டங்களை இ.நி.வ.அ.ச. நடத்தி வருகிறது.

### தேயிலை உலர்த்தும் நடவடிக்கைகளில் சக்தி வலு மேம்பாடு

தேயிலைத் தொழிற்துறையானது, இலங்கையைப் பொறுத்த வரை ஒரு பாரிய தொழில் துறையாகும். கடந்த சில வருடங்களாக தேயிலைத் தொழிற்துறையில் சக்தி வலு செயற்திறன் அதிகரிப்பு பற்றி அவதானம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. தேயிலையை உலர்த்துதல் என்பது, பாரியளவில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும். இதில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தைக் கட்டுப்படுத்தவும், சேதங்களைக் குறைக்கவும் ஏற்பாடுகளை மேற்கொள்வது மிகவும் முக்கியமாகும். தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து, இ.நி.வ.அ.ச. ஒரு வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் தேயிலையை உலர்த்தும் தொகுதிகளை மீளமைத்து, குறைந்த மின்சாரப் பிரயோகத்துடன், வெப்பம் சேதமாகுவதைக் குறைப்பதற்கான இந்த உபகரணங்களின் கட்டமைப்பு மாற்றங்களை அறிமுகப்படுத்தவும், வெப்பத்தைப் பரிமாறிக் கொள்ளும் மற்றும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் தொகுதி ஒன்றை அறிமுகப்படுத்தவும் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று 2018 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டதோடு, 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் இந்த வேலைத் திட்டம் முடிவுக்கு வரவிருக்கிறது. இதற்கென ரூபா 2 மில்லியன் நிதி ஒதுக்கீடு செயயப்பட்டு, அது கட்டம் கட்டமாக வழங்கப்பட்டது. இ.நி.வ.அ.ச. யினால் முன்வைக்கப்பட்ட இந்த நிர்மாணக் கட்டமைப்பு TRI மற்றும் CFD என்பனவற்றுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதற்காக மிகச் சிறந்த நிர்மாணக் கட்டமைப்பு பயன்படுத்தப்பட்டு, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மூலம் இவற்றின் பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட இருக்கின்றன.

### மூன்று சந்ததிகளின் அறிமுகம்

மூன்று சந்ததிகள் அல்லது ஒன்றிணைக்கப்பட்ட குளிரூட்டல், சூடாக்கல் மற்றும் சக்தி வழங்குதல் (CCHP) ஊடாக ஒரே சமயத்தில் மின்சாரத்தை உருவாக்குதல், பயனுள்ள வகையில் சூடாக்கல் மற்றும் குளிர்படுத்துதல் என்பனவற்றை ஒரே சக்தி வலுவின் மூலம் மேற்கொள்ளுதல் இந்த வேலைத்திட்டத்தின் பெறுபேறாகும். இந்த மூன்று சந்ததிகள் செயன்முறையைப் பயன்படுத்துவதனால் எரிபொருள் சக்தியில் 80% ஐப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். சக்தி வலு பயன்பாட்டில் காணப்படும் மிகச் சிறந்த அணுகுமுறைகளில் ஒன்றாக இது அமைகிறது. தொழிற்துறை மற்றும் வர்த்தகத்துறை நிறுவனங்களுக்கு முக்கியமாக ஹொட்டேல்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் (EPZ) போன்றவற்றுக்கு இந்த மூன்று சந்ததிகள் செயன்முறையை அறிமுகப்படுத்த இ.நி.வ.அ.ச. எதிர்பார்க்கிறது. 2018 ஆம் ஆண்டில் பியகம ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில (BEPZ) இந்த மூன்று சந்ததிகள் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கான ஆரம்பக்கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### (ஈ) SLNEEA - செயற்திறன் மிக்க சக்தி வலு பயன்பாட்டு நிறுவனங்கள் / பங்களிப்பாளர்களை தேசிய மட்டத்தில் கௌரவித்தல்

இலங்கையின் தேசிய செயற்திறன் சக்தி வலு பயன்பாட்டு விருதுகள் (SLNEEA) மூலம், சக்தி வலு பயனாளிகளிகள், சக்தி வலு சேவை வழங்குநர்கள் மற்றும் சக்தி வலு முகாமையாளர்கள் ஆகியோரிடையே முறையான மற்றும் வெற்றிகரமான சக்தி வலு செயற்திறன் அதிகரிப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு செயற்பாடுகள் மற்றும் சக்தி வலு முகாமைத்துவ நடவடிக்கைகளின் ஊடாக சக்தி வலு சேமிப்புக்களை பெருமளவில் மேற்கொண்டவர்களுக்கு தேசிய மட்டத்திலான கௌரவிப்பு வழங்கப்பட்டது.



இலங்கை தேசிய சக்தி வலு திறன் விருது 2018

இந்த விருது வழங்கும் விழா, மூன்று பிரதான அம்சங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. மிகச் சிறந்த சக்தி வலு செயற்திறன் கொண்ட வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்திய நிறுவனங்கள் அரச மற்றும் தனியார் துறையில் அடையாளம் காணப்படுதல், சக்தி வலு சேவை வழங்கும் நிறுவனங்கள் (ESCos) மற்றும் சக்தி வலு முகாமையாளர்கள் ஆகிய மூன்று பிரிவினர்களை இது மையமாகக் கொண்டிருந்தன. 2018 ஆகஸ்ட் 21 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை தேசிய சக்தி வலு செயற்திறன் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் சக்தி வலு பாதுகாப்புக்கான சிறந்த பங்களிப்புக்களை வழங்கிய 31 நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

### (உ) செயற்பாட்டு கேள்விப் பகுதி முகாமைத்துவம்

பெரும்பாலான ஆர்வம் காட்டுவோரின் பங்கேற்புடன் துரிதப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை, முக்கியமாக சக்தி வலு செயற்திறன் அதிகரிப்பில் அவதானம் செலுத்திய வகையில் முன்னெடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதில் கேள்விப் பகுதியை முகாமைத்துவம் செய்தலானது (DSM), இலங்கை மின்சார சபையின் நீண்டகாலத் திட்டமான 2014-2039 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தற்போது மிகவும் செலவு குறைந்த செயற்திட்டமாகக் கருதப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு அமைய வர்த்தக, வீட்டுப்புற மற்றும் தொழிற்துறை ஆகிய மூன்று பிரிவுகளிலும் 09 முக்கிய செயற்பாடுகளை ஜனாதிபதி செயற்குழு ஒன்றின் ஊடாக சக்தி வலு கேள்விப் பகுதியை முகாமை செய்வதற்கான இ.நி.வ.அ.ச. ஊடான தேசிய செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை, இலங்கை



LED களைப் பகிர்ந்தளிக்கும் பரீட்சார்த்த வேலைத் திட்டம்

மின்சார சபை, LECO மற்றும் LTL ஆகிய நிறுவனங்கள் மூலமாகவும், வெளிக்கள நிறுவனங்களினாலும் இதற்கான நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்த செயற்குழுவானது தமது நடவடிக்கைகளை 2017 ஜனவரி 02 ஆம் திகதி முதல் ஆரம்பித்தது. இதன் மூலம், 2018 ஆம் ஆண்டில் பின்வரும் பிரிவுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

### வெப்பத்தினால் செயற்படும் விளக்குகளை அகற்றுதல்

வீடுகளிலும், அலுவலகங்களிலும் பிழையான கருவிகள் மற்றும் முறையற்ற பராமரிப்புக் காரணமாக, அதிகளவு சக்தி வலுவை பொது மக்கள் வீண் விரையம் செய்கின்றனர். வெப்பத்தினால் செயற்படும் விளக்குகள் தற்போதும் நாட்டில் பரவலாகப் பாவிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு பிரதான காரணம், அவற்றின் குறைந்த விலையே. எவ்வாறாயினும், இந்த விளக்குகள் செயற்திறனில் மிகக் குறைந்ததாகவும், குறுகிய காலமே செயற்படக் கூடியவையாகவும் இருக்கின்றன. LED விளக்குகளுடன் ஒப்பிடுகையில், விசேடமாக இதனை நன்கு உணரக்கூடியதாக இருக்கிறது. குறைந்த வருமானம் பெறும் வீடுகளில் LED விளக்குகளின் பயன்பாடுகளை அதிகரிப்பதற்காக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை "சக்தி" என்ற வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த வேலைத் திட்டத்தின் காரணமாக, 90 KWh க்கு குறைவான மாதாந்த மின் பாவனை கொண்ட வீடுகளுக்கு சுமார் 10 மில்லியன் LED விளக்குகளை பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இதனடிப்படையில், கொலன்னாவ, ஹொரண மற்றும் ருவன்வெல்ல ஆகிய பகுதிகளில், தெரிவு செய்யப்பட்ட விநியோக முறை ஒன்றின் மூலம் இந்த தேசிய வேலைத் திட்டம் ஒரு பரீட்சார்த்த திட்டமாக மேற்கொள்ளப்பட்டது. வீடுகளிலும் அலுவலகங்களிலும் சிறந்த சக்தி வலு பாதுகாப்பு பழக்கவழக்கங்களை மக்களிடையே கொண்டு வருவதும் இந்த வேலைத் திட்டத்தின மற்றுமொரு நோக்கமாகும்.

### செயற்திறன்மிக்க குளிர்சாதனப் பெட்டிகள்

கடந்த சில வருடங்களாக கணிசமான அளவு குளிர்சாதனப் பெட்டிகள் அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் பாவிக்கப்பட்டு வந்துள்ளன. அவை அக்காலத்தில் காணப்பட்ட குறைந்த தொழில்நுட்பம் மற்றும் நீண்ட காலமாகப் பாவிப்பதனால் ஏற்படும் சேதங்கள் காரணமாக, செயற்திறனற்றுக் காணப்படுகின்றன. இவற்றை புதிய தொழில்நுட்பம் கொண்ட, மின்சக்தியைச் சேமிக்கக்கூடிய புதிய குளிர்சாதனப் பெட்டிகளுடன் மாற்றும் போது, மாதாந்த மின் கட்டணத்தில் சுமார் 30 முதல் 40% வரை சேமிப்பை மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு இவை இலாபகரமானவையாகும். இதற்கமைய, செயற்திறனற்ற குளிர்சாதனப் பெட்டிகளுக்குப் பதிலாக, சிறந்த செயற்திறன் கொண்ட குளிர்சாதனப் பெட்டிகளை அறிமுகப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் நிதி வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், தற்போது செயற்பாட்டிலுள்ள குளிர்சாதனப் பெட்டிகள் பற்றியும், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### செயற்திறன் மிக்க குளிரூட்டிகள்

குளிரூட்டிகளின் செயற்பாடுகளைப் பரீட்சிக்கும் ஆய்வுகூடம் ஒன்றை உருவாக்குவதற்காக வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும், தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### செயற்திறன் மிக்க மின் விசிறிகள்

வீடுகளில் பாவனையிலுள்ள மின் சாதனங்கள் பற்றி ஆய்வு செய்வதற்கான ஒரு வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செயற்திறனற்ற கூரை மின் விசிறிகளை, செயற்திறன்மிக்க மின் விசிறிகளுடன் மாற்றுவதனால் ஏற்படும் சேமிப்பு பற்றி இந்த ஆய்வின் போது இனங்காண எதிர்பார்க்கப்படுகின்றது.

### செயற்திறன்மிக்க குளிர்சாதனப் பெட்டிகள்

செயற்திறனற்ற வீட்டு குளிர்சாதனப் பெட்டிகளை செயற்திறன் மிக்க குளிர்சாதனப் பெட்டிகளுடன் மாற்றுவதற்கான வழிகாட்டல்கள், குறித்த ஆர்வம் காட்டுவோருடன் கலந்துரையாடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறைந்தபட்ச செயற்திறன் கொண்ட மின் சாதனங்கள் என்ற தராதரம் அறிமுகப்படுத்தப்பட்டவுடன் இந்த திட்டம் அமுல்படுத்தப்படும்.

### செயற்திறன் மிக்க ஒளியமைப்பு

வர்த்தக மற்றும் தொழிற்சாலைகளில் செயற்திறன் மிக்க ஒளியமைப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான முழுமையான ஆராய்ச்சி ஒன்றை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### செயற்திறன் மிக்க மோட்டார்கள்

தொழிற்சாலைகளில் மோட்டார்களின் பயன்பாடு பற்றிய ஆராய்ச்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சியின் மூலம் மோட்டார்கள் மற்றும் அதிவேக கருவிகளை பல்வேறு தொழிற்துறைகளில் பயன்படுத்துவது தொடர்பான தகவல்களையும் தரவுகளையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

### (ஊ) சக்தி வலு பற்றிய அறிவு மற்றும் விழிப்புணர்வுத் திட்டம்

நிலையான சக்தி வலு செயற்பாடுகள் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி எதிர்காலத்தை நோக்கிய கல்வித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### விதுல்க தேசிய சக்தி வலு கண்காட்சி

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2018 ஆகஸ்ட் 17 முதல் 19 ஆம் திகதி வரை "விதுல்க" சக்தி வலு கண்காட்சி இடம்பெற்றது. அதில் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த 43 காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுமார் 20,000 பேர் வரை இதனை பார்வையிட்டுள்ளனர். சக்தி வலுவைப் பாதுகாப்பது மற்றும் மீள் சுழற்சி சக்தி வலு பற்றிய மக்களின் அறிவை அதிகரிக்கும் வகையிலான பின்வரும் பல்வேறு நிகழ்ச்சிகள் இந்தக் கண்காட்சியின் போது மேற்கொள்ளப்பட்டன.



BMICH யில் நடைபெற்ற "விதுல்க" சக்தி வலு கண்காட்சி

- பார்வையாளர்களின் சக்தி வலு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வை அறிந்து கொள்ளும் வகையில் கேள்வி - பதில் போட்டிகள் நடத்தப்பட்டன. இதன் போது, வெற்றியாளர்களுக்கு சுமார் 3,000 LED மின் விளக்குகள் பரிசுகளாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- பாடசாலை மாணவர்களிடையே சித்திரப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அதில் பங்குபற்றிய மாணவ, மாணவியருக்கு பாடசாலைப் புத்தகப் பைகள் பரிசுகளாக வழக்கப்பட்டன.

- சாரணர்கள் தங்களது சக்தி வலுவைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் விளக்கமளிப்புக்களையும் நடத்தினார்கள்.

- தொலைக்காட்சி அலைவரிசைகளான தெரண மற்றும் ரூபவாஹினி அலைவரிசைகளிலும், பல்வேறு பத்திரிகைகளிலும் பாரியளவில் விழிப்புணர்வுத் திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

## ‘V 2025’ என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா

மொனராகலையில் 2018 ஆகஸ்ட் 29 முதல் 31 ஆம் திகதி வரை இடம்பெற்ற ‘V 2025’ கண்காட்சியில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை கலந்து கொண்டது. இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம், சூரிய மின்சாரம் தொடர்பான விளக்கத்தை பொது மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதாகும். பாடசாலை மாணவ, மாணவியரிடையே இதன்போது திறந்த சித்திரப் போட்டியொன்றும் நடத்தப்பட்டது. “மீள் சுழற்சி சக்தி வலு” என்பது அதன் தலைப்பாகும். இதற்கு மேலதிகமாக, வீதி நாடகங்கள், சக்தி வலு முகாமைத்துவம் மற்றும் சூரிய மின்சாரம் தொடர்பாக விளக்கமளிக்கும் நாடகங்கள், வீதி நாடகங்கள் என்பனவும் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு இ.நி.வ.அ.ச. இலச்சினை பொறிக்கப்பட்ட பாடசாலைப் பைகள் பரிசாக வழங்கப்பட்டன.

## கல்விக் கண்காட்சி - ருவன்வெல்ல

சிறுவர் தினத்தை முன்னிட்டு 2018 ஒக்டோபர் 01 மற்றும் 02 ஆம் திகதிகளில் கல்விக் கண்காட்சியொன்று இடம்பெற்றது. ருவன்வெல்ல பொது மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை கலந்துகொண்டது. இதில் இ.நி.வ.அ.ச. யின் காட்சிக்கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டு, பொது மக்களுக்கு சக்தி வலு முகாமைத்துவம் மற்றும் மீள் சுழற்சி சக்தி வலு பற்றிய வழிகாட்டல்களும், சக்தி வலுவைப் பேணுதலாகப் பயன்படுத்தும் பிரசைகளாக மாறுவது எவ்வாறு என்பது பற்றிய விளக்கமும் பெற்றுக்கொடுக்கப்பட்டது.




ருவன்வெல்லயில் நடைபெற்ற இ.நி.வ.அ.ச. கல்விக் கண்காட்சி



மொனராகலயில் இடம்பெற்ற ‘V 2025’ என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா கண்காட்சி

### சக்தி வலு ஊடகவியலாளர் விருது வேலைத் திட்டம்

நிலையான சக்தி வலு தொடர்பான செயலமர்வு ஒன்று நடைபெற்றது. 50 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்ட இதில் பத்திரிகை ஆசிரியர்கள், தயாரிப்பாளர்கள் உட்பட மேலும் பலரும் கலந்து கொண்டனர். 2018 ஒக்டோபர் 02 ஆம் திகதி வோட்டர்ஸ் எட்ஜ் ஹொட்டேலில் நடைபெற்ற இந்த நிகழ்சியில் கௌரவ மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் கலந்து கொண்டார். சக்தி வலு ஊடகவியலாளர் விருது இந்த நிகழ்ச்சியின் போது வைபவ ரீதியாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. சக்தி வலு ஊடகவியலாளர் விருதானது, சக்தி வலு முகாமைத்துவம், மீள் சுழற்சி சக்தி வலு அபிவிருத்தி மற்றும் கேள்விப் பிரிவிலான சக்தி வலு முகாமைத்துவம் மற்றும் நாடு தழுவிய ரீதியில் அச்சு, இலத்திரனியல் மற்றும் சமூக வலைத்தளம் ஆகிய ஊடகங்களை உள்ளடக்கியவாறு மக்களிடையே மிகச் சிறந்த அறிவை விருத்தி செய்யும் வகையில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது. ஊடகவியலாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள், சிறந்த நடுவர்கள் குழுவினால் ஆராயப்படும். ஊடகத்துறையில் தேர்ச்சி பெற்ற தொழில் வல்லுநர்கள், புத்திஜீவிகள், இலங்கை ஊடக சபையின் பிரதிநிதிகள், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் பிரதிநிதிகள் மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் பிரதிகள் ஆகியோரை உள்ளடக்கிய நடுவர் குழுவொன்று இதனை பகுப்பாய்வு செய்யும்.






சக்தி வலு ஊடகவியலாளர் விருதுகள்

### ∞ நிதியுதவி வழங்கிய வேலைத் திட்டங்கள்

#### (அ) ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டம் (UNDP)/ சர்வதேச சுற்றாடல் வசதிகள் (GEF) ஆகியவற்றினால் நிதி வழங்கப்பட்ட நிலையான உயிரியல் வாயு வேலைத் திட்டம்

UNDP/GEF நிதியுதவியுடன் நிலையான உயிரியல் வாயு சக்தி வலு உற்பத்தி மற்றும் நவீன உயிரியல் சக்தி வலு தொழில்நுட்பங்கள் வேலைத் திட்டங்களை ஊக்குவிப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்று 2018 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தது. இந்த வேலைத் திட்டமானது, சர்வதேச தொழில் வல்லுநர்கள் குழுவொன்றினால் மீளாய்வு செய்யப்பட்டது. இந்தக் குழுவில் ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் அடங்கியுள்ளனர். இதன்போது வேலைத் திட்டத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் மிகச் சிறந்த திருப்திகரமான பெறுபேறுகளைத் தரும் திட்டங்களை அடையாளம் காணுதல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டது.

மக்களிடையே விறகுத் தேவை ஒரு பிரதான அம்சமாகக் காணப்படுகின்றது. விறகின் முக்கியத்துவம் எந்தளவு என்று கூறுவதாயின், 2012 ஆம் ஆண்டில் LP காஸ் மூலம் மாத்திரமே சகலரும் சமையல் செய்து வந்ததால், அந்த வருடத்தில் LP காசை கொள்வனவு செய்வதற்காக கணிசமான அளவு அந்நியச் செலாவனியை இழக்க வேண்டியிருந்திருக்கும். எனவே, விறகின் பயன்பாடு வீடுகளில், பேக்கரிகளில், தேயிலை உற்பத்திச்சாலைகளில் மற்றும் ஏனைய அனைத்துத் தொழிற்துறைகளிலும் பயன்படுத்துவது பொருளாதார ரீதியில் ஒரு முக்கியமான பங்களிப்பைப் பெற்றுக்கொடுக்கிறது. இலங்கை மரங்கள் வளர்வதற்கு ஏற்ற கால நிலையைக் கொண்ட ஒரு மிகச் சிறந்த நாடு. விறகுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அளவு மழை, சூரிய ஒளி மற்றும் மண் வளம் ஆகிய அனைத்தையும் எமது நாடு கொண்டுள்ளது.

இந்த அடிப்படையில் UNDP/GEF நிதியுதவியுடன் நிலையான உயிரியல் திணிவு வேலைத்திட்டம் ஒன்று 2013 ஆம் ஆண்டில் ஐந்து வருட காலத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. அது இவ்வருடத்தில் முடிவுக்கு வரவிருக்கிறது. இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக பின்வரும் இலக்குகள் எதிர்பார்க்கப்பட்டன:

- தொழிற்சாலைகளில் வெப்பத் தேவைகளுக்கு நிலையான முறையில் தயாரிக்கப்பட்ட விறகின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அங்கீகரித்தல்.



கரவனல்ல வைத்தியசாலைக்கு நிலையான உயிரியல் திணிவு சக்தி வலு திட்டத்தின் மூலம் சுடுநீர் பொயிலர்கள்

- நிலையான விறகு உற்பத்திக்குத் தேவையான அறிவு மற்றும் ஆதரவுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- நிலையான விறகு உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரித்தல்.
- நிலையான விறகுகள் மூலம் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாகவும், அவற்றின் பொருளாதார அனுகூலங்கள் பற்றியும் தொழிற்துறைகள் மற்றும் பேக்கரி துறைகளில் நம்பிக்கையை ஏற்படுத்துதல்.
- உயிரியல் திணிவு சக்தி வலு தொழில்நுட்பம் தொடர்பான அறிவை விருத்தி செய்தல் மற்றும் பராமரிப்புத் திறமையை அதிகரிப்பதன் மூலம் விறகு பயன்படுத்தும் தொழிற்துறைகளையும், வேலைத் திட்டங்களையும் அதிகரித்தல்.

1. தேசிய சக்தி வலு கொள்கையானது, பாரியளவிலான கொள்கை / கட்டுப்பாட்டுக் கட்டமைப்பின் தேவைப்பாட்டினை அடையாளம் காண்கிறது. முக்கியமாக, உயிரியல் எரிசக்தித் துறைக்கு இது அவசியமாகிறது.

- இலங்கை தராதர அங்கீகார சபை (SLSI) மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து, இலங்கையில் விறகு உற்பத்திக்கான நிலையான தராதர தேவைப்பாடு ஒன்று உருவாக்கப்பட்டது. SLS 1551:2016 என்று பெயரிடப்பட்டுள்ள இதன் மூலம், உற்பத்திகளின் பின்னணி, சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. மேலும், இதன் மூலம் நிலையான முறையில் உற்பத்தி செய்யப்படும் விறகு மூலம், தொழிற்சாலைகளில் வெப்ப உருவாக்கத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான பின்னணியும் வழங்கப்படுகிறது. பின்வரும் உதவி ஆய்வுகளும் செயன்முறைகளும் தற்போது நடைமுறையில் உள்ளன.
    - o உயிரியல் வாயு போக்குவரத்து ஆராய்ச்சி
    - o உயிரியல் வாயு விலை ஆய்வு
    - o SLS 1551:2016 தராதர தேவைப்பாடு மற்றும் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறை
    - o SLS 1551 இன் கீழ் 25 கணக்காய்வாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டனர்.
    - o திண்ம உயிரியல் எரிபொருள் தராதரத் தேவைப்பாடு



SLS 1551 கணக்காய்வாளர் பயிற்சி வேலைத் திட்டம்

2. விறகிற்காக மரங்களை நடுகை செய்யும் திட்டம் தற்போது 900 ஹெக்டயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது வனவியல் திணைக்களத்தினால் நன்கு பராமரிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படுவதோடு, தெங்கு அபிவிருத்தி சபை, இறப்பர் ஆராய்ச்சி நிலையம், பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

- எதிர்பார்க்கப்பட்ட 5 திட்டங்களுடன் ஒப்பிடுகையில், தற்போது எரிபொருளுக்காக 14 பெருந்தோட்ட மர உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- உயிரியல் வாயு வளங்கள் பற்றிய ஆராய்ச்சி, காணிப் பயன்பாடு மற்றும் கிடைக்கப்பெற்றுள்ள காணிகளின் அளவுகள் என்பனவற்றைப் பொறுத்து, பல்வேறு பெருந்தோட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் வெவ்வேறு வகையான ஆராய்ச்சிகளும், தற்போதைய முகாமைத்துவ முறைகள், சமூக பொருளாதார அனுகூலங்கள் மற்றும் சவால்கள் என்பன ஆய்வு செய்யப்பட்டு 11 மாவட்டங்களில் இவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- நிலையான முறையில் விறகு உற்பத்திக்கான ஒரு தராதரத் தேவைப்பாடு (SLS 1551:2016) பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான சான்றிதழ் வழங்கும் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கென 25 கணக்காய்வாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.
- 1,400 க்கும் மேற்பட்டோரின் பங்கேற்புடன் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 40 சமூக அளவிலான விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் தெரிவுநிலை நிகழ்வுகள் நிறைவடைந்தன.
- எரிபொருளுக்கான மிகச் சிறந்த பெருந்தோட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் மாதிரிகளும் அதுகுறித்த கேயேடும் பிரசுரிக்கப்பட்டன.

3. 2017 நவம்பரில், கொழும்பில் உயிரியல் திணிவு சக்தி வலு உற்பத்தி தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதில் தினசரி 40 மெற்றிக் தொன் விறகுத் துண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. மொனராகலையில் அமைக்கப்பட்ட உயிரியல் திணிவு சக்தி வலு தொழிற்சாலை 2018 ஜுலை மாதம் திறந்து வைக்கப்பட்டது. இவற்றின் தரவு மையங்கள் (பூர்த்தி நிலையை அடைந்து வருவதோடு) 90% பூர்த்தியடைந்துள்ளது. அவை பயன்படுத்தும் நிலையை எட்டும் அளவில் உள்ளன.

4. பல்வேறு உயிரியல் வாயு பயன்பாடுகள் பற்றிய விளக்கமளிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் முக்கியமாக உயிரியல் திணிவு சக்தி வலு தொழில்நுட்பங்கள் தொடர்பாக 31 ஆகுமை ஆய்வுகளும், 26 பரீட்சார்த்த தொழில்நுட்ப செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

மொத்தமாக 18 கருத்தரங்குகள் நடத்தப்பட்டு அவற்றில் 800 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இதில் பிரதானமாக பொறியியலாளர்கள் (குருநாகல்) தொழிற்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் (பதுளை, காலி, இரத்தினபுரி) ஆகியோரும் கலந்து கொண்டனர். தேயிலைத் துறையில் 235 அதிகாரிகள், 30 பொறியியலாளர்கள், 200 சட்ட வல்லுநர்கள் ஆகியோர் இதில் பயிற்றுவிக்கப்பட்டனர். உயிரியல் வாயுவை நிலையான முறையில் தயாரிப்பது மற்றும் பயன்படுத்துவது பற்றிய தொழில்நுட்பமும் இங்கு விளக்கப்பட்டது.

- இலங்கையில் உள்ள உயிரியல் திணிவு எரிசக்தி மாற்று அமைப்புகளில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்த தொழில்நுட்ப ஆய்வு அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு முக்கிய பங்குதாரர் சரிபார்ப்பு பட்டறைகள் மூலம் சரிபார்க்கப்பட்டது.

- 5,000 துண்டுப் பிரசுரங்கள் (ஆங்கிலத்தில் 2,500 மற்றும் சிங்கள மொழியில் 2,500), 1,000 கையேடுகள் மற்றும் நிலையான உயிரியல் திணிவு உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்த வீடியோ வெளியிடப்பட்டுள்ளது.

## (ஆ) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத் திட்டம் (UNDP) / சர்வதேச சுற்றாடல் வசதி என்பனவற்றின் (GEF) நிதியுதவியுடன் நடத்தப்பட்ட தேசிய அளவிலான தேவையான கட்டுப்பாட்டு நடவடிக்கைத் (NAMA) திட்டம்

NAMA வேலைத்திட்டத்தின் மூலம் பச்சை வாயு (GHG) உற்பத்தியை அளவீடு செய்து அதனைக் குறைப்பதற்கும், அதனால் ஏற்படக் கூடிய அனுகூலங்கள் பற்றி சக்தி வலுத் துறையில் இறுதிப் பயனாளிகளுக்கு விளக்கமளிக்கும் வகையிலும் அவற்றைக் கட்டுப்படுத்தும் வகையிலும் MRV திட்டம் ஒன்றும் விரிவான கட்டமைப்பு ஒன்றும் உருவாக்கப்படுகிறது. இந்தக் கட்டமைப்பின் ஊடாக உயிரியல் சமிபாடு செயற்பாட்டின் செயற்திறனை அதிகரிக்கும் வகையில் மோட்டார்களைப் பயன்படுத்துவதை தேயிலைத் தொழிற்சாலைகளில் முன்னெடுத்தல் மற்றும் பற்றரிகளின் பயன்பாட்டுடன் சூரியக் கதிர் ஊடாக சோலார் PV நிகர அளவீட்டுத் தொகுதிகளின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வது என்பன இந்தக் கட்டமைப்பின் கீழ் வழிகாட்டப்பட்ட விடயங்களாகும்.

2018 ஆம் ஆண்டின் இறுதியில், பின்வரும் வளர்ச்சி நிலைகளை இந்த வேலைத் திட்டங்கள் அடைந்துள்ளன:

- இந்த வேலைத் திட்டத்தின் ICT யை மையமாகக் கொண்ட தரவு சேகரிப்புத் தொகுதி பூர்த்தி நிலையை அடைந்துள்ளது. அதன் மூலம் சக்தி வலு துறையில் பரீட்சார்த்த வேலைத் திட்டங்களின் தரவுகள் ஒன்று சேர்க்கப்படுகின்றன.

- அண்ணளவான தணிவு செலவு வரைபு (MACC) பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது, சக்தி வலு துறையில் பூர்த்தி செய்யப்பட்டு, இதன் பெறுபேறுகள் தேசிய அளவிலான ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடப்பட்டு கட்டுப்பாடுகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

- சக்தி வலு துறைக்கான MRV கட்டமைப்பு மற்றும் MRV நெறிமுறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு ஒவ்வொரு பரீட்சார்த்த வேலைத் திட்டத்திற்குமாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. NAMA நிறுவன அடிப்படையிலான ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டுள்ளன.

- 342 மாறி அதிர்வெண் இயக்கி (VFD) தொகுதிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை 48 தேயிலைத் தொழிற்சாலைகளில் முதல் கட்ட அடிப்படையில் VFD பொருத்துதலுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- ஐந்து மாகாணங்களில் 200 க்கும் மேற்பட்ட உயிரியல் வாயு சமிபாட்டுத் தொகுதிகள் பொருத்தப்பட்டுள்ளன.

- இந்த வேலைத் திட்டத்தின் மூலம் $CO_2$ மொத்தம் 3,750 தொன் வெளியேற்றம் தடுக்கப்பட்டுள்ளதோடு, 5,850 GJ சக்தி வலு சேமிக்கப்பட்டுள்ளது.

## (இ) மின் விநியோக உறுதித் தன்மையை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம்

உறுதியான மின் விநியோகம் பெற்றுக் கொடுக்கப்படுவதைத் தரமுயர்த்தும் வேலைத் திட்டம் ஒன்றை இலங்கை மின்சார சபை, LECO, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை மற்றும் தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை என்பன இணைந்து செயற்படுத்தின. இதற்கு இ.நி.வ.அ.ச. மற்றும் NWSDB ஆகியன செயற்பாட்டு நிறுவனங்களாகக் காணப்படும். இதன் உப அம்சமாக, சிறிய தீவுகளிலும், கிராம மட்டங்களிலும் பின்தங்கிய கிராமங்களில் செயற்திறன் மிக்க முறையில் சக்தி வலு பயன்பாட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனடிப்படையில், பிரதானமாக வட மாகாணத்தின் யாழ். பிரதேசத்தில் மூன்று (நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு) தீவுகளில் ஜப்பானிய வறுமை ஒழிப்பு நிதியத்திலிருந்து (JFPR) இந்த பணிக்குத் தேவையான நிதி உதவி பெறப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் மேற்பார்வையில் இது மேற்கொள்ளப்பட்டது.

இந்த உப வேலைத் திட்டத்தின் மூலம் பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், பிரதானமாக மகளிரின் வாழ்வாதாரங்களை உயர்த்தவும் எதிர்பார்க்கப்பட்டது. அதற்காக,

(i) மின் உபகரணங்களை பாதுகாப்பாக்ப பயன்படுத்துவதற்கான பயிற்சி வழங்கல்.

(ii) மின்சார வசதிகளைப் பெற்றதும் ஏற்படக்கூடிய புதிய வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு பயிற்சி வழங்குதல்.

(iii) சிறிய மற்றும் அடிக்கடி ஏற்படக்கூடிய பழுது பார்ப்பு வேலைகள், செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புகளுக்காக ஊழியர்களைப் பயிற்றுவித்து தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல். அதற்காக ஒன்றிணைக்கப்பட்ட மீள் சுழற்சி சக்தி வலு திட்டங்கள் போன்ற நடவடிக்கைகளுக்குப் பயிற்சி வழங்குதல். மற்றும்,

(iv) மேலதிக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருதி செய்தல்



NAMA வேலைத் திட்டத்திற்கான பரீட்சார்த்த நடவடிக்கை

## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு மனித வள அபிவிருத்தி எப்போதுமே மிக முக்கியமான ஒரு அம்சமாகக் காணப்பட்டது. இதில் அதிகார சபையின் உள்ளக ஊழியர்களும், துறைசார்ந்தவர்களும் பிரதானமானவர்கள். இத்தொழிற்துறை மூலம் சமூகத்தில் மிக முக்கிய பங்களிப்புக்களைப் பெற்றுக்கொடுப்பவர்களுக்கு, பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்து, அவர்களின் அறிவு மற்றும் ஆற்றல்களை விருத்தியடையச் செய்வது எமது நோக்கமாகும்.

### வெளிக்கள மனித அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

ஆய்வுக்குட்பட்ட ஆண்டில், சூரிய மின் உற்பத்தி தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்களும், திறன் அபிவிருத்தித் திட்டங்களும் நடத்தப்பட்டன. சூரிய மின்சாரம் தொடர்பான சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு 05 நாட்களாக நடத்தப்பட்ட முழுமையான இரண்டு பயிற்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் கூரையில் பொருத்தப்படும் சோலார் PV தொகுதிகளை பொருத்துவதில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை உருவாக்குதல் அதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்களை அதிகரித்தல் என்பனவற்றுடன் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையையும் அதிகரிக்க எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நிலையான சக்தி வலு தொடர்பான பல்வேறு பயிற்சிகள், கருத்தரங்குகளில் இ.நி.வ.அ.ச. ஊழியர்கள் தமது அறிவையும், ஆற்றல்களையும் பகிர்ந்து கொண்டார்கள். இவ்வாறான பயிற்சித் திட்டங்கள் மூலம், சமூகத்தின் பல்வேறு பிரிவுகளில் உதாரணமாக, பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகங்கள், தொழில் நிபுணத்துவ நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், ஊடகங்கள் உட்பட மேலும் பல சமூகப் பிரிவுகள் நாடு தழுவிய ரீதியில் இத்துறையில் அறிவைப் பெற்றுக்கொண்டன. இ.நி.வ.அ.ச. மேலும் ஒவ்வொரு காலாண்டுக்கு ஒருமுறையும் இந்தத் துறையில் ஆர்வம் காட்டுவோருக்கென, விசேடமாக இளம் சந்ததியினரை உள்ளடக்கும் வகையில் காலாண்டு சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு வருகிறது.





ஹம்பாந்தோட்டையில் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி சேவை வழங்கும் நிறுவன ஊழியர்களுக்கு இ.நி.வ.அ.ச. அதிகாரிகள் வழங்கிய பயிற்சி

## உள்ளக மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள்

மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகளில் உள்ளக ஊழியர்களின் அறிவு மற்றும் திறன் என்பனவற்றை விருத்தி செய்வதற்காக சக்தி வலு மற்றும் அவை சார்ந்த பகுதிகளில் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இதற்காக ஊழியர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் மற்றும் உள்நாட்டில் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்பட்ட செயலமர்வுகளில் கலந்து கொள்ளச் செய்தல் என்பன குறிப்பிடத்தக்கவை. வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள், பிரதானமாக, சூரிய மின்சக்தி மற்றும் காற்று வழியான மின்சக்தி, நிலைபேறான சக்தி வலுவை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துதல் என்பனவற்றுடன் சக்தி வலு களஞ்சியப்படுத்தல் தொடர்பாகவும் அமைந்திருந்தது. உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்கள், வெகுசன ஊடகங்கள் மற்றும் பொருட்கள் கொள்வனவு சம்பந்தமான விடயங்களை மையமாகக் கொண்டிருந்தன.



சர்வதேச சூரிய மின் சக்தி ஒன்றுகூடல் அங்கத்துவ நாடுகள் அடிப்படையில் நடைபெற்ற ITEC மாஸ்டர் ரெயினர் வேலைத் திட்டம், இந்தியா



மீள் சுழற்சி சக்தி வலு தொடர்பான SAARC விசேட வேலைத் திட்டம், தென் கொரியா




தென் கொரியாவில் ESS செயற்பாட்டுத் தொகுதி மற்றும் தொழில்நுட்ப சுற்றுலா

## செயற்பாட்டுத் திட்டம் 2019

பின்வரும் திட்டங்கள் கேள்விப் பகுதி முகாமைத்துவம் மற்றும் தேவைப் பகுதி முகாமைத்துவம் ஆகியவற்றின் கீழ் 2019 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டவையாகும்.

### வழங்கல் பகுதி முகாமைத்துவம்

1. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வள ஒதுக்கீட்டு செயல்முறையுடன் திட்டங்களை எளிதாக்குதல் மற்றும் கண்காணித்தல்.
2. திட்ட அமுலாக்க செயல்முறை மற்றும் மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடு குறித்த பங்குதாரர்களின் விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் செயலமர்வுகள்.
3. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட மீள் சுழற்சி சக்தி வலு வேலைத் திட்டங்களின் செயற்பாடுகள் பெறுபேறுகளைக் கண்காணித்தல்.
4. காற்று வழி சக்தி வலு உருவாக்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்
5. சக்தி வலு பூங்காக்களை அமைத்தல் (சியம்பலாண்டுவ மற்றும் பூநகரி)
6. சூரிய மின்சார உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சூரிய மின்சாரத்தைக் களஞ்சியப்படுத்துதல் மற்றும் மிதக்கும் சூரிய மின்சார உற்பத்தி போன்ற புதிய தொழில்நுட்பங்களில் பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
7. சூரிய பல சங்கிரமய
8. தூய சக்தி வலு மற்றும் வலையமைப்பின் செயற்திறன் வேலைத் திட்டம்
9. UNDP/GEF நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட நிலையான உயிரியல் திணிவு வேலைத் திட்டம் (கட்டம் II)
10. UNDP/GEF நிதி மூலம் NAMA வேலைத்திட்டம்
11. சீரான மின் விநியோக அபிவிருத்தி வேலைத் திட்டம்
12. மீள் சுழற்சி சக்தி வலு நடவடிக்கைப் பிரிவுகளை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் (ஹம்பாந்தோட்டை மற்றும் இந்துறான)

### கேள்விப்பகுதி முகாமைத்துவம்

1. சக்தி வலு முகாமைத்துவ வேலைத் திட்டங்களுக்கென சக்தி வலு முகாமையாளர்கள், சக்தி வலு கணக்காய்வாளர்கள் மற்றும் ESCO களை உருவாக்குதல்.
2. மின்சக்தி பாவனை கட்டுப்பாட்டு எல்லைகளை உருவாக்குதல்.
3. சக்தி வலுவை செயற்திறனுடன் பயன்படுத்தும் வீடுகள் மற்றும் கட்டடங்களுக்கான செயன்முறைகளை அமைத்தல்.
4. கூரை மின் விசிறி, கணனி, குளிர்சானப் பெட்டிகள், LED மின் விளக்குகள், டியூப் லைட்டுகள் மற்றும் நிலைப்படுத்தல்கள், அறைகளுக்கான குளிரூட்டிகள் என்பனவற்றுக்கு மின்சக்தி பயன்பாட்டு அளவுகளைக் குறியிடும் வேலைத் திட்டம்
5. இலங்கை தேசிய சக்தி வலு செயற்திறன் விருதுகள்
6. சக்தி வலு பயன்பாடு பற்றிய தரவுகளை இறுதிப் பயனாளிகள் மூலம் ஒன்று சேர்த்தல் மற்றும் முறைமைப்படுத்துதல்.
7. சக்தி வலு செயற்திறன் அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் ஆகுமை ஆராய்ச்சிகள் மற்றும் பரீட்சார்த்த வேலைத் திட்டங்கள்
8. செயற்பாட்டுக் கேள்விப் பகுதி முகாமைத்துவ (ODSM) வேலைத் திட்டம்
9. சக்தி வலு தொடர்பான கல்வி மற்றும் ஊக்குவிப்பு வேலைத் திட்டங்கள்



உரிய நேரத்தில் போதுமான அளவு நிதி வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான உட்கட்டமைப்பு மற்றும் வரையறைகளை உருவாக்குதல், செலவுகளுக்கு ஏற்ற பெறுமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் மீள் சுழற்சி சக்தி வலு திட்டங்களை அடையாளம் கண்டு செயற்படுத்துதல், தேசிய மட்டத்தில் மீள் சுழற்சி சக்தி வலுவின் பங்களிப்பை அதிகரித்தல் மற்றும் அவற்றுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என்பன இ.நி.வ.அ.ச. யின் இலக்குகளில் பிரதானமானவை.



# நிதித்துறைத் தகவல்கள்

# வருமான அறிக்கை

| | குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| செயற்படு வருமானம் | 2 | 853,080,087 | 295,154,683 |
| செயற்பாடற்ற வருமானம் | 3 | 67,551,064 | 270,591,538 |
| **மொத்த வருமானம்** | | 920,631,151 | 565,746,221 |
| **செலவுகள்** | | | |
| **கருத்திட்டம்/செயற்பாடு சார்ந்த செலவுகள்** | 4 | | |
| புதுப்பிக்கத்தகு வலு | 4.1 | 284,068,203 | 227,448,436 |
| வலு முகாமைத்துவம் | 4.2 | 18,510,107 | 16,485,745 |
| அறிவு முகாமைத்துவம் | 4.3 | 12,976,760 | 20,506,782 |
| மூலோபாய நடவடிக்கைகள் | 4.4 | 2,926,150 | 4,856,913 |
| | | 318,481,220 | 269,297,876 |
| **நடைமுறைச் செலவுகள்** | 5 | | |
| சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | 5.1 | 94,375,523 | 89,676,107 |
| பிரயாணமும் வாழ்க்கைப்படி செலவுகளும் | 5.2 | 1,005,671 | 1,439,234 |
| வழங்கல்கள் | 5.3 | 3,755,925 | 4,418,298 |
| பராமரிப்புச் செலவினம் | 5.4 | 7,825,793 | 8,486,842 |
| ஒப்பந்தம்சார் சேவைகள் | 5.5 | 39,132,316 | 35,339,903 |
| தேய்மானம்சார் செலவினம் | 5.6 | 351,857,878 | 92,808,654 |
| ஏனைய நடைமுறைச் செலவினம் | 5.7 | 12,342,441 | 12,577,014 |
| | | 510,295,547 | 244,746,052 |
| **மொத்தச் செலவுகள்** | | 828,776,767 | 514,043,928 |
| **மிகை/(பற்றாக்குறை)** | | 91,854,384 | 51,702,293 |

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்காகவும், அதன் சார்பாகவும்,

| பணிப்பாளர் (நிதி) | பணிப்பாளர் நாயகம் | தலைவர் |
|---|---|---|

54 லிருந்து 57 ஆம் பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகளும், 58 லிருந்து 74 ஆம் பக்கங்களில் உள்ள குறிப்புக்களும் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். இந்த நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும், விநியோகிப்பதற்கும் சபையின் முகாமைத்துவமே பொறுப்பானது. இந்த நிதி அறிக்கைகள், சபை முகாமைத்துவத்தினரால் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றின் சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ளன.

| பணிப்பாளரின் பெயர் | கையொப்பம் |
|---|---|
| 1 ஏ. எம். ஆர். ஜெ. கே. ஜயசிங்க | |
| 2. எஸ். தர்ஷன் | |

# நிதிநிமை அறிக்கை

| | குறிப்பு | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும் | 9 | | |
| சுயாதீன சொத்துக்கள் | 9.1 | 541,878,399 | 877,417,703 |
| குத்தகைக்கு அடிப்படையிலான சொத்துக்கள் | 9.2 | 40,506,532 | 42,035,080 |
| கட்புலனாகாச் சொத்துக்கள் | 10 | 3,467,173 | 4,969,260 |
| நடைபெறும் வேலை | 11 | 46,753,399 | 35,699,243 |
| முதலீடுகள் | 12 | 93,587,042 | 84,907,165 |
| கடன்களின் மீளறவீடு | 13 | - | 49,780,000 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | 726,192,545 | 1,094,808,450 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பெறவேண்டி தொகைகள் | 14 | 20,035,241 | 21,557,402 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 15 | 34,557,498 | 37,990,919 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 16 | 452,808,494 | 392,179,336 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 507,401,233 | 451,727,657 |
| **மொத்த சொத்துக்கள்** | | 1,233,593,778 | 1,546,536,108 |
| **உரித்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **உரித்துக்கள்** | | | |
| திரட்டிய நிதி | 17 | 22,100,336 | 22,100,336 |
| நிகர மிகை/பற்றாக்குறை | | 164,786,083 | 99,679,846 |
| ஒத்திவைக்கப்பட்ட மானியம் | 18 | 458,513,634 | 809,739,764 |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதி | 20 | 335,605,770 | 318,204,590 |
| நிலைபெறுதகு உத்தரவாத நிதி | | 98,275,578 | 89,899,767 |
| திரண்ட மீள் மதிப்பீடு | | 101,217,000 | 101,217,000 |
| **மொத்த உரித்துக்கள்** | | 1,180,498,401 | 1,440,841,303 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடை பொறுப்புக்கள் | | 23,907,730 | 20,213,314 |
| ஆ.அ.வயிடமிருந்து கடன்கள் (L 2892 SRI) | | - | 49,780,000 |
| ஆ.அ.வயிடமிருந்து கடன்கள் (L 2733 SRI) | | - | 2,020,356 |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | 23,907,730 | 72,013,670 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| ஏனைய கொடுப்பனவுகள் | 19 | 24,138,162 | 28,631,649 |
| காணி சுவீகரிப்பின் பேரிலான தேறிய வைப்பு | | 5,049,485 | 5,049,485 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | 29,187,647 | 33,681,134 |
| **மொத்தப் உரித்துகளும் பொறுப்புக்களும்** | | 1,233,593,778 | 1,546,536,107 |

54 லிருந்து 74 ஆம் பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# பங்குகளில் மாற்றம் பற்றிய அறிக்கை

| விபரம் | திரட்டிய நிதி | நிகர மிகை / பற்றாக்குறை |
|---|---|---|
| 2016.01.01 இல் நிலுவை | 22,100,336 | 88,848,196 |
| 2016 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) | - | 6,463,693 |
| முந்திய ஆண்டின் சீராக்கம் | - | (879,123) |
| நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் | - | (157,454) |
| 2016.12.31 இல் நிலுவை | 22,100,336 | 94,275,312 |
| முந்திய ஆண்டின் சீராக்கம் | - | (8,792,776) |
| 2017.01.01 இல் மீட்கப்பட்ட இருப்பு | 22,100,336 | 85,482,536 |
| 2017 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) | - | 51,702,295 |
| உத்தரவாத நிதியத்திற்கு மாற்றம் | - | (7,963,789) |
| எரிசக்தி நிதியத்திற்கு மாற்றம் | - | (29,541,196) |
| காணி மீள் மதிப்பீடு | - | - |
| 2017.12.31 இல் நிலுவை | 22,100,336 | 99,679,846 |
| முந்திய ஆண்டின் சீராக்கம் | | (15,237,021) |
| 2018.01.01 இல் மீட்கப்பட்ட இருப்பு | 22,100,336 | 84,442,825 |
| 2018 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) | | 91,854,384 |
| உத்தரவாத நிதியத்திற்கு மாற்றம் | | (8,748,144) |
| எரிசக்தி நிதியத்திற்கு மாற்றம் - வருமானம் | | (24,346,730) |
| எரிசக்தி நிதியத்திற்கு மாற்றம் - திட்டம் காலாவதி | | 21,583,748 |
| காணி மீள் மதிப்பீடு | | |
| 2018.12.31 இல் நிலுவை | 22,100,336 | 164,786,083 |

கணக்கியல் கொள்கைகளும் 54 லிருந்து 74 வரையிலான குறிப்புக்களும் நிதி அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

| ஒத்தி வைக்கப்பட்ட மானியம் | மறுமதிப்பீட்டு இருப்பு | இலங்கை நிலைபேண் சக்தி நிதி | நிலைபேண் உத்தரவாத நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 985,822,817 | - | 205,446,714 | 76,591,020 | 1,378,809,083 |
| (104,609,567) | - | 87,810,523 | 5,344,958 | (4,990,393) |
| - | - | - | - | (879,123) |
| - | - | - | - | (157,454) |
| 881,213,250 | - | 293,257,237 | 81,935,978 | 1,372,782,113 |
| - | - | (4,593,843) | - | (13,386,619) |
| 881,213,250 | - | 288,663,394 | 81,935,978 | 1,359,395,494 |
| (71,473,486) | - | - | - | (19,771,191) |
| - | - | - | 7,963,789 | - |
| - | - | 29,541,196 | - | - |
| - | 101,217,000 | - | - | 101,217,000 |
| 809,739,764 | 101,217,000 | 318,204,590 | 89,899,767 | 1,440,841,303 |
| (896,800) | | 14,638,198 | (372,333) | (1,867,956) |
| 808,842,964 | 101,217,000 | 332,842,788 | 89,527,434 | 1,438,973,347 |
| (350,329,330) | | | - | (258,474,946) |
| | | | 8,748,144 | - |
| | | 24,346,730 | | - |
| | | (21,583,748) | | - |
| | | | | - |
| 458,513,634 | 101,217,000 | 335,605,770 | 98,275,578 | 1,180,498,401 |

# காசுப் பாய்ச்சல் அறிக்கை

| | குறிப்பு | 2018 | 2017 (மீள் செயற்பாடு) |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| ஆண்டுக்கான மிகைகள்/ (பற்றாக்குறை) | | 91,854,384 | 51,702,295 |
| **சீராக்கங்கள்:** | | | |
| இழப்பு மற்றும் சேதம் | | - | - |
| வட்டி வருமானம் | 3 , 8 | (19,379,480) | (20,285,998) |
| கழிக்கப்பட்ட மானியம் (பெற்ற நிதிகளுக்காக) | 7 | (351,226,130) | (91,280,105) |
| சக்தி உத்தரவாத நிதியத்திற்கு மாற்றப்பட்ட நிதி | | - | - |
| சேவைப் பணிக்கொடை நிதி ஏற்பாடு | | 4,378,837 | 4,265,245 |
| பணிக்கொடை கொடுப்பனவு | | (684,422) | (896,513) |
| மறுமதிப்பீட்டு இழப்பு/(மிகை தேய்மானம்) | | 257,115,812 | |
| தேய்மானம் | 5.6 | 91,278,282 | 92,808,654 |
| **செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முந்திய செயற்படு இலாபம் / (நட்டம்)** | | 73,337,283 | 36,313,578 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் (அதிகரிப்பு)/குறைவு | | 3,984,427 | 8,605,626 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களில் அதிகரிப்பு/ (குறைவு) | | (6,513,843) | (11,922,463) |
| **செயற்படு நடவடிக்கைகளிலிருந்து /(பயன்படுத்தப்பட்ட) நிகர காசுப் பாய்ச்சல்** | | 70,807,866 | 32,996,741 |
| ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்வனவு | 9.1 | (9,664,155) | (3,993,230) |
| அருவச் சொத்துக்கள் | | (160,000) | - |
| நடைபெறும் வேலை | 11 | (11,054,156) | (15,813,389) |
| நிலையான வைப்பு மற்றும் பிறை சேரி உண்டியல் முதலீடு | 12 | (8,679,877) | (7,136,271) |
| வட்டி வருமானம் | 3 , 8 | 19,379,480 | 20,285,998 |
| அபிவிருத்தியாளர்களுக்கான கடன் விநியோகம் | | - | 1,547,708 |

| | குறிப்பு | 2018 | 2017 (மீள் செயற்பாடு) |
|---|---|---|---|
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்தப்பட்ட) நிகர காசுப் பாய்ச்சல்** | | (10,178,708) | (5,109,184) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்தப்பட்ட) நிகர காசுப் பாய்ச்சல்** | | | |
| ஒத்தி வைக்கப்பட்ட மானியம் | 18 | - | 19,806,619 |
| இலங்கை நிலைபெறுதகு வலு நிதியம் | | - | - |
| திரண்ட நிதி | | - | - |
| நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதியம் | | - | - |
| வெளிநாட்டு நன்கொடையாளர்களுக்கு மீளச் செலுத்த வேண்டிய கடன்கள் | | - | - |
| ஆ.அ.வயிடமிருந்து கடன்கள் (L 2892 SRI) | 13 | - | 13,332,292 |
| ஆ.அ.வ வழங்கிய கடன்கள் (L 2733 SRI) | 13 | - | (14,880,000) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்தப்பட்ட) நிகர காசுப் பாய்ச்சல்** | | - | 18,258,911 |
| **நிகர காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் அதிகரிப்பு/(குறைவு)** | | 60,629,158 | 46,146,468 |
| **ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 16 | 392,179,336 | 346,032,869 |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | | 452,808,494 | 392,179,337 |

54 லிருந்து 74 ஆம் பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. கூட்டிணைப்புத் தகவல்கள்

### 1.1 பொது

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (நி.வ.அ.ச), 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. இந்த சபை, கொழும்பு 07 என்ற முகவரியிலுள்ள, பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் 05ஆம் இலக்க கட்டடத் தொகுதியில் அமைந்துள்ளது.

1985 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க சக்தி பாதுகாப்பு நிதிய சட்டமானது (ச.பா.நி), 2007 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தினால் இரத்துச் செய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதிக்கான ச.பா.நி சகல சொத்துக்களும், பொறுப்புக்களும் 2007 அம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி செயல்வலுப் பெறும் வகையில் தானாகவே இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு மாற்றப்பட்டுள்ளன.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் கீழ் இயங்கி வந்த ஒளியேற்றலுக்கான பிராந்திய நிலையம் (ஒ.பி.நி), மின் வலு சக்தி அமைச்சிலிருந்து கிடைத்த அறிவுரைகளின்படி, இலங்கை மின்சார சபைக்கு மாற்றிக் கையளிக்கப்பட்டது. அதற்கிணங்க, குறித்த ஒளியேற்றலுக்கான பிராந்திய நிலைய சொத்துக்களும், பொறுப்புக்களும் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்டதுடன், அந்த நிலையத்தின் ஊழியர்களும் அவ்வாறே அன்றைய தினத்திலிருந்து மாற்றப்பட்டனர்.

### 1.2 அதிகார சபையின் முக்கிய செயற்பாடுகள்

மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும், சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துவதற்கும், சக்தி வினைத்திறன், சக்திப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கும், நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும், சக்திப் பாதுகாப்பையும், சக்தியின் நம்பத்தகுந்த தன்மையையும், சக்தி விநியோகத்திலுள்ள ஆகுசெலவு பயனையும் மற்றும் தகவல் முகாமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்கும் என இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

### 1.3 அதிகார சபையின் நிதியங்கள்

2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தின் பிரகாரம், 03 நிதியங்களை இயக்கி, நிருவகிப்பதற்கு இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை தேவைப்படுத்தப்படுகின்றது. அத்தகைய நிதியங்கள் பின்வருமாறு காணப்படும்:

#### 1.3.1 அதிகார சபை நிதியம்

ஆரம்ப மூலதனத்தையும், சக்தி அனுமதிப் பத்திரக் கட்டணங்களையும், கடன்களையும், குத்தகை வாடகைகளையும் மற்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய வருமதிகளையும் வைப்புச் செய்யும் பொருட்டு இந்த நிதியம் நிருவகிக்கப்படுகின்றது. அதிகார சபை, குறித்த சட்டத்தின் பிரகாரம், அதிகாரத் தத்துவங்களைப் பிரயோகித்து, தனது தொழிற்பாடுகளையும், கடமைகளையும் மேற்கொண்டு நிறைவேற்றும் போது, அதிகார சபைக்கு ஏற்படும் செலவுகளை ஈடு செய்வதற்கு, அத்தகைய நிதியிலிருந்து அத்தகைய செலவுகளுக்கான சகல நிதிகளும் செலுத்தப்படுதலும் வேண்டும்.

#### 1.3.2 இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம்

திரண்ட நிதியிலிருந்து கிடைக்கும் ஆரம்ப மானியத்தையும், அரச கட்டணங்களையும், செஸ் வரி வருமானத்தையும், தொழில் சார்ந்த தேவைகளுக்கான கட்டணங்களையும், குத்தகை வாடகைகளில் இருந்து கிடைக்கும் நிதிகளையும், விண்ணப்பக் கட்டணங்களையும், காபன் சொத்துக்களை நிருவகிப்பதற்காகக் கிடைக்கின்ற கட்டணங்களையும் வைப்புச் செய்யும் பொருட்டு இந்த நிதியம் நிருவகிக்கப்படுகின்றது.

மீளப் புதுப்பிக்கத்தகு சக்திப் பாதுகாப்புப் பொறித் தொகுதிகளுக்கான மானியங்கள், சக்தி வினைத்திறனுடைய மின் உபகரணங்களையும் மற்றும் தொழில்நுட்பங்களையும் ஊக்குவிப்பதற்கான மானியங்கள், எரிபொருள் சுவிட்ஸினுக்கான மானியங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவுகள் மற்றும் சக்திப் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான ஊக்குவிப்பு நிதிகள் என்பவற்றுக்கு இந்த நிதியத்திலிருந்து செலவுகள் செய்யப்படுதல் வேண்டும்.

#### 1.3.3 நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதியம்

சக்தி வினைத்திறன் தொடர்பான கருத்திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றும் பொருட்டு, கடன் வசதிகளுக்காக விண்ணப்பிக்கும் முதலீட்டுத் தரப்புக்களின் சார்பாக, உத்தரவாதத்தை வழங்குவது இந்த நிதியத்தின் நோக்கமாகும். குறித்த சட்டத்தின் பிரகாரம், திரண்ட நிதியிலிருந்து கிடைக்கும் ஆரம்ப மூலதனம், வருடாந்த தவணைக் கட்டணங்கள், வழங்கப்படும் உத்தரவாதங்களுக்கான வட்டிகள், அதிகார சபையின் நிதியத்திலிருந்து கிடைக்கும் நிதிகள் என்பன இந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

### 1.4 ஊழியர்களின் எண்ணிக்கை

2018.12.31 ஆம் திகதிக்கான ஊழியர்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

## 2.1 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கம்

### 2.1.1 கணக்குகள் தயாரித்தல் அடிப்படை மற்றும் இணக்கப்பாடு பற்றிய கூற்று

2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் (இ.நி.வ.அ.ச) ஐந்தொகை, வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, ஒப்புரவு மாற்றம் பற்றிய கூற்று மற்றும் கணக்குகளுக்கான குறிப்புகள் என்பன, இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கும், அதேவேளை, கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவு இணக்கப்பாட்டின் கீழ் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான விடத்து, கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கு தொடர்பான அடுத்து வரும் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1.2 ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளில் உள்ள மாற்றங்களை உறுதி செய்யும் பொருட்டு, ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் சீராக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டுப் புள்ளி விபரங்கள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 2.2.1 அரசாங்க மானியங்களுக்கான கணக்கீடும் அரசாங்க மானியங்களின் வெளிப்படுத்துகையும்

அரசாங்க மானியங்கள், மூலதன மானியங்கள் மற்றும் மீண்டெழும் மானியங்கள் என இரண்டு வகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஊழியர்களின் சம்பளங்கள், கட்டட வாடகைகள் முதலியன போன்ற மீண்டெழும் செலவுகளை ஈடு செய்வதற்கு, மீண்டெழும் மானியம் பயன்படுத்தப்படுகின்றது. நிகழ்ச்சித் திட்டங்களுக்கான (செயற்பாடுகள்) செலவுகளையும், நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்கான செலவுகளையும் ஈடு செய்வதற்கு மூலதன மானியம் பயன்படுத்தப்படுகின்றது. செயற்பாடு / நிகழ்ச்சித் திட்டம் சார்ந்த செலவுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் அடங்குவதால், அத்தகைய செலவுகள் மூலதன மானியத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

நிலையான சொத்துக்கள் கொள்வனவுக்குப் பயன்படுத்தப்படும் அரச மூலதன மானியம் ஆண்டுக்கான வருமானமாகக் கருதப்படுகின்றது.

செயற்பாடுகள் / நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய மானியங்கள் செயற்பாடுகள் / நிகழ்ச்சித் திட்டங்கள் சார்ந்த செலவுகளுக்கான மூலதன மானியம் என்ற தலைப்பின் கீழ் வருமானக் கூற்றில் கடனாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.2.2 வெளிநாட்டு உதவிகளுக்கான கணக்குகள்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை, பல்வேறு வேலைத் திட்டங்களை வெளிநாட்டு உதவிகளுடன் முன்னெடுத்து வருகிறது. பெருந்தொகையான உதவிகள் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் UNDP என்பனவற்றிடமிருந்து கடன்களாகவும், நிவாரணங்களாகவும் கிடைக்கின்றன. எவ்வாறாயினும், சில உதவிகள், பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு நேரடியாகவே செலுத்தப்படுகின்றன. இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் பரிந்துரைகளுக்கு அமைய கடன்கள், இலங்கை மத்திய வங்கிக்கு அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு நேரடியாகவே வழங்கப்படுகின்றன. இவை யாவும் நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 2.2.3 நீண்டகால முதலீடுகளுக்கான கணக்கீடு

முதலீடுகள், அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்களிலும், தேசிய சேமிப்பு வங்கியின் வைப்புக்களிலும், வைப்புச் செய்யப்பட்டு ஆகுசெலவில் எடுத்துரைக்கப்படுகின்றன. ஆண்டின் இறுதியில் நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதிலிருந்து பெறக்கூடிய வட்டி அந்தந்த நிதியங்களில் வரவு வைக்கப்படுகின்றது.

### 2.2.4 வருமான இனங்காணல்

வருமானம், சக்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், மின்சார விற்பனை, பயிற்சிப் பாடநெறிக் கட்டணங்கள், கண்காட்சிகளில் இருந்தும் கருவி சாதனங்களின் வகைகளிலிருந்தம் கிடைக்கும் வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது. சக்தி நிலைபெறுதகு உத்தரவாத நிதியத்திலிருந்து கிடைக்கும் வட்டியின் பாகம் வருமானமாகக் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. அதேநேரம், அதன் மற்றொரு பாகம் மீள முதலீடு செய்யப்பட்டுள்ளது. நிதியத்திற்கு வருமானத்தை ஈட்டுவதற்கு / பராமரிப்பு ஆகுசெலவை ஈடு செய்வதற்கு அந்த நிதிப் பாகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2.5 இடைநேர் பொறுப்புக்களும் இடைநேர் சொத்துக்களும்

2008 மார்ச் 31 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், மரபு ரீதியற்ற மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தித் தரப்புக்களிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 897 மில்லியன் தொகையான ஒரு நிதியை இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை, இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டும். CESS ஊடான சம்பாத்தியங்கள், அரச கட்டணங்கள் முதலியவற்றிலிருந்து அல்லது திறைசேரியிடமிருந்து

நிதிகள் கிடைக்காவிட்டால், தற்பொழுது இந்தக் கொடுப்பனவைச் செலுத்தித் தீர்ப்பதற்கு இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையிடம் எந்த வருமான வழியும் கிடையாது. இவை பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவையாகும். ஆகையினால், இது ஒரு இடைநேர் பொறுப்பாக மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை, தனது ஹம்பாந்தோட்டை சூரிய சக்தி மின் நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை, இலங்கை மின்சார சபைக்கு மாதாந்த அடிப்படையில் விற்பனை செய்து வருகிறது.

## 2.3 ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும்

### 2.3.1 ஆகுசெலவும் விலை மதிப்பீடும்

நிலையான சொத்துக்கள், குறைந்த திரண்ட ஆகுசெலவு தேய்மான அடிப்படையில் எடுத்துரைக்கப்படுகின்றன. நிலையான சொத்துக்களுக்கான தேய்மானத்திற்கான ஏற்பாடு நேர் நிரல் முறையியனைப் பயன்படுத்திக் கணிப்பிடப்படுகின்றது. ஹம்பாந்தோட்டை சூரிய மின் பூங்கா இவ்வாண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, அதன் வருமான அறிக்கையில் இழப்பு மதிப்பீடுகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 2.3.2 தேய்மானம்

நிலையான சொத்துக்களின் தேய்மான வீதங்கள் அந்தச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பாவனைக் காலத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படும் என்பதுடன், திருத்தத்திற்கு உட்படவும் கூடும். தற்போதைய வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

ஆண்டிற்கான தேய்மான வீதம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| விபரம் | தேய்மான வீதம் |
|---|---|
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 25% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| போட்டோ பிரதி இயந்திரம் | 25% |
| கணனிகள் | 33.33% |
| மின்சார உபகரணங்கள் | 25% |
| நூலகப் புத்தகங்கள் | 20% |
| சக்தி உபகரணங்கள் | 33.33% |
| கண்காட்சி உபகரணங்கள் | 25% |
| காற்று சக்திக் கோபுரங்கள் | 20% |
| கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 5% |
| குளிர்சாதனப் பரிசோதனை ஆய்வகம் | 20% |

சூரிய சக்தி / சிறிய நீர் வலு கருத்திட்டங்கள்:

| | | |
|---|---|---|
| A. | சூரிய சக்திப் பலகைகள் | 5% |
| B. | உருக்கு நிர்மாணங்கள் | 10% |
| C. | கட்டடங்கள் | 5% |
| D. | சுவிட்ச் ஜியர் | 20% |
| E. | உட்திணி சாதனங்கள் | 20% |
| F. | மின்மாற்றிகள் | 5% |
| G. | மின்சார இலத்திரனியல் சாதனங்கள் | 33.33% |
| H. | சுகாதாரம் மற்றும் குழாய் அமைப்பு | 5% |
| I. | கேபெல்கள் | 20% |
| J. | தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 25% |
| K. | கருவிகள் | 33% |
| L. | இயந்திர சாதனங்கள் | 20% |
| M. | ஏனையவை | 20% |

### 2.3.3 அருவச் சொத்துக்கள்

கொள்வனவு செய்யப்பட்ட அருவச் சொத்துக்கள் தனித்தனியாகக் கணக்கிடப்பட்டு, அவற்றி பெறுமதி கொள்வனவுத் தொகையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வர்த்தகர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அருவச் சொத்துக்களின் பெறுமதியானது, அவற்றின் குறிப்பிட்ட கொள்வனவுத் திகதியில் காணப்படும் நியாயமான சந்தைப் பெறுமதியாகும். இந்தச் சொத்துக்களாவன ஆரம்பப் பதிவின் பின்னர் நிதிக் கூற்றுக்களில் செலவு அடிப்படையிலான நிதி நிலைமை என்ற பகுதியில் பெறுமதி சேர்ப்புக்கள் அல்லது பெறுமதி குறைப்புக்களின் பின்னர் கணக்கிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த அருவச் சொத்துக்கள், அவற்றின் பெறுமானத் தேய்வினை பாவனைக் காலத்திற்கு அமைய நேர் கோட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்பு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளன. இந்தக் காலப்பகுதியானது, ஒப்பந்தக் காலப்பகுதியை தாண்டாத வகையில் கணக்கிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மென்பொருள் | 5 வருடங்கள் |

## 2.4 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 2.4.1 பணிக்கொடை

பணிக்கொடைக்கு உரித்துடைய சகல ஊழியர்களுக்கும், அந்தந்த ஊழியர் தொடர்பில், குறித்த நிதியாண்டிற்கான கடைசி மாத சம்பளத்தின் அடிப்படையில் அரை மாத சம்பளத்திற்குச் சமமான ஒரு தொகை பணிக்கொடைக்கென ஒதுக்கப்படுகிறது.

### 2.4.2 ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர்கள் அந்தந்த நியதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் அமைய, ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி ஆகியனவற்றுக்குப் பங்களிப்புச் செய்ய உரித்துடையவர்களாவர். இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை, ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி ஆகியவற்றுக்குச் செலுத்தும் அத்தகைய பங்களிப்புத் தொகை முறையே 12% மற்றும் 3% ஆகிய வீதங்களில் காணப்படுகின்றன.

### 2.4.3 இந்துரான காணி

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட (2 ரூட்கள் மற்றும் 32.32 பேர்ச்கள்) இந்துரான காணி, "நீர் மின்சார உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையிலான சரத்சந்திர ராஜகருண ஞாபகார்த்த சர்வதேச மையம்" அமைப்பதற்காக வழங்கப்பட்டதாகும். அது, இதுவரை பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை. எனவே, இந்தச் சொத்து இதுவரை காலமும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

### 2.4.4 பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம்

2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள், முகாமைத்துவ சபையினால் 2019 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்கான அதிகாரத்தின் அடிப்படையில் வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## குறிப்பு 02 - செயற்படு வருமானம்

| | குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|---|
| திறைசேரி வருமானம் (மூலதனம்) | 6 | 59,572,500 | 45,074,381 |
| கழிக்கப்பட்டு பிற்போடப்பட்ட மானியம் | 7 | 350,329,330 | 91,280,105 |
| திறைசேரி வருமானம் (மீண்டெழு) | | 97,761,666 | 92,987,000 |
| திறைசேரி மானியம் (சமயத் தலங்களில் சோலார் அமைப்புகளை நிறுவுதல்) | | 210,041,000 | 20,000,000 |
| மின் உற்பத்தி (ஹம்பாந்தோட்டை) | | 16,945,911 | 22,959,531 |
| மின் உற்பத்தி (இந்துறான) | | 1,211,444 | 864,666 |
| மின்சக்தி முகாமையாளர் பயிற்சித் திட்டம் - வருமானம் | | 15,000 | 110,000 |
| சோலார் வரைபு வருமானம் | | 47,500 | 122,500 |
| காற்றுத் தரவு வருமானம் | | - | 500,000 |
| சக்தி கணக்காய்வு மூலமான வருமானம் | | 45,000 | 62,135 |
| சக்தி அனுமதி மூலமான வருமானம் | | 109,735,536 | 21,194,365 |
| சோலார் பதிவுக் கட்டணம் | | 6,600,000 | |
| சோலார் பயிற்சித் திட்டம் | | 775,200 | |
| மொத்தம் | | 853,080,087 | 295,154,683 |

## குறிப்பு 03 - செயற்பாடற்ற வருமானம்

| | குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|---|
| FARDF-UNDP கருத்திட்டங்ககள் (NAMA) | | 6,333,000 | 39,557,703 |
| இலங்கை மின்சாரக் கம்பனி (LECO)- ODSM | | - | 50,000,000 |
| கேள்விப் பத்திரக் கட்டணம் | | 139,985 | 520,000 |
| வழங்குநர் பதிவுக் கட்டணம் | | 128,500 | |
| இடர் கடன் வட்டி | | 527,677 | 514,198 |
| நல உத்தரவாதம் | | 1,800,000 | 4,500,000 |
| ஏனைய வருமானம் | | 37,000 | 388,245 |
| சிறப்பு முற்பண வட்டி | | 3,362 | 3,479 |
| விதுல்க கூடப் பதிவுக் கட்டணம் | | 1,528,429 | 1,645,000 |
| FARDF-UNDP கருத்திட்டங்கள் (உயிரணுத் திணிவு சக்தி) | | 16,700,000 | - |
| எரிசக்தி நிதிய வருமானம் | 8 | 24,346,730 | 29,541,196 |
| ஆ.அ.வ. கருத்திட்ட வருமானம் - சம்பத் வங்கி | | - | 121,077,929 |
| ஆ.அ.வ. கருத்திட்ட வருமானம - NDB வங்கி | | - | 14,880,000 |
| வட்டி வருமானம் | | 8,748,144 | 7,963,789 |
| வருமானம் கடனாளிகள் பதிவழிப்பு | | 7,258,237 | |
| மொத்தம் | | 67,551,064 | 270,591,539 |

## குறிப்பு 04 - கருத்திட்டச் செலவுகள்

### குறிப்பு 4.1 - புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

| | 2018 | 2017 |
|---|---|---|
| வள ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி | 2,449,875 | 1,008,534 |
| முன்னேற்றக் கண்காணிப்பு | 446,178 | 219,656 |
| தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி | 2,555,836 | 389,553 |
| புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேவைகள் | - | 68,852,227 |
| நன்கொடையாளர் நிதியளித்த திட்டங்கள் UNDP உயிரணுத் திணிவு சக்தி கருத்திட்டம் | 12,603,778 | 11,021,719 |
| நன்கொடையாளர் நிதியளித்த திட்டங்கள் - ஆ.அ.வ. (L 2892 SRI) | 24,545 | 121,320,932 |
| NAMA கருத்திட்டம் | 20,035,670 | 1,777,761 |
| ஆ.அ.வ. கருத்திட்டம் | - | 1,840 |
| ஹம்பாந்தோட்டை RE தள செயற்பாடு | 35,898,480 | 6,427,931 |
| இந்துரான தள செயற்பாடு | 2,418,124 | 894,793 |
| IFC சோலார் கருத்திட்டம் | - | 43,187 |
| பூநகரி எரிசக்தி பூங்காத் திட்டம் | 1,256,587 | 610,303 |
| நன்கொடையாளர் நிதியளித்த திட்டங்கள் - ஆ.அ.வ. (L 2733 SRI) | - | 14,880,000 |
| மின் விநியோக நம்பகத்தன்மை மேம்பாட்டுத் திட்ட ஆதரவு | 135,310 | |
| மகாவலி திட்ட அபிவிருத்தி | 283,709 | |
| மாகாண எரிசக்தித் திட்டங்கள் | 3,899,683 | |
| சூரிய பல சங்ரமய | 202,060,428 | |
| மொத்தம் | 284,068,203 | 227,448,436 |

### குறிப்பு 4.2 - எரிசக்தி முகாமைத்துவம்

| | 2018 | 2017 |
|---|---|---|
| எரிசக்தி முகாமைத்துவக் கலம்கள் | 1,188,918 | 3,125,444 |
| தர நிலைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் | 2,106,067 | 4,025,436 |
| அறிவுரை மற்றும் ஆலோசனை | 647,572 | 84,400 |
| வெகுமதி மற்றும் சாதனைகள் | 5,015,989 | 5,393,655 |
| துறை குறித்த திட்டங்கள் | 280,683 | 107,000 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 123,100 | 7,000 |
| எரிசக்தி கணக்காய்வு | 240,500 | 103,360 |
| கேள்வி தள முகாமைத்துவம் | 8,876,452 | 3,639,450 |
| வழிகாட்டித் திட்டத்தை நிறுவுதல் | 30,826 | |
| மொத்தம் | 18,510,107 | 16,485,745 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### குறிப்பு 4.3 - அறிவு முகாமைத்துவம்

| | 2018 | 2017 |
|---|---|---|
| எரிசக்தி கல்வித் திட்டங்கள் | 2,042,427 | 19,544,858 |
| ஊக்குவிப்புத் திட்டங்கள் | 6,688,903 | 961,924 |
| விதுல்க | 3,616,549 | |
| SEA வலையமைப்பு ஆதரவுக் கட்டணங்கள் | 628,881 | |
| மொத்தம் | 12,976,760 | 20,506,782 |

### குறிப்பு 4.4 - மூலோபாயச் செயற்பாடுகள்

| | 2018 | 2017 |
|---|---|---|
| எரிசக்தி தரவு உருவாக்கம் மற்றும் தகவல் | | 1,907,205 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 324,675 | 1,354,155 |
| கழிவு அகற்றல் | | 370,216 |
| எரிசக்தி கருத்தரங்கு | | 1,225,338 |
| நாடு முழுவதுமான பெற்றோல் நிலைய ஆய்வு | - | - |
| தேசிய எரிபொருள் இருப்பு | 1,065,532 | |
| காற்று வள மதிப்பீடு | 1,251,776 | |
| உயிரணு வள மதிப்பீடு | 284,167 | |
| மொத்தம் | 2,926,150 | 4,856,913 |

## குறிப்பு 05 - தொடர் செலவுகள்

### குறிப்பு 5.1 - சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள்

| | 2018 | 2017 |
|---|---|---|
| ஊழியர் சம்பளம் | 51,334,290 | 44,738,007 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 8,470,800 | 8,654,100 |
| சீராக்கல் கொடுப்பனவு | 2,074,810 | 5,547,456 |
| ஊ.சே.நி 12% | 7,966,423 | 7,405,832 |
| ஊ.ந.நி 3% | 2,033,105 | 1,849,797 |
| மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 7,090,345 | 6,086,490 |
| சொந்த வாகனப் பயன்பாடு | 2,413,333 | 2,950,000 |
| எரிபொருள் கொடுப்பனவு | 2,175,580 | 1,993,680 |
| தொழில்முறைக் கொடுப்பனவு | 5,281,000 | 4,964,000 |
| NAITA சம்பளம் | 1,157,000 | 1,221,500 |
| பணிக்கொடை செலவினம் | 4,378,837 | 4,265,245 |
| இடைக்காலக் கொடுப்பனவு | - | - |
| மருத்துவக் காப்பீடு | - | - |
| மொத்தம் | 94,375,523 | 89,676,107 |

## குறிப்பு 5.2 - போக்குவரத்து மற்றும் ஜீவனோபாயம்

| | 2018 | 2017 |
|---|---|---|
| போக்குவரத்து - உள்நாடு | 550,747 | 598,219 |
| போக்கவரத்து - வெளிநாடு | 454,924 | 841,016 |
| மொத்தம் | 1,005,671 | 1,439,234 |

## குறிப்பு 5.3 - விநியோகம்

| | 2018 | 2017 |
|---|---|---|
| அச்சிடுதல், எழுது கருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 813,323 | 1,369,203 |
| எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் | 2,846,282 | 2,970,134 |
| ஏனையவை - புதினப் பத்திரிகை மற்றும் இதர சேவைகள் | 96,320 | 78,960 |
| மொத்தம் | 3,755,925 | 4,418,298 |

## குறிப்பு 5.4 - பராமரிப்பு

| | 2018 | 2017 |
|---|---|---|
| வாகனங்கள், காப்புறுதி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் | 7,275,972 | 7,291,695 |
| தொழிலக இயந்திரங்கள் | 458,151 | 691,232 |
| அலுவலக உபகரணங்கள் | - | - |
| கட்டடம் மற்றும் கட்டமைப்பு | 91,670 | 503,915 |
| மொத்தம் | 7,825,793 | 8,486,842 |

## குறிப்பு 5.5 - தொடர்புச் சேவைகள்

| | 2018 | 2017 |
|---|---|---|
| அலுவலக வாடகை மற்றும் வாடகைக் கட்டணங்கள் | 33,247,178 | 29,691,288 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்புக் கட்டணங்கள் | 4,532,213 | 4,292,164 |
| போக்குவரத்து | 626,925 | 696,451 |
| கணக்காய்வுக் கட்டணம் | 726,000 | 660,000 |
| மொத்தம் | 39,132,316 | 35,339,903 |

## குறிப்பு 5.6 - பெறுமானத் தேய்வு, பெறுமதிக் குறைவு, இலதாக்கல்

| | 2018 | 2017 |
|---|---|---|
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,092,112 | 1,044,732 |
| மோட்டார் வாகனங்கள் | 1,286,909 | 1,247,215 |
| போட்டோ கொப்பி இயந்திரம் | 409,132 | 333,293 |
| கணனிகள் | 594,975 | 1,924,330 |
| மின் சாதனங்கள் | 41,676 | 52,682 |
| நூலக புத்தகங்கள் | 197,000 | 203,408 |
| எரிசக்திக் கருவிகள் | 994,670 | 101,102 |
| காற்றலை கோபுரங்கள் மற்றும் கருவிகள் | 2,481,963 | 2,154,088 |
| குளிர்சாதன பரிசோதனை ஆய்வுகூடம் | 8,433,067 | 8,433,067 |
| ஹம்பாந்தோட்டை மற்றும் இந்துறான எரிசக்திப் பூங்கா | 72,451,282 | 74,054,465 |
| கண்காட்சி உபகரணங்கள் | - | - |
| UNDP கருத்திட்டங்களுக்கான நிலையான சொத்துக்கள் | 104,860 | 69,637 |
| குத்தகைக் காணிகளின் கடன் தொகை | 1,528,548 | 1,528,548 |
| ஹம்பாந்தோட்டை சோலார் பார்க்கின் பெறுமதி குறைப்பு | 260,579,597 | - |
| அருவச் சொத்துக்களுக்கான கடன் தொகை | 1,662,087 | 1,662,087 |
| மொத்தம் | 351,857,878 | 92,808,654 |

## குறிப்பு 5.7 - ஏனைய தொடர் செலவுகள்

| | 2018 | 2017 |
|---|---|---|
| அலுவலக மற்றும் இதர செலவுகள் | 2,213,476 | 1,167,877 |
| பத்திரிகை விளம்பரங்கள் | 762,350 | 614,068 |
| காப்புறுதி | 2,302,072 | 2,031,616 |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 61,428 | 144,803 |
| சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகள் | 816,320 | 1,099,700 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 706,996 | 1,173,017 |
| உள்நாட்டு / வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள் | 2,698,859 | 5,526,981 |
| வங்கிக் கட்டணங்கள் | 39,910 | 29,576 |
| தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி (NBT) | 2,741,030 | 789,376 |
| மொத்தம் | 12,342,441 | 12,577,014 |

## குறிப்பு 6 - திறைசேரி வருமானம் (மூலதனம்)

| | 2018 | 2017 |
|---|---|---|
| திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மூலதன மானியம் | 59,572,500 | 64,881,000 |
| கழி: | | |
| ஆண்டின் வேலை முன்னேற்றம் | - | (15,813,389) |
| அருவச் சொத்துக்கள் | - | - |
| நடப்பு ஆண்டில் பெறப்பட்ட மூலதனச் சொத்துக்கள் | - | (3,993,230) |
| மொத்தம் | 59,572,500 | 45,074,381 |

## குறிப்பு 7 - ஒத்தி வைக்கப்பட்ட இலதாக்கல் மானியம்

| | 2018 | 2017 |
|---|---|---|
| ஆய்வுக்குட்பட்ட ஆண்டிற்கான தேய்மானம் | 350,329,330 | 911,802,015 |
| மொத்தம் | 350,329,330 | 911,802,015 |

## குறிப்பு 8 - சக்தி வலு நிதியிலிருந்து வருமானம்

| | 2018 | 2017 |
|---|---|---|
| எரிசக்தி முகாமைத்துவ வருமானம் | 12,988,000 | 1,363,813 |
| RE வருமானம் | 727,394 | 15,855,174 |
| நிகர வட்டி | 10,631,336 | 12,322,209 |
| மொத்தம் | 24,346,730 | 29,541,196 |

## குறிப்பு 9 - ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும்

### குறிப்பு 9.1 சொந்தமான சொத்துக்கள்

| விபரம் | 2018.01.01 இல உள்ளவாறு மீதி (மீள் செயற்பாடு) | கையகப்படுத்தல் | மீள் மதிப்பீடு | அகற்றுதல் | 2018.12.31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|
| காணி - ஹம்பாந்தோட்டை | 101,217,000 | - | - | - | 101,217,000 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 19,251,795 | 1,267,680 | - | - | 20,519,475 |
| மோட்டார் வாகனங்கள் | 52,266,495 | - | - | - | 52,266,495 |
| போட்டோ பிரதி இயந்திரம் | 4,367,941 | 442,000 | - | - | 4,809,941 |
| கணனிகள் | 34,810,610 | 897,050 | - | - | 35,707,660 |
| மின் சாதனங்கள் | 446,964 | - | - | - | 446,964 |
| நூலக புத்தகங்கள் | 1,438,352 | - | - | - | 1,438,352 |
| மின்சக்தி உபகரணங்கள் | 91,583,387 | 4,924,290 | - | - | 96,507,677 |
| காற்றலை கோபுரங்களும் கருவிகளும் | 48,992,502 | 1,775,025 | - | - | 50,767,527 |
| குளிரூட்டி பரிசோதனை ஆய்வகம் | 42,165,337 | - | - | - | 42,165,337 |
| **சூரிய சக்தி மற்றும் சிறிய நீர்வலு கருத்-திட்டங்கள்:** | | | | | |
| A. சூரிய சக்திப் பலகைகள் | 660,106,452 | - | (580,776,942) | - | 79,329,510 |
| B. உருக்கு நிர்மாணங்கள் | 222,261,738 | - | (164,611,738) | - | 57,650,000 |
| C. கட்டடங்கள் | 131,017,606 | - | - | - | 131,017,606 |
| D. சுவிட்ச் ஜியர் | 13,973,767 | - | (3,965,967) | - | 10,007,800 |
| E. உட்திணி சாதனங்கள் | 79,091,306 | - | (7,091,306) | - | 72,000,000 |
| F. மின்மாற்றிகள் | 45,753,626 | - | (41,053,626) | - | 4,700,000 |
| G. மின்சார இலத்திரனியல் சாதனங்கள் | 31,619,040 | - | - | - | 31,619,040 |
| I. சுகாதாரம் மற்றும் குழாய் அமைப்பு | 166,499,475 | 251,814 | (83,869,475) | - | 82,881,814 |
| J. கேபெல்கள் | 100,224,571 | - | (70,224,571) | - | 30,000,000 |
| K. தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 3,014,584 | - | - | - | 3,014,584 |
| L. கருவிகள் | 14,260,781 | 106,296 | (8,667,076) | - | 5,700,000 |
| M. இயந்திர சாதனங்கள் | 4,047,375 | - | - | - | 4,047,375 |
| H. ஏனையவை | 60,039,664 | - | - | - | 60,039,664 |
| கண்காட்சி உபகரணங்கள் | 354,853 | - | - | - | 354,853 |
| UNDP கருத்திட்டங்களின் நிலையான சொத்துக்கள் | 524,300 | - | - | - | 524,300 |
| மொத்தம் | 1,929,329,521 | 9,664,155 | (960,260,701) | - | 978,732,975 |

## தேய்மானக் கணக்கு

| விபரம் | 2018.01.01 இல் உள்ளவாறு மீதி (மீள் செயற்பாடு) | தேய்மானங்கள் | மீள் மதிப்பீட்டில் தேய்மானக் கணக்கு/திரட்டிய | 2018.12.31 இல் தேய்மானக் கணக்கு/ திரட்டிய | 2018.12.31 இல் தேறிய புத்தகப் |
|---|---|---|---|---|---|
| காணி - ஹம்பாந்தோட்டை | - | - | - | - | 101,217,000 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 18,777,928 | 1,092,112 | (1,125,111) | 18,744,929 | 1,774,547 |
| மோட்டார் வாகனங்கள் | 49,889,054 | 1,286,909 | (252,805) | 50,923,158 | 1,343,337 |
| போட்டோ பிரதி இயந்திரம் | 2,944,847 | 409,132 | 592,560 | 3,946,539 | 863,402 |
| கணனிகள் | 32,167,903 | 594,975 | 1,270,362 | 34,033,240 | 1,674,420 |
| மின் சாதனங்கள் | 431,366 | 41,676 | (39,403) | 433,639 | 13,326 |
| நூலக புத்தகங்கள் | 899,969 | 197,000 | (52,617) | 1,044,352 | 394,000 |
| மின்சக்தி உபகரணங்கள் | 91,583,387 | 994,670 | (1,192,662) | 91,385,395 | 5,122,282 |
| காற்றலை கோபுரங்களும் கருவிகளும் | 47,503,059 | 2,481,963 | (2,659,437) | 47,325,585 | 3,441,942 |
| குளிரூட்டி பரிசோதனை ஆய்வகம் | 33,154,661 | 8,433,067 | - | 41,587,728 | 577,609 |
| **சூரிய சக்தி மற்றும் சிறிய நீர்வலு கருத்திட்டங்கள்:** | | | | | |
| A. சூரிய சக்திப் பலகைகள் | 214,783,504 | 33,005,323 | (247,788,827) | - | 79,329,510 |
| B. உருக்கு நிர்மாணங்கள் | 143,311,888 | 22,226,174 | (165,538,062) | - | 57,650,000 |
| C. கட்டடங்கள் | 41,564,122 | 6,550,880 | - | 48,115,002 | 82,902,604 |
| D. சுவிட்ச் ஜியர் | 13,973,767 | | (13,973,737) | 30 | 10,007,770 |
| E. உட்திணி சாதனங்கள் | 79,091,306 | | (79,091,306) | - | 72,000,000 |
| F. மின்மாற்றிகள் | 14,811,501 | 2,287,681 | (17,099,182) | - | 4,700,000 |
| G. மின்சார இலத்திரனியல் சாதனங்கள் | 31,619,040 | | - | 31,619,040 | - |
| I. சுகாதாரம் மற்றும் குழாய் அமைப்பு | 53,420,927 | 8,333,839 | (61,754,766) | - | 82,881,814 |
| J. கேபெல்கள் | 100,224,571 | | (100,224,571) | - | 30,000,000 |
| K. தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 3,014,584 | | - | 3,014,584 | - |
| L. கருவிகள் | 14,163,269 | 47,385 | (14,210,654) | - | 5,700,000 |
| M. இயந்திர சாதனங்கள் | 4,047,375 | | - | 4,047,375 | - |
| H. ஏனையவை | 60,039,664 | | - | 60,039,664 | - |
| கண்காட்சி உபகரணங்கள் | 354,853 | | - | 354,853 | - |
| UNDP கருத்திட்டங்களின் நிலையான சொத்துக்கள் | 139,274 | 104,860 | (4,671) | 239,463 | 284,837 |
| மொத்தம் | 1,051,911,819 | 88,087,647 | (703,144,890) | 436,854,576 | 541,878,399 |

## குறிப்பு 9.2 குத்தகை உரிமையாளர் சொத்து

| விபரம் | 01.01.2018 இல் உள்ளவாறு மீதி | கையகப்படுத்தல் | கழிக்கப்படுதல் | 31.12.2018 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| காணி - பத்தரமுல்ல | 42,035,080 | - | 1,528,548 | 40,506,532 |
| மொத்தம் | 42,035,080 | - | 1,528,548 | 40,506,532 |

## குறிப்பு 10 - அருவச் சொத்துக்கள்

| விபரம் | 01.01.2018 இல் உள்ளவாறு மீதி | கையகப்படுத்தல் | கழிக்கப்படுதல் | 31.12.2018 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| கணனி மென்பொருட்கள் | 4,969,260 | 160,000 | 1,662,087 | 3,467,173 |
| தரவு மற்றும் தகவல்கள் | - | - | - | - |
| மொத்தம் | 4,969,260 | 160,000 | 1,662,087 | 3,467,173 |

## குறிப்பு 11 - நடைபெறும் வேலை

| | 2018 | 2017 (மீள் செயற்பாடு) |
|---|---|---|
| மீள் புதுப்பிக்கத்தகு சக்தி மதிப்பீடு - காற்றலை கோபுரம் (பொகவந்தலாவ) | 2,377,000 | 2,377,000 |
| ஆ.அ.வ. குவண்டம் லீப் - WRA (காற்று சக்தி) - (உபகரண வரி பகுதி) | 2,299,935 | 2,299,935 |
| DC மைக்ரோ க்ரிட் (யுனி-பெர) ஊடாக PV சக்தி வினைத்திறன் பயன்பாடு | - | 442,000 |
| அலுவலக கட்டடத் தொகுதி | 17,515,653 | 6,797,403 |
| மூல முன்மாதிரி மின்சார வாகனம் | 7,956,800 | 7,956,800 |
| சம்பூர் காற்று அளவிடும் கம்பம் | - | 130,550 |
| நட்க்குடா காற்று அளவிடும் கம்பம் | - | 1,775,025 |
| சுத்தமான சக்தி வலையமைப்பு வினைத்திறன் திட்டம் | - | 15,788 |
| எரிசக்தி வினைத்திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கான குறியீட்டின் திருத்தம் | - | 951,778 |
| பூநகரி கருத்திட்டம் | 16,207,754 | 12,952,964 |
| இந்துரான சிறு நீர் மின் திட்டம் | 396,257 | |
| மொத்தம் | 46,753,399 | 35,699,243 |

## குறிப்பு 12 - முதலீடுகள்

### நிலையான வைப்புகள் (தேசிய சேமிப்பு வங்கி, பொரல்ல)

| வைப்புப் பதிவிலக்கம் | முதிர்வுத் திகதி | முதலீட்டு வீதம் | 2018 க்கான நிகர வட்டி | 2018.12.31 இல் வைப்பு | 2018.12.31 இல் வைப்பு |
|---|---|---|---|---|---|
| 2/0061/11/33829 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,530 | 1,321,440 |
| 2/0061/11/33861 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,530 | 1,321,440 |
| 2/0061/11/33853 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,530 | 1,321,440 |
| 2/0061/11/33888 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,530 | 1,321,440 |
| 2/0061/11/33772 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,530 | 1,321,440 |
| 2/0061/11/33837 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,530 | 1,321,440 |
| 2/0061/11/33845 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,530 | 1,321,440 |
| 2/0061/11/33756 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,531 | 1,321,440 |
| 2/0061/11/33764 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,531 | 1,321,440 |
| 2/0061/11/33802 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,531 | 1,321,440 |
| 2/0061/11/33713 | 9/21/18 | 11.00% | 143,290 | 1,459,531 | 1,321,440 |
| 2/0061/11/33896 | 9/21/18 | 11.00% | 143,291 | 1,459,531 | 1,321,440 |
| 2/0061/11/33799 | 9/21/18 | 11.00% | 143,291 | 1,459,531 | 1,321,440 |
| 2/0061/11/33870 | 9/25/18 | 11.00% | 53,107 | 547,324 | 495,540 |
| 2/0061/09/60845 | 10/20/18 | 11.00% | 53,066 | 544,008 | 492,538 |
| 2/0061/11/34051 | 9/30/18 | 11.00% | 344,505 | 3,520,452 | 3,187,372 |
| 2/0061/09/49981 | 5/2/18 | 8.50 % | 1,087,649 | 10,748,021 | 9,731,119 |
| மொத்தம் | | | 3,401,099 | 34,333,701 | 31,085,289 |

### திறைசேரி உண்டியல்கள் - (மக்கள் வங்கி, தலைமை அலவலகத்தில் முதலிடு செய்யப்பட்ட)

| வைப்புப் பதிவிலக்கம் | முதிர்வுத் திகதி | முதலீட்டு வீதம் | 2018 க்கான நிகர வட்டி | 2018.12.31 இல் வைப்பு | 2018.12.31 இல் வைப்பு |
|---|---|---|---|---|---|
| LKB00819K017 | 18/01/2018 | 9.85% | 1,578,707 | 18,318,536 | 16,675,955 |
| LKB00819K017 | 11/07/2018 | 10.2% | 3,768,338 | 40,934,805 | 37,145,921 |
| மொத்தம் | | | 5,347,045 | 59,253,341 | 53,821,876 |
| மொத்த முதலீடு | | | | 93,587,042 | 84,907,165 |

## குறிப்பு 13 - கடன் அறவீடுகள்

| | 2018 | 2017 (மீள் செயற்பாடு) |
|---|---|---|
| சம்பத் வங்கி ஊடாக ஆ.அ.வ. கடன் (L 2892/93 SRI) - தூய்மையான சக்தி வலையமைப்பு திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்காக | | |
| விமலசுரேந்திர அன்ட் சன்ஸ் லிமிட்டெட் | - | 12,975,000 |
| ARK பிரின்டிங் சொலூஷன்ஸ் | - | 2,437,000 |
| சென்றல் றபர் (பிரைவேட்) லிமிட்டெட் | - | 9,065,000 |
| எய்ட்கன்ஸ்பென்ஸ் ஹொட்டேல் மனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட | - | 7,924,000 |
| EB கிரேஸி அன்ட் கம்பனி பிஎல்சி | - | 8,493,000 |
| கொமர்ஷியல் எக்ஸ்போட் கம்பனி | - | 8,886,000 |
| மொத்தம் | - | 49,780,000 |

## குறிப்பு 14 - பெறுவனவுகள்

| | 2018 | 2017 (மீள் செயற்பாடு) |
|---|---|---|
| நிலையான வைப்புக்கள் மூலம் பெற வேண்டிய வட்டி | 1,415,552 | 1,262,865 |
| திறைசேரி உண்டியல்கள் மூலம் பெற வேண்டிய வட்டி | 3,272,984 | 3,357,405 |
| இலங்கை மின்சார சபை - RCL வாடகை | 8,033,271 | 8,033,271 |
| மின்சக்தி உற்பத்தி - ஹம்பாந்தோட்டை / இந்துறான | 7,187,084 | 5,174,781 |
| ஊழியர்களிடமிருந்து பெறத்தக்கவை | 2,382 | 2,382 |
| VAT உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து வருமானம் | - | 3,472,802 |
| உள்ளுர் பயிற்சித் திட்டம் (இடைநிறுத்தம்) | 82,000 | 211,928 |
| எய்ட்கன்ஸ்பென்ஸ் டிரவல்ஸ் | 6,309 | 6,309 |
| ஹெரிடான்ஸ் அஹுங்கல்ல | 35,659 | 35,659 |
| மொத்தம் | 20,035,241 | 21,557,402 |

## குறிப்பு 15 - ஏனைய நடைமுறைச் சொத்துக்கள

| | 2018 | 2017 (மீள் செயற்பாடு) |
|---|---|---|
| **மீளப் பெறத்தக்க வைப்புக்கள்** | | |
| தேசிய இளைஞர்கள் | - | 40,000 |
| நீர் வழங்கல் சபை | 2,500 | 2,500 |
| மருத்துவக் காப்புறுதி | 500 | 500 |
| எரிபொருள் சார்ந்தவை | 186,500 | 186,500 |
| ஹம்பாந்தோட்டை - இமிச | 52,000 | 52,000 |
| இந்துறான- CEB | 62,500 | 62,500 |
| சூரியவெவ - CEB | 1,500 | |
| தொலைபேசி | 351,048 | 351,048 |
| ஹம்பாந்தோட்டை விடுதி வாடகை | 132,000 | 132,000 |
| ஸ்பிரிங் வோட்டர் (பிறைவேட்) லிமிட்டெட் | 3,500 | 3,500 |
| அமெரிக்கன் பிரிமியம் வேட்டார் | 23,000 | 23,000 |
| மொபிடல் | 2,000 | 2,000 |
| W.D.G.S ஒனில் - ODSM | 2,100,000 | 2,100,000 |
| பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு நிலையம் | 369,153 | 354,153 |
| பௌத்த கலாசார நிலையம் | - | 10,000 |
| வோட்டர் எட்ஜ் லிமிட்டெட் | - | 50,000 |
| விதுல்க கண்காட்சி | 25,000 | 25,000 |
| **முற்பணம்** | | |
| சக்தி நிதியத்திலிருந்து அதிகார சபை நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய தொகை | - | - |
| நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றுக்கு முற்பணக் கணக்கு | 169,918 | 311,398 |
| பிரதேச செயலகம் - ருவன்வெல்ல | - | 251,814 |
| ஊவா மாகாண கல்வித் திணைக்களம் | - | 1,034,596 |
| கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் | 911,329 | 1,323,300 |
| வட மாகாண கல்வித் திணைக்களம் | 790,191 | 1,618,300 |
| வட மேல் மாகாண கல்வித் திணைக்களம் | - | 842,682 |
| பௌத்த கலாசார நிலையம் | - | 892,512 |
| தென் மாகாண கல்வித் திணைக்களம் | 1,544,949 | 1,544,949 |
| அரசாங்க அச்சகர் | - | 2,412,040 |
| மேல் மாகாண கல்வித் திணைக்களம் | 518,585 | 518,585 |
| எகோ பவர் லங்கா இஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட் | - | 5,805,000 |
| பொது நிறுவனங்களுக்கான சூரிய சக்தி அமைப்புகள் | - | |
| செயலாளர் - ஊவா மாகாண கல்வி அமைச்சு /வட மேல் மாகாணம்--NAMA | 522,250 | |
| தென் பிராந்திய பிரதம செயலாளர் / கிழக்கு மாகாணம்-NAMA | 1,955,680 | |
| முற்பணம் - வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் (மத்திய மாகாணம்) - NAMA. | 2,214,750 | |
| ஏனைய | 8,596,168 | 4,576,704 |
| மொத்தம் | 20,535,021 | 24,526,581 |

| | 2018 | 2017 (மீள் செயற்பாடு) |
|---|---|---|
| **சுழலும் நிதி** | | |
| இடர் நிவாரணக் கடன் | 13,077,507 | 12,089,386 |
| விசேஷ முற்பணம் | 108,185 | 4,585 |
| பண்டிகைக்கால முற்பணம் | 31,989 | 51,989 |
| வெள்ள நிவாரண கடன் | 804,796 | 1,318,378 |
| | 14,022,477 | 13,464,338 |
| **மொத்த ஏனைய நடைமுறைச் சொத்துக்கள** | 34,557,498 | 37,990,919 |

## குறிப்பு 16 - காசும் காசுக்குச் சமமானவையும்

| | 2018 | 2017 (Restated) |
|---|---|---|
| தேசேவ - சேமிப்புக் கணக்கு - 100610493406 | 173,410,145 | 166,914,053 |
| மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு - 078100188503576 | 25,214,869 | 8,512,421 |
| மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு - 078100278503576 | 4,620,071 | 4,578,684 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு - 8002630 | 933,764 | 960,864 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு - 74944408 | 76,202,054 | 11,228,284 |
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு - 75803419 | 134,548,641 | 153,868,425 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு - 80595356 | 37,878,950 | 46,116,605 |
| மொத்தம் | 452,808,494 | 392,179,336 |

## குறிப்பு 17 - கணக்கிடப்பட்ட நிதி

2007 செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு அமைய, எரிசக்தி பாதுகாப்பு நிதியத்தின் (ECF) திரட்டிய நிதி இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு (இ.நி.வ.அ.ச.) 2007 ஒக்டோபர் 01 அன்று மாற்றப்பட்டது. இது, பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:

| | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| 2007 செப்டம்பர் 30 இல் திரட்டிய நிதி | 7,076,392 | 7,076,392 |
| ஆரம்ப மூலதனம் | | |
| மூலதன மானியம் - எரிபொருள் மின்சக்தி அமைச்சு | 5,761,145 | 5,761,145 |
| மூலதன மானியம் - UNDP | | |
| நன்கொடை மானியம் - உணவு விவசாய நிறுவனம் | 650,239 | 650,239 |
| மொத்தம் | 22,100,336 | 22,100,336 |

## குறிப்பு 18 - பிற்போடப்பட்ட மானியம்

| | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| மூலதன மானியம் 2008 | 33,770,435 | 33,770,435 |
| மூலதன மானியம் 2009 | 11,955,533 | 11,955,533 |
| வெளிநாட்டு மானியம் 2009 - ஜப்பான் | 24,165,380 | 24,165,380 |
| மூலதன மானியம் 2010 - ஹம்பாந்தோட்டை சூரிய சக்தி பேட்டை | 46,693,991 | 46,693,991 |
| - கழிக்கப்படாத மூலதன மானியம் | 10,646,819 | 10,646,819 |
| வெளிநாட்டு மானியம் 2010 - ஜப்பான் | 11,419,569 | 11,419,569 |
| மூலதன மானியம் 2011 - இந்துறான சிறிய நீர்வலு கருத்திட்டம் | 15,523,945 | 15,523,945 |
| - கழிக்கப்படாத மூலதன மானியம் | 68,798,341 | 68,798,341 |
| வெளிநாட்டு மானியம் 2011 - ஜப்பான் | 1,155,016,402 | 1,155,016,402 |
| - கொரியன் | 191,097,075 | 191,097,075 |
| பிற்போடப்பட்ட மானியம் 2012 - ஆ.அ.வ. | 15,082,346 | 15,082,346 |
| மூலதன மானியம் 2012 | 23,581,236 | 23,581,236 |
| பிற்போடப்பட்ட மானியம் 2013 - ஆ.அ.வ. | 43,416,071 | 43,416,071 |
| பிற்போடப்பட்ட மானியம் 2013 - KOICA | 35,662 | 35,662 |
| மூலதன மானியம் 2013 - FARDF | 41,873,961 | 41,873,961 |
| மூலதன மானியம் 2014 | 20,487,827 | 20,487,827 |
| மூலதன மானியம் 2015 | 14,655,015 | 14,655,015 |
| மூலதன மானியம் 2016 | 17,855,251 | 18,752,051 |
| மூலதன மானியம் 2017 | 19,806,619 | 19,806,619 |
| கழிக்குக: | | |
| - கடந்த ஆண்டுகளின் பிற்போடப்பட்ட வருமானம் | (957,038,514) | (865,758,409) |
| - ஆண்டுக்கான பிற்போடப்பட்ட வருமானம் | (350,329,330) | (91,280,105) |
| மொத்தம் | 458,513,634 | 809,739,764 |

## குறிப்பு 19 - ஏனைய செலுத்த வேண்டியவை

| | 2018 | 2017 (மீள் செயற்பாடு) |
|---|---|---|
| சக்தி நிதியத்திலிருந்து அதிகார சபை நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை | - | - |
| சுவிட்ச் ஏஷியா கட்டுப்பாட்டுக் கணக்கு | 4,548,176 | 4,548,176 |
| எரிபொருள் மின்சக்தித்துறை அமைச்சு | 500 | 500 |
| திரண்ட செலவுகள் | 2,508,909 | 11,842,517 |
| பணம் சேகரிக்கப்படாத காசோலைகள் | 1,282,665 | 173,696 |
| சோலார் பதிவுக் கட்டணம் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி | 295,860 | 295,860 |
| சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு | 470,000 | 470,000 |
| UNDP - NAMA கருத்திட்டம் | 1,036,803 | 1,036,803 |
| UNDP - உயிரணுத் திணிவுத் திட்டம் | 1,970,834 | 1,970,834 |
| கணக்காய்வுக் கட்டணம் | 2,058,636 | 1,332,636 |
| செலுத்த வேண்டிய VAT வரி | 3,782,610 | |
| அளவைக் கட்டணம் - ஜீவ சக்தி அசோஸியேட்ஸ் | 252,875 | |
| ஏலத்திற்கான ஆவணம் | 5,000 | |
| **கடன் கொடுத்தோர்** | | |
| மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி - ஈ நெற் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 1,667,500 | 1,667,500 |
| எரிசக்திக் கருவிகளைக் கையகப்படுத்துதல் | 326,025 | 326,025 |
| தக்க வைத்துக்கொள்ளல் | 3,168,918 | 4,154,251 |
| நாராஹேன்பிட்டி ஜாதிக பொல | 99,405 | 99,405 |
| **சில்லறை கடன் கொடுத்தோர்** | | |
| இலங்கை சுங்கம் | 310,748 | 310,748 |
| நலன்புரி சங்கம் (இ.நி.வ.அ.ச.) | 442 | 442 |
| **மீளப் பெறத்தகு வைப்பு** | | |
| E-நெற் சொலூஷன் (பிறைவேட்) லிமிட்டெட் | 10,000 | 10,000 |
| ENL ஆலோசகர் | 150,000 | 150,000 |
| ஸிக்மா டெக்னோலஜீஸ் | 10,000 | 10,000 |
| ரெயின்கோ றினிவபுல் எனேர்ஜி கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | 30,000 | 30,000 |
| விதுல்க கண்காட்சி | 9,256 | 9,256 |
| இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் | 54,000 | 54,000 |
| மீளப் பெறத்தகு வைப்பு - வாகனம் | 14,000 | 14,000 |
| ATA இன்டர்நஷனல் | 50,000 | 50,000 |
| விதுல்க சிம்போசியம் - என்டர்ரெயின்மன்ட் லிமிட்டெட் | 25,000 | 25,000 |
| மீளப் பெறத்தகு வைப்பு - ஜென்சோ பவர் டெக்னோலஜீஸ் | - | 50,000 |
| **மொத்தம்** | 24,138,162 | 28,631,649 |

## குறிப்பு 20 - இலங்கை எரிசக்தி நிதியம்

| | | 2018 | 2017 (மீள் செயற்பாடு) |
|---|---|---|---|
| **2019.12.31 இல் நிதி நிலைமை அறிக்கை** | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | - | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இ.நி.வ.அ.ச. நடைமுறைக் கணக்கு (FOA) - எனோர்ஜி பிளஸ் பில்டிங் | | 48,678,878 | 47,000,000 |
| **காசும் காசுக்குச் சமமானவையும்** | | | |
| தேசேவ சேமிப்புக் கணக்கு | | 173,410,145 | 166,914,053 |
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு | | 134,548,641 | 153,868,425 |
| | | 356,637,664 | 367,782,478 |
| திரட்டிய நிதியம் | | 332,842,789 | 335,663,395 |
| ஆண்டுக்கான மிகை / பற்றாக்குறை | | 2,762,982 | (2,820,606) |
| மொத்த திரட்டிய நிதியம் | | 335,605,771 | 332,842,789 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| இ.நி.வ.அ.ச. நடைமுறைக் கணக்கு (FOA) | | 16,368,808 | 32,361,801 |
| 31.12.2018 இல் செலுத்த வேண்டிய VAT | | 4,663,085 | 2,577,888 |
| **மொத்தம்** | | 356,637,664 | 367,782,478 |
| **வருமானம்** | | | |
| வருமானம் - எரிசக்தி நிதியம் | 8 | 24,346,730 | 29,541,196 |
| **செலவுகள்** | | | |
| வள ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி | | 823,590 | |
| மாகாண எரிசக்தித் திட்டங்கள் | | 3,326,188 | 18,038,086 |
| ஹம்பாந்தோட்டை தள செயற்பாடுகள் | | 5,348,808 | 4,102,166 |
| இந்துறான தள செயற்பாடுகள் | | 5,392,059 | |
| சூரிய சக்தித் திட்டம் | | | 43,187 |
| சக்தி முகாமைத்துவ வட்டங்கள் | | | 3,695,003 |
| சாதனைக்கான வெகுமதி | | | 1,000,000 |
| ஆலோசனை/எரிசக்தி கணக்காய்வு | | | 103,360 |
| பூனேரியன் சூரிய சக்திப் பேட்டை | | 1,470,600 | |
| தரங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளின் அறிமுகம் | | 1,200,000 | |
| எரிசக்தி கல்வித் திட்டம் | | 1,053,326 | |
| ஊக்குவிப்புத் திட்டம் | | 2,969,177 | 5,380,000 |
| | | 21,583,748 | 32,361,802 |
| மேலதிகம்/பற்றாக்குறை | | 2,762,982 | (2,820,606) |

## குறிப்பு 21 - இலங்கை நிலைபெறுதகு உத்தரவாத நிதியம்

| | 2018 | 2017 (Restated) |
|---|---|---|
| வருமானம் | | |
| வட்டி வருமானம் - நிலையான வைப்பு | 3,401,099 | 2,811,298 |
| வட்டி வருமானம் - திறைசேரி பிணையங்கள் | 5,347,045 | 5,152,491 |
| மொத்த வருமானம் | 8,748,144 | 7,963,789 |
| கழிக்குக: | | |
| செலவுகள் | - | - |
| | - | - |
| மொத்த செலவுகள் | - | - |
| நிகர மேலதிகம்/பற்றாக்குறை | 8,748,144 | 7,963,789 |

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

මගේ අංකය / எனது இல. / My No. : පීඊඊ/ඩී/එස්එල්එස්ඊඒ/එෆ්එස්/2018/28 | ඔබේ අංකය / உமது இல. / Your No. : | දිනය / திகதி / Date : 2020 මාර්තු 03 දින

எமது இல.: POE/SLSEA/FS/2018/28

உமது இல.:

திகதி: மார்ச் 03, 2020

தலைவர்,
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான சட்டக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் மீதான கணக்காய்வு செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்படும் அறிக்கை.

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 தகுதி வாய்ந்த கருத்து

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வானது, 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றுடன் குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் அவற்றுக்கான காரணங்கள் என்பன இனங்காணப்பட்டு, எனது நேரடி மேற்பார்வையின் கீழ் இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசு அரசியலமைப்பில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கு அமையவும் இது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் காணப்படும் எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்கள் விரைவில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துக்களுக்கு அமைய, இந்த அறிக்கையில் தகுதிவாய்ந்த கருத்து என்ற பிரிவின் கீழ் விளக்கப்பட்டுள்ள விடயங்கள் தவிர்ந்த, இதில் அடங்கியுள்ள நிதிக் கூற்றுக்கள், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2018 டிம்பர் 31 ஆம் திகதிக்கான நிதிநிலைமை அறிக்கை, நிதிப் பெறுபேறுகள் மற்றும் காசுப்பாய்ச்சல், குறித்த வருடத்திற்கான நடவடிக்கைகள் என்பன இலங்கை கணக்கியல் கொள்கைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## 1.2 தகுதிவாய்ந்த கருத்துக்களுக்கான அடிப்படை

(அ). ஹம்பாந்தோட்டையில் நிறுவப்பட்டுள்ள சூரிய மின் நிலையத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 22,145,944 பெறுமதியான இன்வேட்டர்கள் (inverters) குறித்த வருடத்தின் வரவு செலவுக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அவை நிலையான சொத்துக்கள் கொள்வனவில் குறிப்பிடப்பட வேண்டியதான்றாகும்.

(ஆ). UNDP நிதி மூலம் முன்னெடுக்கப்பட்ட இரண்டு திட்டங்களான தேசிய பொருத்தமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (NAMA) மற்றும் உயிரியல் திணிவு வேலைத் திட்டம் என்பனவற்றுக்கான ரூபா 1,036,803 மற்றும் ரூபா 1,970,834 ஆகிய தொகைகள் 2016 ஆம் ஆண்டு வருமானத்திற்கு அமைய குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். எனினும், அவை தற்போதைய நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,007,637 என்று மேலதிகப் பொறுப்புக்களாகக் காட்டப்பட்டுள்ளன.

(இ). 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான செலவுகளான ரூபா 1,290,079 என்ற தொகை, 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், ஆய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான செலவுகள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

(ஈ). உபாய முறைகள் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட ST/04 வேலைத் திட்டத்திற்கான ரூபா 1,296,000 தொகையானது, "ஏனைய செலுத்தப்பட வேண்டியவை" என்ற கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செலவினம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. குறித்த செலவினமானது, ஆய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான செலவினமாகக் காண்பிக்கப்பட வேண்டும்.

(உ). ரூபா 4,360,584 க்கான ஒதுக்கீடுகள் மற்றும் அரச நன்கொடைகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையாகக் குறிப்பிடப்படவில்லை. அத்துடன், ரூபா 980,915 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. இது மூலதனத் தேவைப்பாடு கணக்கிடுகைகள் மேற்கொள்ளப்படுகையில் ஏற்பட்ட பிழைகளினால் நிகழ்ந்துள்ளது. அத்துடன், ரூபா 68,266 முதலீட்டு நடவடிக்கைகள் கூடுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் ஒப்பிடுகையில், குறித்த காசுப் பாய்ச்சல் அறிக்கையானது இ.நி.வ.அ.ச. 02 க்கு அமைய தயாரிக்கப்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

(ஊ). UNDP னால் வழங்கப்பட்ட ரூபா 457,490 பெறுமதியான திட்டம் ஒன்றுக்கான சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் இவை காண்பிக்கப்படவில்லை.

(எ). திட்டங்களை முன்னெடுப்பவர்களினால் செலுத்தப்படும் வைப்புப் பணம் மற்றும் காணிக் கொள்வனவுக்காகப் பெற்றுக் கொள்ளப்படும் நிதி ஆகிய ரூபா 5,049,485 ஐ சபை தம்வசம் கொண்டுள்ளது என்பதற்காக, அது, தற்கால பொறுப்புக்கள் என்ற அடிப்படையில் நிதிக்

கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. இது, நீண்ட காலமாகத் தெரிவிக்கப்பட்டாலும் கூட அவற்றைப் பேணுவதற்கான போதுமானளவு ஆதாரங்கள் எங்கும் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஏ). ரூபா 2,299,935 என்ற தொகை, நீண்ட காலமாக செயற்பாட்டிலுள்ள பணிகள் என்ற அடிப்படையில் ஆ.அ.வ. நிதியின் கீழ் செயற்படும் ஒரு திட்டத்திற்காக காண்பிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், இத்தொகை காலத்திற்குக் காலம் சீராக்கம் செய்யப்பட்டு குறித்த ஆண்டில் அவற்றை சரிவர குறிப்பிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ). கடந்த வருட நிதிக் கூற்றுக்களின் பெறுபேறுகள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டாலும், அவ்வாறானதொரு வகையை நிதிக் கூற்றுக்களில் அவதானிக்க முடியவில்லை. அத்துடன், கட்புலனாகாச் சொத்துக்களின் பெறுமதிகளைப் பிரித்துக் காட்டும் நடவடிக்கைகள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டாலும், அவற்றுக்கான கொள்கைகள் எங்குமே காணப்படவில்லை.

இலங்கை கணக்காய்வுத் தராதரங்களுக்கு (SLAuSs) அமைய எனது கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் தராதரங்களின்படி, எனது பொறுப்புக்கள் பற்றி நிதி அறிக்கையில் கணக்காய்வாளர் நாயகத்தின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் நான் மேலும் விரிவாகப் பெற்றுக்கொடுத்துள்ளேன். இந்தக் கணக்காய்வு தொடர்பாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான முகாமைத்துவ மற்றும் நிர்வாகக் குழுவின் பொறுப்புக்கள்

இலங்கை அரச நிறுவனங்கள் கணக்கியல் கொள்கைகளுக்கு அமைய, நிதிக் கூற்றுக்களைச் சரியான முறையில் உண்மையாகவும், நியாயமாகவும் தயாரிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். தேவையானளவு உள்ளகக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, அதன் மூலம் தவறுகள், பொய்கள் மற்றும் பிழைகள் என்பனவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவர்களின் பொறுப்புகளில் சிலவாகும்.

அதிகார சபையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் எண்ணக்கருவுடன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான வகையில் குறித்த நிதித் தகவல்களை சரியான முறையில் வெளிப்படுத்தவும் வேண்டும். சபையானது, ஏதேனும் ஒரு காரணத்தினால், வேறு வழியின்றி சபையைக் கலைத்துவிடும் நிலைமை ஏற்பட்டால் தவிர, அனைத்துத் தருணங்களிலும் தொடர்ச்சியாக நிறுவனம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது என்ற அடிப்படையில் கணக்கியல் கொள்கைகளைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் செயற்பாட்டை மேற்பார்வை செய்வது நிர்வாக சபையினரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின்படி அதிகார சபையானது நிறுவனத்தின் வரவு செலவு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய அனைத்திற்கும் சரியான கணக்குகளைப் பேண வேண்டும். அவற்றைப் பின்பற்றியவாறான வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது சபையின் பொறுப்பாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, எந்தவிதமான பிழையான நோக்கங்களோ அல்லது தவறுகளோ அல்லது மோசடிகளோ மேற்கொள்ளப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தக்கூடிய அளவுக்கு போதுமான ஆதாரங்களைச் சேகரித்து அதற்கமைய எனது சுயாதீன கருத்தை வெளிப்படுத்துவதே எனது பொறுப்புக்களாகும். கணக்காய்வை நியாயமான முறையில் நடத்த வேண்டும் என்பது ஒரு உயர்மட்டத் தேவைப்பாடாகும். இலங்கை கணக்கியல் தராதரங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படும் கணக்காய்வு ஒன்றின் மூலம் இந்தத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படுகின்றது. ஆனாலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வில் எந்தவிதமான பிழைகளும் இல்லை என்று உறுதியாகக் கூற முடியாது. நிதிக் கூற்றுக்களைத் தாக்கும் வகையிலான பொருளாதாரத் தீர்வு ஒன்றை அதிகாரம் பெற்றோர் ஏதேனும் காரணம் ஒன்றுக்காக மாற்றியமைத்து அல்லது வித்தியாசப்படுத்துவதற்கு திருட்டுத் தனமாக அல்லது பிழை காரணமாக ஏற்படும் பட்சத்தில் அது ஒரு தவறாகக் கருதப்படுகின்றது.

நான் இந்தக் கணக்காய்வை முன்னெடுக்கும் போது, இலங்கை கணக்காய்வுத் தராதரங்களின் தேவைப்பாடுகளுக்கு அமைய தொழில் வல்லுமையையும், நிதி மற்றும் நியாயத்தைப் பேணி கேள்வி மனப்பாங்குடனும் இதனை மேற்கொண்டுள்ளேன். மேலும்,

- நிதிக் கூற்றுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தவறுகள் மற்றும் பிழைகளை அடையாளம் காண்பதற்கான இடர்களை இனங்கண்டு அவற்றை எனது கணக்காய்வு நடவடிக்கைக்குள் உள்வாங்கி, தேவையான அளவு ஆதாரங்களைச் சேகரிப்பதற்கு அதன் மூலம் எனது கருத்தை பெற்றுக்கொடுக்கவும் நான் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளேன். நிதிக் கூற்றுக்களில் ஏதேனும் தவறு ஒன்றினை பிழை ஒன்றின் காரணமாக ஏற்பட்டதைவிட மோசடி ஒன்றின் காரணமாக ஏற்பட்ட தவறு ஒன்றை கவனிக்காது விடுவது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அதனால், மோசடி என்னும் போது போலியான செயற்பாடுகள், வேண்டுமென்றே கைவிடுதல், பொய்யான தகவல்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை மீறுதல் ஆகிய செயல்கள், பிழைகள் என்ற அடிப்படையில் வருகின்றது.
- ஏற்கனவே காண்பிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டதன் மூலம், கணக்காய்வு முறைகள் தீர்மானிக்கப்பட்டது. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளில் காணப்படும் செயற்திறனை ஆராய்வதற்காக அவை பயன்படுத்தப்படவில்லை என்பதை இங்கு தெரியப்படுத்த விரும்புகிறேன்.
- முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள வெளியீடுகள், கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயமான தன்மை என்பன மதிப்பீடு செய்யப்பட்டது.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளுக்கு அமைய, சபையானது, தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை வைக்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், குறித்த சான்றுகள் உண்மையாகவே காணப்படவில்லை என்று எனக்குத் தோன்றும் பட்சத்தில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளியீடுகள் மீது எனது கவனம் செலுத்தப்படும். அது எனது கணக்காய்வாளர் அறிக்கையிலும் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்பட்ட அந்த வெளியீடுகள் போதுமானதாக காணப்பட்டால் நான் எனது கருத்துக்களை மாற்றிக் கூறவேண்டி ஏற்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிலைமைகள் மற்றும செயற்பாடுகள் மூலம் அதிகார சபையின் தொடர்ச்சியான செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.
- நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்தக் கட்டமைப்பு, அவற்றைப் பிரசுரித்துள்ள முறை மற்றும் வெளிப்பாடுகள், அதற்கான கொடுக்கல் வாங்கல்கள் ஆகியன முறையாக நியாயமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது.
- நான் அடையாளம் கண்ட முக்கியமான கணக்காய்வு விடயங்கள் மற்றும் முக்கியமான குறைபாடுகள் பற்றியும் உள்ளகக் கட்டுப்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் பற்றியும் நிருவாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்கான விசேட ஒதுக்கீடுகளைக் கொண்டுள்ளது :

- போதியளவு விபரங்களையும், தகவல்களையும் நான் பெற்றுள்ளேன் என்பதோடு, எனது கணக்காய்வுகளுக்கு அமைய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) இன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கணக்குகள் யாவும் முறையாகப் பேணப்பட்டுள்ளது என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்.
- கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (L) (d) (iii) இன் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (l) (d) (iv) இல் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு கடந்த வருடங்களில் நான் மேற்கொண்டுள்ள பரிந்துரைகளை இவ்வருட நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்கியுள்ளன.

நான் மேற்கொண்ட கணக்காய்வு மற்றும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள சான்றுகளுக்கு அமைய, எனது அவதானிப்புக்களின்படி எந்தவிதமான பின்வரும் பாரியளவிலான விடயங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (d) இன் அடிப்படையில் தேவைப்படுத்தப் பட்டுள்ளவாறு, அதிகார சபையினால் கைச்சாத்திடப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும் முகாமைத்துவ சபையின் எந்தவொரு அங்கத்தவருக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எவ்வித தொடர்புகளும், மேலதிக நன்மைகளும் கிடைக்கப் பெறுவதாகத் தென்படவில்லை.
- பின்வரும் விடயங்கள் தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (f) இன் கீழ் கட்டாயப்படுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகளில் முகாமைத்துவ சபை எவ்வித மீறல்களையோ, பொதுச் சட்டங்களையோ, விசேட விதிமுறைகளையோ மீறவில்லை.

| சட்டங்கள்/ பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ). 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை அதிகாரச் சட்டம் | |
| 46(3) ஆம் பிரிவு | அதிகார சபையின் இலக்குகளை மீறி 2015 முதல் 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் அலுவலகக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காகவும், அதற்குத் தேவையான காணியைக் குத்தகைக்குப் பெற்றுக் கொள்வதற்காகவும், சக்தி வலு நிதியத்திலிருந்து ரூபா 65,794,255 வை இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை பெற்றிருந்தது. இந்தக் கட்டடம், ஒரு மாதிரி நிலையமாகப் பயன்படுத்தப்படும். பொது மக்களுக்கு சக்தி வலுவை செயற்திறனுடன் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி தெளிவுபடுத்தும் வகையிலும், சக்தி வலுவை செயற்திறனாகப் பயன்படுத்தக்கூடிய கட்டடங்களை அமைக்க முடியும் என்பதற்கான ஒரு சான்றாகவும், இயற்கையான சக்தி வலுவைப் பெருமளவில் பயன்படுத்தி சக்தி வலு பயன்பாட்டை முடிந்த வரை குறைக்கும் வகையிலும், கட்டடத்தை நிர்மாணிக்கும் வகையில் இது மேற்கொள்ளப்பட்டதாக சபையின் தலைவர் எமக்கு அறிவித்திருந்தார். |
| (ஆ). இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் ஸ்தாபனக் குறியீடு | |
| 2 ஆம் அத்தியாயத்தின் பிரிவு 13.7 | பதில் பதவிகளை வகிப்போருக்கு எவ்வித மேலதிகக் கொடுப்பனவுகளும் வழங்கப்படக் கூடாது என்ற கட்டாய நிபந்தனை இருந்தும்கூட, இதற்கு மாறாக சபையானது, பதில் பதவிகளுக்காக ரூபா 3,714,952 வை கொடுப்பனவாக வழங்கியுள்ளது. அத்துடன், 2013 முதல் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை எரிபொருள் கொடுப்பனவாக ரூபா 4,853,050 ஐயும், போக்குவரத்துக் கொடுப்பனவாக 2015 முதல் 2019 வரை ரூபா 5,020,000 ஐயும் கொடுப்பனவாக வழங்கி குறித்த சட்ட திட்டங்களை மீறியுள்ளது. |

| சட்டங்கள்/ பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (இ). இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i). நிதிப் பிரமாணம் 454 | நிதிப் பிரமாணங்களுக்கு அமைய இருப்புக்கள் சரிவர பேணப்படவில்லை. |
| (ii). நிதிப் பிரமாணம் 757(1) | சொத்துக்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்தப்படவில்லை. |
| (ஈ). திறைசேரிச் சுற்றறிக்கை | |
| 1978 டிசம்பர் 19 ஆம் திகதிய சுற்றறிக்கை இல. 842 | ரூபா 978,732,975 பெறுமதியான நிலையான சொத்துக்கள், சுற்றறிக்கைக்கு அமைய உரிய முறையில் பராமரிக்கப்படவோ இற்றைப்படுத்தப்படவோ இல்லை. |
| (உ). பொது நிறுவனங்கள் சுற்றறிக்கைகள் | |
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய சுற்றறிக்கை இல. PED 12 | அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள், நிதியாண்டு முடிவுற்ற 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், இந்தக் கூற்றுக்கள் 2019 நவம்பர் 04 ஆம் திகதியன்று, அதாவது, 08 மாதங்கள் தாமதமாகவே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| 2003 ஜுன் 02 ஆம் திகதிய சுற்றறிக்கை இல. 12 இன் பிரிவு 9.3 | சபை உத்தியோகத்தர்களை பணியில் அமர்த்துவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படவோ அல்லது அங்கீகரிக்கப்படவோ இல்லை. |
| (ஊ). பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | |
| 2011 டிசம்பர் 12 ஆம் திகதிய 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | தொழில் வல்லுநர் கொடுப்பனவுகள் (இலங்கை பொறியியலாளர் சங்க அங்கத்தவர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டிய), முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் எந்தவிதமான அனுமதியும் பெறப்படாது, பணிப்பாளர் சபை அனுமதியை மாத்திரம் பெற்று 2016 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 2018 டிசம்பர் 31 வரை இலங்கை பொறியியலாளர் சங்கத்தில் அங்கத்துவம் பெறாத சபையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ரூபா 10,751,000 வை கொடுப்பனவாக வழங்கியுள்ளது. |

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(g) ஆம் பிரிவுக்கு அமைய வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தாண்டி சபை செயற்பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12(g) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, சபையின் சொத்துக்கள் யாவும் செயற்திறனுடனும், பொறுப்பாகவும், முறையாகவும், உரிய நேரத்திற்கேற்ப பராமரிக்கப்படவில்லை.

## கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட ஏனைய விடயங்கள்

(அ). 2016 ஆம் ஆண்டில் 09 மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் ஒவ்வொரு வலயக் கல்வி வேலைத் திட்டங்களுக்காகவும், அறிவு முகாமைத்துவ வேலைத் திட்டத்திற்காகவும் முற்பணமாக ரூபா 13,348,087 வை பிராந்திய அலுவலகங்களுக்கு சபை பெற்றுக் கொடுத்துள்ளது. எவ்வாறாயினும், இவ்வாறு பெற்றுக்கொடுக்கப்பட்ட பணத்தில் ரூபா 3,765,051 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை மீளப் பெறப்படவில்லை.

(ஆ). சபை, சுமார் 01 தொடக்கம் 04 வருடங்களாக ரூபா 1,093,512 வை பெற வேண்டிய நிலுவைத் தொகையாகப் பேணி வருகிறது. எவ்வாறாயினும், ஆய்வுக்குட்பட்ட வருட இறுதி வரை குறித்த தொகையை அறவிட்டுக்கொள்ள சபையினால் முடியாது போயுள்ளது.

(இ). ஆய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதியில் ரூபா 15,735,724 விலிருந்து ரூபா 6,952,796 வை கடந்த 01 தொடக்கம் 04 வருடங்களில் செலுத்த வேண்டியவை மற்றும் கடன் கொடுத்தோர் கணக்கு என்பனவற்றில் காண்பிக்கப்பட்டுள்ளன. ரூபா 73,044 வானது, கடந்த 8 வருடங்களாக செலவினங்களாகக் காண்பிக்கப்பட்டு வருகின்றது. ஆய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதி வரையிலும் குறித்த தொகையை சபை அறவிட நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஈ). கணக்காய்வின் போது, இரண்டு வருடங்களாக ரூபா 10,333,800 பூர்த்தியடையாத வேலைகளாக கணக்குகளில் காட்டப்படாமல் இருந்து வருகிறது. 2018 ஆம் ஆண்டில் குறித்த நடவடிக்கைகளுக்காக எந்தவிதமான செலவினங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக, சபை எந்தவிதமான பணிகளையும் மேற்கொள்ளவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது.

(உ).பயன்படுத்தப்படாத நிலுவைத் தொகையாக ரூபா 175,744,396 மொத்த வரவு செலவுக் கணக்குகளில் 33% ஒதுக்கீடாகக் காணப்பட்டது. இது, குறித்த நான்கு வேலைத் திட்டங்களுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் செலவினம் ரூபா 526,135,593 என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதன் உண்மையான செலவினமாக ரூபா 350,391,197 குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஊ).செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் 06 பிரிவுகளுக்கு ODSM இன் கீழ் மீளாய்வு செய்யப்பட்டதன்படி ரூபா 17,000,000 ஒரு ஒதுக்கீடாக மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அதில் ரூபா 8,876,452 மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. 48% அதாவது, ரூபா 8,123,548 பயன்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. நிர்வாகச் செலவினங்களாக கட்டட வாடகை உட்பட மொத்தமாக ரூபா 5,957,701 புத்தகங்களில் காண்பிக்கப்பட்டாலும், குறித்த வேலைத் திட்டத்திற்காக ரூபா 2,918,751 மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது.

(எ). இந்துறான சர்வதேச ஊக்குவிப்பு மைய வேலைத் திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 25,000,000 ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றிருந்தாலும், அதில் 2018 டிசம்பர் 31 வரை 26% அதாவது, ரூபா 6,392,059 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. இதனால், 74% அதாவது, ரூபா 18,607,941 செயற்திறன் மிக்க முறையில் பயன்படுத்தப்படாமல் நிலுவையாகக் காணப்படுகின்றது.

(ஏ). 2012 நவம்பர் மாதம் இலங்கை மின்சார சபைக்கு பிராந்திய ஒளியமைப்பு மையத்தின் (RCL) சொத்துக்களையும் மற்றும் அதன் முகாமைத்துவத்தையும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை மாற்றியிருந்தாலும்கூட இந்த மாற்றம் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், 2019 டிசம்பர் வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 8,033,270 குத்தகை வாடகையை அறவிட சபையால் முடியாது போயுள்ளது.

(ஐ). SWITCH-Asia வேலைத் திட்டத்திற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 7,334,354 விலிருந்து சபையானது, ரூபா 3,135,202 வை அதன் ஊழியர்களுக்கு 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தொழில் வல்லுநர்களுக்கான கொடுப்பனவுகள் என்ற அடிப்படையில் செலுத்தியுள்ளது. இது, அரச வர்த்தக நிறுவனங்களுக்கான 1994 ஜுன் 04 ஆம் திகதிய 95 ஆம் இலக்க சுற்று நிருபத்தை மீறியுள்ள செயலாகும். 2012 டிசம்பர் 03 ஆம் திகதி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைய 2019 டிசம்பர் வரையிலும் குறித்த தொகைகளை உரிய அதிகாரிகளிடமிருந்து மீள அறவிட்டுக் கொள்வதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் அதிகார சபை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஒ). அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 2007 முதல் 2011 வரையான காலப்பகுதியில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்பனவற்றில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் காரணமாக, மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,171,760 வை உரிய அதிகாரிகளிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ள எந்தவித நடவடிக்கைகளையும் சபை மேற்கொள்ளவில்லை.

(ஓ). 2003 ஜுன் 02 ஆம் திகதிய அரச வர்த்தகங்கள் சுற்று நிருபம் இல. PED/12 பிரிவு 5.1.2 க்கு அமைய, அடுத்து வரும் மூன்று வருடங்களுக்கான குறுங்கால மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் என்பனவற்றைத் தயாரிப்பதற்காக முகாமைத்துவ சபை எவ்வித ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. அதற்கமைய, எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மேலும், வருடாந்த செயற்திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டிய தேவைப்பாடு காணப்பட்டிருந்தாலும், அதிகார சபையானது, வருடாந்தம் ஏற்பட்டு வரும் வளர்ச்சிக்கு அமைய குறித்த அறிக்கையையோ அல்லது திட்டத்தையோ மீளமைக்கவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

(ஔ).இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பனவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஜுன் 22 ஆம் திகதிய 631 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தத்திற்கு அமைய, அதிகார சபையானது, பத்தரமுல்லையில் 75 பேர்ச்சஸ் காணி ஒன்றை 2015 ஆம் ஆண்டில் 30 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு டிசம்பர் முடிவின் போது இந்தக் காணியின் திட்டமிடலுக்காக ரூபா 5,984,915 செலவிடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. அதில் இதுவரை எந்தவிதமான கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஃ). வாகன வடிவங்களைத் தயாரிப்பதற்காக 18 மாத ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2007 செப்டம்பர் 28 ஆம் திகதி ரூபா 7,956,800 வை அதிகார சபை, மூன்று தனி நபர்களுக்கு வழங்கியுள்ளது. 2019 டிசம்பர் 30 ஆம் திகதியன்று 12 வருடங்கள் கடந்த நிலையிலும் அதிகார சபை இந்த செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

(க). SWITCH-Asia வேலைத் திட்டத்திற்கெனக் கிடைக்கப்பெற்ற வைப்புத் தொகை ரூபா 4,548,176 வை அதிகார சபை மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கு ஒன்றில் 2011 ஆம் ஆண்டு முதல் வைப்புச் செய்துள்ளது. சக்தி வலு நிதியத்தில் ரூபா 150,000,000 வை தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக் கணக்கு ஒன்றில் பேணி வந்துள்ளது. இதற்கு எந்தவிதமான செயற்திறன் மிக்க முதலீட்டு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

டப்ளியூ. பீ. சி. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் நாயகம்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் அசல் பிரதி சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பு சம்பந்தமான ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படின் தயவு செய்து சிங்கள மொழி அறிக்கையைப் பார்க்கவும்.

# கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை - 2018 க்கான இ.நி.வ.அ.ச. யின் அவதானிப்புக்கள்

கணக்காய்வாளர் நாயகம் அவர்கள்,

தேசிய கணக்காய்வு அலுவலகம்,
306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல
06. 05. 2020

## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக, கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் மேலே கூறப்பட்ட விடயங்களுக்கு 2020.03.03 ஆம் திகதியிடப்பட்ட பின்வரும் பதில்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 1.2 கருத்துக்களுக்கான அடிப்படை விடயங்கள்

#### 1.2.1 நிதி அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

(அ) குறித்த மூலதனச் செலவினங்களை, கணக்குகளில் சரிவர சீராக்கம் செய்வதற்கும், கணக்காய்வாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவற்றைத் திருத்தம் செய்வதற்கும் 2019 ஆம் ஆண்டு நிதி அறிக்கைகளில் அவற்றைக் குறிப்பிடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ)2019 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் NAMA மற்றும் உயிரியல் திணிவு வேலைத் திட்டங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய தொகைகள் சரிவர சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

(இ) குறித்த விடயங்கள் தொடர்பான வவுச்சர்களை அதிகார சபை மீள் பரிசீலனை செய்ய இருப்பதோடு, 2019 ஆம் ஆண்டின் கணக்குக் கூற்றுக்களில் அவற்றைச் சீராக்கம் செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) உபாய முறைகள் பிரிவினால் தவறுதலாக மேற்கொள்ளப்பட்டு மற்றுமொரு கணக்கில் சேர்க்கப்பட்டிருந்த ST/04 வேலைத் திட்டத்தின் ரூபா 1,296,000 முற்பணம் செலுத்தல், சரியான முறையில் சீராக்கம் செய்யப்பட்டு, 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் முறையாகச் சமர்ப்பிக்கப்படும்.

(உ)சரியான காசுப் பாய்ச்சல் அறிக்கை - இணைப்பு 1

(ஊ)மேற்கூறப்பட்ட தவறுகளை 2019 ஆம் ஆண்டு நிதி அறிக்கைகளில் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(எ) காணியைக் கையகப்படுத்தும் நோக்கத்துடன் திட்ட அபிவிருத்தியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் தொடர்பான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஏ) 2019 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கைகளில் ஆ.அ.வ. திட்டத்திற்கு உரித்தான உபகரணங்களுக்கு வரிகளைத் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஐ) மீளமைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இணைப்பு 2

## 2. ஏனைய சட்ட மற்றும் விதிகளுக்கான தேவைப்பாடுகள்

(அ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டம்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் முக்கிய கோட்பாடு, செயற்திறன் மிக்க முறையில் சக்தி வலுவைப் பயன்படுத்துதல், மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் மின்சக்தியை செயற்திறனுடன் பயன்படுத்தி பாவனையைக் குறைக்க பொது மக்களை ஊக்குவித்தல் என்பன முக்கிய இலக்குகளாகக் காணப்படுகின்றன.

இதற்கமைய, பத்தரமுல்ல "அபே கம" வுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தலைமை அலுவலகம், 'கூடிய ஆற்றல்' என்ற தொனிப்பொருளின் கீழ் மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்டு, நடைமுறையில் இந்தக் கோட்பாடுகளை எவ்வாறு செயற்படுத்துவது என்பதை பொது மக்களுக்கு அனுபவ ரீதியாகப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி, மிகக் குறைந்த செலவில், சக்தி வலு செயற்திறன் கொண்ட கட்டடங்களை பெருமளவில் நிர்மாணிப்பது எவ்வாறு என்பதற்கான ஒரு நடைமுறை உதாரணமாகவும் இக் கட்டடம் காணப்படுகிறது. "சக்தி வலுவை மிகவும் செயற்திறனுடன் பயன்படுத்துவது" என்ற கொள்கையே இதன் தொனிப்பொருளாகும். எவ்வாறாயினும், குறித்த கட்டடமானது, கணக்காய்வு அறிக்கையில் இ.நி.வ.அ.ச. யின் இலக்குகளை மீறி கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக நிதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று கூறப்பட்டிருப்பது எமக்கு கவலையை ஏற்படுத்துவதாக உள்ளது. இது முற்றிலும் மக்களுக்கு உதாரணம் காட்டுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஒரு கட்டடமாகும். இதன் காரணமாக, இந்தக் கட்டடத்தின் விளக்கத்தை நன்கு புரிந்து, அதனை அமைப்பதன் நோக்கமாக அமைந்திருந்தது இ.நி.வ.அ.ச. யின் பிரதான குறிக்கோள்களை அடைந்து கொள்வதே என்பதை ஏற்றுக்கொள்ளுமாறு மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

தனது நிதிகளை பொது மக்களை அறிவுறுத்தும் திட்டங்களுக்காகப் பயன்படுத்த சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாகவே அந்த நிதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக, "அனைத்து விதமான செலவினங்களும் பணிப்பாளர் சபையின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(ஆ)அதிகார சபை 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் இருந்த நிறுவனமான சக்தி வலு பாதுகாப்பு நிதியத்தின் ஒரு தொடராகவே அதிகார சபை நிறுவப்பட்டது. சபையின் முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில், அடுத்த மூன்று ஆண்டு செயற்பாட்டுத் திட்டங்களுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டாலும், முன்மொழியப்பட்ட ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் திட்டத்திற்கான அனுமதிகள், அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதில் சபை கடுமையான இன்னல்களுக்கு முகம் கொடுத்தது. பிரதானமாக, சபையின் நோக்கங்களை அடைந்து

கொள்வதற்கான பொருத்தமான மனித வளத்தை ஈர்ப்பதற்குத் தேவையான அனுமதிகளைப் பெறுவது கடினமாகவே இருந்தது. கடந்த தசாப்தத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் இறுதியிலும், இன்னமும் இ.நி.வ.அ.ச. வின் ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் திட்டமானது, சக்தி வலு பாதுகாப்பு நிதியத்திலிருந்து இ.நி.வ.அ.ச. ஆக மாற்றப்பட்ட போது காணப்பட்ட அதே திட்டமே தற்போதும் நடைமுறையிலுள்ளது. சபைக்கு வழங்கப்பட்டுள்ள இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடிய பொருத்தமான, திறமையான மனித வளத்தை ஈர்ப்பதற்கு சாதாரண தொழில் தலைப்புக்களுடன் காணப்படும் பதவிகளுக்கு சாதாரணமான அனுகூலங்களைப் பெற்றுக் கொடுத்த சிறந்த திறமைகளை உள்வாங்குவது என்பது சாத்தியமாகக் காணப்படவில்லை. அதிலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, ஊழியர்களை உள்வாங்கும் போது, குறித்த திறமைகளை சபைக்குள் ஈர்ப்பதற்கு வாய்ப்புக்கள் காணப்படுவதில்லை. எனவே, ஏற்கனவே சபையில் பணியாற்றி வரும் அனுபவம் வாய்ந்த அதிகாரிகளுக்கு மேலதிகப் பொறுப்புக்கள், செயற்பாட்டு ரீதியான அம்சங்களைப் பெற்றுக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மனித வளங்களை மேலதிகமாகப் பெற்றுக்கொள்ள முடியாது. புதிய மனித வள உபாயங்களை செயற்படுத்தவும் முடியாது. எனவே, மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எவ்வாறாயினும், இதற்கென அமைச்சிடமிருந்தும், தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர்கள் ஆணைக்குழுவிடமிருந்தும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேறு எந்தவொரு மாற்று வழிகளும் இல்லாத சந்தர்ப்பத்தில் இவ்வாறான தீர்மானங்களை மேற்கொண்டதனால் சபைக்கு எந்தவிதமான பாதிப்பும் இதுவரை ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன், இக்குறித்த அதிகாரிகள் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்களாகவும், தகுதி பெற்றவர்களாகவும் இருப்பது மேலும் ஒரு முக்கிய விடயமாகும். ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் குறித்த வேலைத் திட்டம், உரிய நேரத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் இந்த தேவைப்பாடு ஏற்பட்டிருக்க மாட்டாது. இந்தப் பொறுப்புக்கள் வழங்கப்பட்ட அதிகாரிகள் தமது நடவடிக்கைகளை மிகவும் சிறந்த முறையில் முன்னெடுத்துள்ளனர். அவர்கள் மேலதிகமாக மேலும் பல செயற்திட்டங்களை தங்களது பதவிகளில் இருந்தவாறே மேற்கொண்டுள்ளார்கள். எவ்வாறாயினும், முகாமைத்துவ சபையின் தீர்மானங்களுக்கு அமைய இந்த அனைத்து பதில் பதவிகளும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

(இ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிக் கட்டுப்பாடுகள்

(I) கணக்காய்வாளர் நாயகத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட முறைகளுக்கு அமைய, இருப்புக்களின் விபரங்களை சரியான முறையில் பராமரிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(II) 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு அமைய, பொருத்தமான மாதிரிகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு, மூலப்பொருள் சொத்துக்களின் தரங்களை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) திறைசேரியின் சுற்று நிருபங்கள்

நிலையான சொத்துக்களை ஆவண மயப்படுத்துவதற்காக பொருத்தமான கணனி மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான வேலைகளை 2020 மே மாதமளவில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ) அரச வர்த்தகங்களுக்கான சுற்று நிருபங்கள்

I. 2018 ஆம் ஆண்டில், நிதிப் பிரிவின் பிரதம அதிகாரி ஒருவர் இல்லாத காரணத்தினால், 2017 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பிரசுரிப்பது தாமதமடைந்தது. 2017 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தாலும், இந்தக் கூற்றுக்கள் முகாமைத்துவ சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டிருந்ததனால், கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் பின்னர் நாட்டில் நிலவிய அரசியல் சூழ்நிலை காரணமாக, 2018 டிசம்பர் மாதத்திலேயே ஒரு சபைக் கூட்டத்தை நடத்தக் கூடியதாக இருந்தது. இதனால், நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு 2019 ஜனவரி மாதத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 05 ஆம் திகதி கிடைக்கப் பெற்றது. இதனால், 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2017 ஆம் ஆண்டு கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரைகளையும் உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை உரிய நேரத்தில் சமர்ப்பிக்க சபை எதிர்பார்க்கின்றது.

II. ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் திட்டத்திற்கான முன்மொழிவு ஒன்று தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும், கீழ்மட்டப் பதவிகளான முகாமைத்துவ உதவியாளர் என்ற பதவி வரையிலான நிலைகளுக்கு ஆட் சேர்ப்பு மேற்கொள்வது வரை மாத்திரமே அனுமதிகள், அங்கீகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஏனைய பதவிகளுக்கான தகவல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 2020 ஜனவரி 21 ஆம் திகதி நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போது குறித்த திணைக்களத்தின் பணிப்பாளர் கருத்து வெளியிடுகையில், இன்னும் சில காலத்தில் சகல அங்கீகாரங்களும் பொருத்தமான வகையில் பெற்றுக் கொடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

(ஊ) பொது நிருவாக சுற்று நிருபங்கள்

அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் உரிய அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 3. கணக்காய்வில் காணப்பட்ட ஏனைய அவதானிப்புக்கள்

(அ) குறித்த பிராந்தியக் கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு உரிய தொகைகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(ஆ)கிடைக்கப் பெறவிருக்கும் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) செலுத்தப்பட வேண்டியவை மற்றும் கடன் கொடுத்தோர் கணக்கு என்பனவற்றின் தவறுகள் திருத்தப்பட்டு, சரியான கணக்குகளில் உரிய தொகைகள் பதியப்பட்டுள்ளன.

(ஈ) பொகவந்தலாவயில் காற்றை அளவிடும் கருவிகளை நிறுவும் பணிகள் 2019 ஆம் ஆண்டில் முடிவடைந்துள்ளன. 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் அடிப்படையில் இது காண்பிக்கப்படும். அதன் பெறுமதி ரூபா 2,377,000 ஆகும். இலத்திரனியல் மோட்டார் வாகனங்களைத் தயாரிப்பதற்காக ரூபா 7,596,800 செலவிடப்பட்டுள்ளது. இவற்றுக்கான ஒதுக்கீடுகளும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

(உ)வெளிநாட்டு நிதியங்கள் மூலம் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள், உரிய நேரத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அவசியம் உள்ளது. எனினும், பல்வேறு காரணங்களினால் அவற்றுக்கான செலவினங்கள் பின்னரே எமக்குத் தெரிய வரும். இதற்கு மேலதிகமாக, 2018 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக ஏற்பட்ட பிரதான முகாமைத்துவ மாற்றங்களும், அதிகார சபையின் நடவடிக்கைககளைப் பெரிதும் பாதிக்கும் வகையில் அமைந்திருந்தன.

(ஊ)எமக்குரிய அமைச்சு இந்த வேலைத் திட்டத்தை 2017 ஆம் ஆண்டில் ஆரம்பித்திருந்தது. இந்த வேலைத் திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பு, தேசிய செயற்பாட்டுக் குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த குழுவின் செயலாளர் என்ற ரீதியில் நிர்வாக விடயங்கள் மாத்திரமே அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. தேவையான ஊழியர் பதவிகளுக்கான அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் பல முறை முயற்சிகள் மேற்கொண்டிருந்தாலும், இவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பு முகாமைத்துவப் பிரிவிடமே கையளிக்கப் பட்டிருந்தது. உரிய அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பன இவற்றுக்குரிய அனுமதிகள் மற்றும் அங்கீகாரங்களை இதுவரை வழங்கவில்லை. அவற்றுக்கு பல்வேறு காரணங்களை முன்வைத்திருக்கின்றன. இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு, அதிகார சபையில் தற்போது பணியாற்றும் ஊழியர்களைக் கொண்டு இந்த வேலைத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு சபை தள்ளப்பட்டுள்ளது.

எமக்குத் தேவையான அளவு மனித வளங்கள் இதற்குக் கிடைக்காமல் போனதே, இந்த வேலைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஒதுக்கீடுகளையும் முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் போனமைக்குக் காரணமாகும்.

கடினமான சூழ்நிலைகள் காணப்பட்ட சந்தர்ப்பங்களிலும், அதிகார சபையானது, பத்துப் படிமுறைகள் கொண்ட செயற்திட்டம் ஒன்றை வகுத்து, வெற்றிகரமான பெறுபேறுகளையும் அடைந்து கொண்டது. அந்தச் செயற் திட்டத்தின் படிமுறைகள் பின்வருமாறு:

1. செயற்திறன் மிக்க குளிரூட்டிகள்

   கருவிகளைப் பரிசோதிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு மற்றும் தேவைப்பாடுகள் பற்றிய முன்மொழிவு ஒன்று உரிய அமைச்சின் வெளிக்கள வளங்கள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, கொரிய அரசாங்கத்தின் அரச நிறுவனங்களுடன் வெற்றிகரமான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2. செயற்திறன் மிக்க ஒளியமைப்பு

   வர்த்தக மற்றும் தொழிற்சாலைகளை உள்ளடக்கிய வகையில், 100 அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் மின் குமிழ்களை மீளமைப்பதற்கான ஆய்வு ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதற்கமைய, ரூபா 15,700 மில்லியனை முதலீடு செய்வதன் மூலம், வருடம் ஒன்றுக்கு 515,000,000 மின்சார அலகுகளைச் சேமிக்க முடியும் என இனங்காணப்பட்டுள்ளது.

3. செயற்திறன்மிக்க குளிர்சாதனப் பெட்டிகள்

   மின்சாரத்தைப் பெருமளவில் பயன்படுத்தக்கூடிய மற்றும் செயற்திறனற்ற குளிர்சாதனப் பெட்டிகளுக்குப் பதிலாக புதிய செயற்திறன் மிக்க குளிர்சாதனப் பெட்டிகளை அறிமுகப்படுத்தும் நடவடிக்கை ஒன்று வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் இதற்கென சுமார் 6,400 வீடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றின் போது, அடையாளம் காணப்பட்ட விடயங்களில் குளிர்சாதனப் பெட்டிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதன்போது, செயற்திறனற்ற மற்றும் பழைய குளிர்சாதனப் பெட்டிகளுக்குப் பதிலாக, செயற்திறன் மிக்க புதிய குளிர்சாதனப் பெட்டிகளைப் பெற்றுக் கொடுக்கும் தேசிய செயற்பாடு முன்னெடுக்கப்பட இருக்கிறது.

4. செயற்திறன் மிக்க குளிர்பதனத் தொகுதிகள்

   வர்த்தக நிறுவனங்களில் காணப்படும் பழைய மத்திய குளிர் பதனத் தொகுதிகளுக்குப் பதிலாக, செயற்திறன் மிக்க குளிர்பதனத் தொகுதிகளைப் பெற்றுக்கொடுக்க உத்தேசிக்கப்பட்டது. இதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கடன் வசதி கோரி விண்ணப்பப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரத்தை எதிர்பார்த்திருக்கின்றன.

5. செயற்திறன் மிக்க மோட்டார்கள்

   தொழிற்துறையில் பழைய மோட்டார்களை அகற்றிவிட்டு, செயற்திறன் கொண்ட புதிய மோட்டார்களை அறிமுகப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்றுக்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்போது, இந்தத் திட்டம் போதியளவு வெற்றிகரமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. எவ்வாறாயினும், புதிய திட்டம் ஒன்றின் மூலம் மின்சாரத்தைச் சேமிக்கும் மாறுபடக்கூடிய அலைவரிசைகள் கொண்ட திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

6. கம்பி இழைகள் கொண்ட மின் குமிழ்களை இலங்கையிலிருந்து முற்றாக ஒழித்தல்

2018 செப்டம்பர் 20 ஆம் திகதி LED மின் விளக்குகள் வேலைத் திட்டம் தேசிய மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், மாதாந்தம் 90 அலகுகளுக்குக் குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் வீடுகள் இலக்காகக் கொள்ளப்பட்டன. இதற்கென 1,000,000 LED மின் குமிழ்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் அரைவாசிக்கும் மேல் உரிய வாடிக்கையாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, மாலை நேரங்களில் காணப்பட்ட மின்சார கேள்வியை 7.175 மெகா வொட்டினால் குறைக்கவும், அதன் மூலம் வருடாந்தம் 10,330,000 அலகுகள் மின்சாரத்தினை சேமித்து, ரூபா 186 மில்லியனைச் சேமிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

7. செயற்திறன் மிக்க மின் விசிறிகள்

2019 ஆம் ஆண்டில் பழைய மின் விசிறிகளை அகற்றி, அதற்குப் பதிலாக செயற்திறன் மிக்க மின் விசிறிகளைப் பொருத்துவதற்கான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதற்கு 6,400 க்கும் மேற்பட்ட வீடுகள் உள்வாங்கப்பட்டன. இந்த ஆராய்ச்சிப் பெறுபேறுகளுக்கு அமைய திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட இருக்கிறது.

8. பசுமையான கட்டடங்கள்

சக்தி வலு செயற்திறன் மிக்க கட்டடங்களுக்கான நடைமுறைச் செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. இதனைச் செயற்படுத்த முன்னர், ஆர்வலர்களின் மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறைச் செயற்பாடுகளை அமுல்படுத்து வதற்குத் தேவையான கட்டுப்பாடுகள் இவ்வருடத்திற்குள் வரைபு செய்யப்படவிருக்கின்றன.

9. ஸ்மார்ட் இல்லங்கள்

அதிகார சபையின் இணைய தளத்தில் சக்தி வலு செயற்திறன் மிக்க இல்லங்களை அமைப்பதற்கான ஆவணம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் அதனை சபையின் இணைய தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

10. செயற்பாட்டு சக்தி வலு முகாமைத்துவம்

செயற்பாட்டு சக்தி வலு மற்றும் அதற்கான வளங்கள் சம்பந்தமான வர்த்தகப் பெறுமானங்களை அடையாளம் காண்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது, குறித்த அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பான மேலதிக விபரங்கள் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன.

(எ) இந்துறான வேலைத் திட்டத்திற்காக ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்தத் தொகை நீர் மின்சார உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையிலான இந்துறான ராஜகருணா ஞாபகார்த்த மையத்தினை அமைக்கும் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளுக்கு இந்த நிதி செலவிடப்பட்டிருக்கிறது. முகாமைத்துவ சபையானது, இந்த வேலைத் திட்டத்திற்காக ரூபா 15 மில்லியனை ஒதுக்கியிருக்கின்றது. 2019 ஆம் ஆண்டில் இதனை இரண்டு பகுதிகளாக முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் இதன் முதலாவது பகுதி செயற்படுத்தப்பட்டுள்ளது.

(ஏ) பிராந்திய மையத்தின் மின் குமிழ் பொருத்தும் வேலைகளை அதிகார சபையின் செலவினமாகக் காண்பிப்பதற்கும், வாடகைத் தொகை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்குமென சபைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சபையின் பரிந்துரைகளுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஆலோசனைகளுக்கு அமைய, உரிய தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்குத் தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கு அடுத்து வரும் 2020 மே மாதத்தில் நடைபெற இருக்கும் சபைக் கூட்டத்தில் சபைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

(ஒ) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, முகாமைத்துவ சபையின் வேண்டுகோளுக்கு அமைய ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரினால் முன்னெடுக்கப்பட்டதாகும். இந்த அறிக்கையில் பல்வேறு தவறுகள் காணப்படுவதாக அறியப்பட்டதன் பின்னர், இந்த அறிக்கையைப் பயன்படுத்தி தீர்மானங்களை மேற்கொள்வதன் மூலம் பாதகமான விளைவுகள் ஏற்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

எனவே, பிழையான அறிக்கைக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ள சம்பளப் பிரிவுகள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்வது தவறாகும். எவ்வாறாயினும், அதிகார சபை நிறுவப்பட்ட, சட்டத்தின் பிரிவு 69(e) இன் அடிப்படையில் மாற்று வழிமுறைகள் மற்றும் ஏற்கனவே சபைக்கு, முன்னர் காணப்பட்ட சக்தி வலு பாதுகாப்பு நிதிய ஊழியர்களின் சம்பள விபரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

i. சபை வழங்கிய பதவிகளை ஏற்றுக்கொண்ட சக்தி வலு பாதுகாப்பு நிதியத்தின் அனைத்து ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளையும் அதிகார சபை பணியில் அமர்த்தியது. அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட நியதிகளும், நிபந்தனைகளும் அவர்கள் அதற்கு முன்னர் அனுபவித்த அனுகூலங்களில் எந்தவித குறைபாடுகளும் இல்லாமல் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது அல்லது,

ii. அதிகார சபையினால் வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களை ஏற்றுக்கொள்ளாத சகல ஊழியர்களுக்கும் அல்லது அதற்குத் தகுதி பெறாத அனைத்து ஊழியர்களுக்கும் பெற்றுக்கொடுக்கக்கூடிய நட்டஈடு தொடர்பாக முகாமைத்துவ சபை உரிய அமைச்சிடம் வினவியுள்ளது.

இதற்கமைய, சகல ஊழியர்களுக்கும் அவர்கள் ஏற்றுக்கொண்ட வகையில் சம்பளங்களைப் பெற்றுக் கொடுக்க அதிகார சபை இணங்கியிருக்கின்றது என்பதோடு, கட்டாயப்படுத்தப்பட்டிருக்கின்றது. மாற்று வழி முன்மொழிவை (1) ஏற்றுக்கொண்டு அதிகார சபையில் இணைந்துள்ள அனைவருக்கும் இது பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. அதற்கமைய சம்பள மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிகார சபையின் புதிய ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் திட்டத்திற்கு அமைய, முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஊழியர்களை உள்வாங்கிக் கொள்வதற்கும், இந்த விடயம் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கும் குழு பிரதானமாக நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் அறிக்கை முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது.

(ஓ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் 2012 - 2016 ஆம் ஆண்டுகளுக்கான நீண்டகாலத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இவை அனைத்தும் நீண்டகால நடவடிக்கைகளாகவே காணப்படுகின்றன. இதற்குப் பிந்திய காலப்பகுதிகளுக்கான செயற்பாடுகள் 2015 - 2025 ஆண்டுகளிலான 10 வருட காலத்தில் செயற்படுத்தவும், முக்கியமான திட்டங்களை முற்படுத்திச் செயற்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய சக்தி வலு கொள்கையானது, மின்சக்தி எரிசக்தி மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சினால் தயாரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் இந்தக் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் கலந்து கொண்டனர். அதனால், பிரதானமாக நிலையான சக்தி வலு தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இந்தத் தேசிய சக்தி வலு கொள்கைக்கு அமைய, அதிகார சபையின் நீண்டகாலத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. தற்போது தேசிய சக்தி வலு கொள்கை பிரசுரிக்கப்பட்டிருப்பதனால், அதற்கமைய அதிகார சபையின் நீண்டகாலத் திட்டங்கள் அதனை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட இருக்கின்றன.

(ஔ)பல்வேறு கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டிருந்தாலும், அதிகார சபையானது, அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு இணங்கி செயற்பட வேண்டிய கட்டாயத் தேவை காணப்பட்டது. அதற்கமைய, கட்டட நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய திட்டமிடல் பிரிவின் அனுமதி, அங்கீகாரம் தேவையாக இருந்தது. இதற்கு ஆரம்ப அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், மேலதிக அனுமதிகளும் கிடைக்கப் பெறவிருந்தன. இதற்கமைய, கட்டுமானப் பணிகளுக்கான அனுமதி கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது என்பதை கணக்காய்வுப் பிரிவுக்குத் தெரிவிக்க வேண்டும். 2019 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததனால், இது அரசாங்கத்தின் கொள்கைசார் தீர்மானங்களுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட ஒன்று என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது. இதன் காரணமாக, எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

(ஃ) இந்த வேலைத் திட்டச் செலவினங்களை செயற்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு, சட்ட மா அதிபர் திணைக்களத்திலிருந்து ஆலோசனைகள் கோரப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கைகளை ஒரு சமநிலைக்குக் கொண்டு வருவதற்காக வெளிக்கள இணக்கக் குழு ஒன்றின் உதவிகளும் பெறப்பட்டன. இதற்கமைய, ஓய்வு பெற்ற நீதிபதி உபாலி ஆரியரத்ன அவர்கள் இணக்க நடவடிக்கையாளராகச் செயற்பட்டார். அவரது தலைமையில், உரிய பிரிவினர்களுடன் பல்வேறு கூட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய, ஒப்பந்தத்தின் அடிப்படையில் திட்டத்தை முழுமையாகப் பூர்த்தி செய்வது கடினமானது என அவர் சுட்டிக் காட்டியிருந்தார். இதற்கமைய, மூன்று மாதிரிகளையும் உள்ளடக்கிய வகையில் தனி வாகனம் ஒன்றைத் தயாரித்து, அதனைக் காட்சிப்படுத்துமாறும் இது பொருத்தமாக இருக்குமெனவும் அவர் கூறினார். இந்த முன்மொழிவினை பணிப்பாளர் சபை முன் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

(க) முகாமைத்துவ சபை மற்றும் திறைசேரியின் அனுமதி பெற்று இந்தத் தொகையை முதலீடு செய்ய அதிகார சபை எதிர்பார்க்கின்றது.



தலைவர்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் பதில்கள் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பு சம்பந்தமான ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படின் தயவு செய்து சிங்கள மொழி அறிக்கையைப் பார்க்கவும்.

# இணைப்பு 1

## நிதிப் பாய்ச்சல் அறிக்கை

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

(சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| | குறிப்பு | 2018 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல் | | |
| ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை) | | 91,854,384 |
| சீராக்கங்கள் - | | |
| இழப்பு மற்றும் சேதங்கள் | | - |
| வட்டி வருமானம் | 3,8 | (19,379,480) |
| இலதாக்கப்பட்ட மானியம் (பெறப்பட்ட நிதிகளுக்கு) | 7 | (350,329,330) |
| எரிசக்தி நிதிக்கு மாற்றம் | | - |
| சேவை பணிக்கொடை வழங்கல் | | 4,378,837 |
| பணிக்கொடைக் கட்டணம் | | (684,422) |
| மீள் மதிப்பீட்டு நட்டம் | | 260,579,597 |
| தேய்மானம் மற்றும் கடன் பெறுதல் | 5.6 | 91,278,282 |
| மூலதன மாற்றங்களுக்கு முந்திய இலாபம் / (நட்டம்) | | 77,697,867 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் (அதிகரிப்பு) / குறைவு | | (839,302) |
| நடைமுறைப் பொறுப்புக்களில் அதிகரிப்பு / (குறைவு) | | (4,483,705) |
| செயற்படு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) நிகர காசுப் பாய்ச்சல் | | 72,374,860 |
| ஆதனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவு | 9.1 | (9,664,155) |
| கட்புலனாகாச் சொத்துக்கள் | | (160,000) |
| நடைபெறும் வேலை | 11 | (12,594,272) |
| நிலையான வைப்பு மற்றும் பிறை சேரி உண்டியல் முதலீடு | 12 | (8,679,877) |
| வட்டி வருமானம் | | 19,311,214 |
| அபிவிருத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) நிகர காசுப் பாய்ச்சல் | | (11,787,090) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) நிகர காசுப் பாய்ச்சல் | | |
| ஒத்திவைக்கப்பட்ட மானியம் | 18 | - |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம் | | - |
| திரட்டிய நிதியம் | | - |
| நிலைபெறுதகு உத்தரவாத நிதியம் | | - |
| வெளிநாட்டு நன்கொடையாளர்களுக்கு செலுத்த வேண்டிய கடன்கள் | | - |
| ஆ.அ.வ. யிடமிருந்து கடன் (L 2892 SRI) | 13 | - |
| ஆ.அ.வ. கடன் வழங்கல் (L 2733 SRI) | 13 | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) நிகர காசுப் பாய்ச்சல் | | - |
| நிகர காசும் காசுக்குச் சமமானவையும் அதிகரிப்பு / (குறைவு) | | 60,587,770 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | 16 | 392,220,724 |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் | | 452,808,494 |

# இணைப்பு 2

## நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது
(சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| | குறிப்பு | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) | 2017 |
|---|---|---|---|---|
| **குறிப்பு 02 - செயற்பாட்டு வருமானம்** | | | | |
| திறைசேரி வருமானம் (மூலதனம்) | | 59,572,500 | 45,074,381 | 45,074,381 |
| கடனளிக்கப்பட்ட வேறுபட்ட மானியம் | | 350,329,330 | 91,280,105 | 91,280,105 |
| திறைசேரி வருமானம் (தொடர்ச்சியான) | | 97,761,666 | 92,987,000 | 92,987,000 |
| திறைசேரி மானியம் (சமயத்தலங்களில் சூரிய சக்தி வலுவை நிறுவுதல்) | | 210,041,000 | 20,000,000 | 20,000,000 |
| மின் உற்பத்தி - ஹம்பாந்தோட்டை | | 16,945,911 | 21,882,117 | 22,959,531 |
| மின் உற்பத்தி - இந்துறான | | 1,211,444 | 864,666 | 864,666 |
| சக்தி வலு முகாமையாளர் பயிற்சி சார் வருமானம் | | 15,000 | 110,000 | 110,000 |
| சூரிய சக்தி வரைபட வருமானம் | | 47,500 | 122,500 | 122,500 |
| காற்று தரவு வருமானம் | | - | 500,000 | 500,000 |
| சக்தி வலு ஆய்வு வருமானம் | | 45,000 | 62,135 | 62,135 |
| சக்தி வலு அனுமதி வருமானம் | | 109,735,536 | 21,194,365 | 21,194,365 |
| சூரிய சக்தி பதிவுக் கட்டணம் | | 6,600,000 | | |
| சூரிய சக்தி பயிற்சித் திட்டம் | | 775,200 | | |
| மொத்தம் | | 853,080,087 | 294,077,269 | 295,154,683 |
| **குறிப்பு 04 - திட்டச் செலவினம்** | | | | |
| **குறிப்பு 4.1 புதுப்பிக்கத்தக்க மின்சக்தி** | | | | |
| வள ஒதுக்கீடு மற்றும் மேம்பாடு | | 2,449,875 | 1,008,534 | 1,008,534 |
| முன்னேற்றக் கண்காணிப்பு | | 446,178 | 350,206 | 219,656 |
| தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி | | 2,555,836 | 389,553 | 389,553 |
| புதுப்பிக்கத்தக்க மின் சக்தித் திட்டங்கள் | | - | 68,998,517 | 68,852,227 |
| நன்கொடை நிதியளிப்புத் திட்டங்கள் UNDP உயிரியல் திணிவுத் திட்டம் | | 12,603,778 | 11,021,719 | 11,021,719 |
| நன்கொடை நிதியளிப்புத் திட்டம் - ஆ.அ.வ. (L 2892 SRI) | | 24,545 | 119,300,576 | 121,320,932 |
| NAMA திட்டம் | | 20,035,670 | 1,777,761 | 1,777,761 |
| ஆ.அ.வ. திட்டம் | | - | 459,628 | 1,840 |
| ஹம்பாந்தோட்டை தள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்பாடு | | 35,898,480 | 6,427,931 | 6,427,931 |
| இந்துறான தள செயற்பாடு | | 2,418,124 | 894,793 | 894,793 |
| IFC சூரிய மின் திட்டம் | | - | 43,187 | 43,187 |
| பூநகரி மின்சக்திப் பேட்டை திட்டம் | | 1,256,587 | 610,303 | 610,303 |
| நன்கொடை நிதியுதவித் திட்டம் - ஆ.அ.வ. (L 2733 SRI) | | - | 14,880,000 | 14,880,000 |
| நம்பகமான மின் விநியோக மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆதரவு | | 135,310 | | |
| மகாவலி திட்ட முன்னேற்றங்கள் | | 283,709 | | |
| மாகாண மின்சக்தித் திட்டங்கள் | | 3,899,683 | | |
| சூரிய பல சங்கிரமய | | 202,060,428 | | |
| மொத்தம் | | 284,068,203 | 226,162,708 | 227,448,436 |

| குறிப்பு | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) | 2017 |
|---|---|---|---|
| **குறிப்பு 4.2 சக்தி வலு முகாமைத்தவம்** | | | |
| சக்தி வலு முகாமைத்துவக் கலங்கள் | 1,188,918 | 3,417,816 | 3,125,444 |
| தர நிலைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் | 2,106,067 | 4,977,214 | 4,025,436 |
| ஆலோசனை மற்றும் கருத்துரை வழங்கல் | 647,572 | 84,400 | 84,400 |
| வெகுமதிகள் மற்றும் சாதனைகள் | 5,015,989 | 5,393,655 | 5,393,655 |
| துறை சார் திட்டங்கள் | 280,683 | 107,000 | 107,000 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 123,100 | 7,000 | 7,000 |
| சக்தி வலு கணக்காய்வு | 240,500 | 103,360 | 103,360 |
| கேள்வி சார் முகாமைத்துவம் | 8,876,452 | 6,217,900 | 3,639,450 |
| முன்னோடித் திட்டத்தை நிறுவுதல் | 30,826 | | |
| மொத்தம் | 18,510,107 | 20,308,345 | 16,485,745 |
| **குறிப்பு 4.3 அறிவு முகாமைத்துவம்** | | | |
| சக்தி வலு கல்வித் திட்டங்கள் | 2,042,427 | 21,125,170 | 19,544,858 |
| ஊக்குவிப்புத் திட்டங்கள் | 6,688,903 | 961,924 | 961,924 |
| விதுல்க | 3,616,549 | 65,885 | |
| இ.நி.வ.அ.ச. இணைய ஹோஸ்டிங் கட்டணங்கள் | 628,881 | | |
| மொத்தம் | 12,976,760 | 22,152,979 | 20,506,782 |
| **குறிப்பு 5.5 தொடர்பு சேவைகள்** | | | |
| அலுவலக வாடகை மற்றும் வாடகைக் கட்டணங்கள் | 33,247,178 | 29,691,288 | 29,691,288 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்புக் கட்டணங்கள் | 4,532,213 | 4,240,994 | 4,292,164 |
| போக்குவரத்து | 626,925 | 696,451 | 696,451 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 726,000 | 660,000 | 660,000 |
| மொத்தம் | 39,132,316 | 35,288,733 | 35,339,903 |
| **குறிப்பு 5.6 தேய்மானம், வலுக்குறைவு மற்றும் கடனளிப்பு** | | | |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,092,112 | 1,044,732 | 1,044,732 |
| மோட்டார் வாகனங்கள் | 1,286,909 | 1,247,215 | 1,247,215 |
| போட்டோ பிரதி இயந்திரம் | 409,132 | 333,293 | 333,293 |
| கணனிகள் | 594,975 | 1,924,330 | 1,924,330 |
| மின் சாதனங்கள் | 41,676 | 52,682 | 52,682 |
| நூலக புத்தகங்கள் | 197,000 | 203,408 | 203,408 |
| சக்தி வலு கருவிகள் | 994,670 | 101,102 | 101,102 |
| காற்றலை கோபுரங்கள் மற்றும் கருவிகள் | 2,481,963 | 2,154,088 | 2,154,088 |
| குளிர்சாதனப் பெட்டி சோதனை ஆய்வுகூடம் | 8,433,067 | 8,433,067 | 8,433,067 |
| ஹம்பாந்தோட்டை மற்றும் இந்துறான மின்சக்திப் பேட்டை | 72,451,282 | 70,590,680 | 74,054,465 |
| கண்காட்சி உபகரணங்கள் | - | - | - |
| UNDP திட்டங்களுக்கான நிலையான சொத்துக்கள் | 104,860 | 69,637 | 69,637 |
| குத்தகைக் காணிக்கான கடன் தொகை | 1,528,548 | 1,528,548 | 1,528,548 |
| ஹம்பாந்தோட்டை சூரிய மின் பேட்டையின் வலுக்குறைவு | 260,579,597 | - | - |
| கட்புலனாகாச் சொத்துக்கள் கடன் தொகை | 1,662,087 | 1,662,087 | 1,662,087 |
| மொத்தம் | 351,857,878 | 89,344,869 | 92,808,654 |

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது
(சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்)

## குறிப்பு 5.7 ஏனைய தொடர்ச்சியான செலவுகள்

| | குறிப்பு | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) | 2017 |
|---|---|---|---|---|
| அலுவலக மற்றும் ஏனைய செலவுகள் | | 2,213,476 | 1,167,877 | 1,167,877 |
| பத்திரிகை விளம்பரங்கள் | | 762,350 | 614,068 | 614,068 |
| காப்புறுதி | | 2,302,072 | 2,031,616 | 2,031,616 |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | | 61,428 | 144,803 | 144,803 |
| சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | | 816,320 | 1,099,700 | 1,099,700 |
| சிற்றுண்டிக் கட்டணங்கள் | | 706,996 | 1,173,017 | 1,173,017 |
| உள்ளூர் / வெளிநாட்டுப் பயிற்சித் திட்டம் | | 2,698,859 | 5,649,409 | 5,526,981 |
| வங்கிக் கட்டணங்கள் | | 39,910 | 29,576 | 29,576 |
| தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி (NBT) | | 2,741,030 | 789,376 | 789,376 |
| மொத்தம் | | 12,342,441 | 12,699,442 | 12,577,014 |

## குறிப்பு 11 - வேலையில் முன்னேற்றம்

| | குறிப்பு | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) | 2017 |
|---|---|---|---|---|
| புதுப்பிக்கத்தக்க சக்தி வலு மதிப்பீடு - காற்றலை கோபுரம் (பொகவந்தலாவ) | | 2,377,000 | 2,377,000 | 2,377,000 |
| ஆ.அ.வ. குவாண்டம் லீப் - WRA (காற்றலை) - (உபகரண வரிப் பகுதி) | | 2,299,935 | 2,299,935 | 2,299,935 |
| PV Through DC மைக்ரோ (யுனி-பெரா) சக்தி வலு திறன் பயன்பாடு | | - | - | 442,000 |
| அலுவலகக் கட்டட வளாகம் | | 17,515,653 | 6,797,403 | 6,797,403 |
| முன்மாதிரி மின்சார வாகனம் | | 7,956,800 | 7,956,800 | 7,956,800 |
| சம்பூர் காற்று அளவீட்டுக் கம்பம் | | - | - | 130,550 |
| நடுக்குடா காற்று அளவீட்டுக் கம்பம் | | - | 1,775,025 | 1,775,025 |
| சுத்தமான சக்தி வலு திறன் வலையமைப்புத் திட்டம் | | - | - | 15,788 |
| சக்தி வலு திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கான குறியீட்டின் திருத்தம் | | - | - | 951,778 |
| பூநகரி திட்டம் | | 16,207,754 | 12,952,964 | 12,952,964 |
| இந்துறான சிறிய நீர் மின் திட்டம் | | 396,257 | | |
| மொத்தம் | | 46,753,399 | 34,159,127 | 35,699,243 |

## குறிப்பு 14 - பெறவேண்டியவை

| | குறிப்பு | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) | 2017 |
|---|---|---|---|---|
| நிலையான வைப்பு மீதான பெறவேண்டிய வட்டி | | 1,415,552 | 1,262,865 | 1,262,865 |
| திறைசேரி உண்டியல்கள் மூலம் பெறவேண்டிய வட்டி | | 3,272,984 | 3,357,405 | 3,357,405 |
| இலங்கை மின்சார சபை - RCL வாடகை | | 8,033,271 | 8,033,271 | 8,033,271 |
| மின் உற்பத்தி - ஹம்பாந்தோட்டை / இந்துறான | | 7,187,084 | 4,097,367 | 5,174,781 |
| ஊழியர்களிடமிருந்து பெற வேண்டியவை | | 2,382 | 2,382 | 2,382 |
| உள்நாட்டு இறை வரி திணைக்களத்திடமிருந்து VAT கடன் | | - | 3,472,802 | 3,472,802 |
| உள்ளூர் பயிற்சித் திட்டம் (நிச்சயமின்மை) | | 82,000 | 89,500 | 211,928 |
| ஜட்கென்ஸ்பென்ஸ் பயணம் | | 6,309 | 6,309 | 6,309 |
| ஹெரிடேன்ஸ் அஹுங்கல்ல | | 35,659 | 35,659 | 35,659 |
| மொத்தம் | | 20,035,241 | 20,357,560 | 21,557,402 |

| | குறிப்பு | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) | 2017 |
|---|---|---|---|---|
| **குறிப்பு 15 - ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| மறுசீரமைப்பு வைப்பு | | | | |
| தேசிய இளைஞர்கள் | | - | 40,000 | 40,000 |
| நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை | | 2,500 | 2,500 | 2,500 |
| மருத்துவக் காப்புறுதி | | 500 | 500 | 500 |
| எரிபொருள் எக்ட் | | 186,500 | 186,500 | 186,500 |
| ஹம்பாந்தோட்டை - இமிச | | 52,000 | 52,000 | 52,000 |
| இந்துறான - இமிச | | 62,500 | 62,500 | 62,500 |
| சூரயவெவ - இமிச | | 1,500 | | |
| தொலைபேசி | | 351,048 | 351,048 | 351,048 |
| ஹம்பாந்தோட்டை விடுதி வாடகை | | 132,000 | 132,000 | 132,000 |
| ஸ்பிரிங் வோட்டர் பிரைவேட் லிமிட்டெட் | | 3,500 | 3,500 | 3,500 |
| அமெரிக்கன் பிரீமியம் வோட்டர் | | 23,000 | 23,000 | 23,000 |
| மொபிடெல் | | 2,000 | 2,000 | 2,000 |
| W.D.G.S ஒனில் - ODSM | | 2,100,000 | 2,100,000 | 2,100,000 |
| பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் | | 369,153 | 354,153 | 354,153 |
| பௌத்த கலாசார நிலையம் | | - | 10,000 | 10,000 |
| வாட்டர்ஸ் எட்ஜ் லிமிட்டெட் | | - | 50,000 | 50,000 |
| விதுல்க கண்காட்சி | | 25,000 | 25,000 | 25,000 |
| | | | | |
| முற்பணம் | | | | |
| நிகழ்ச்சிகளுக்கான முற்பணம் போன்றவை | | 169,918 | 311,398 | 311,398 |
| பிரதேச செயலகம் - ருவன்வெல்ல | | - | 251,814 | 251,814 |
| மாகாணக் கல்வித் திணைக்களம், ஊவா | | - | 1,034,596 | 1,034,596 |
| மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு | | 911,329 | 1,323,300 | 1,323,300 |
| மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு | | 790,191 | 1,618,300 | 1,618,300 |
| மாகாணக் கல்வித் திணைக்களம், வட மேல் | | - | 842,682 | 842,682 |
| பௌத்த கலாசார நிலையம் | | - | 892,512 | 892,512 |
| மாகாணக் கல்வித் திணைக்களம், தெற்கு | | 1,544,949 | 1,544,949 | 1,544,949 |
| அரசாங்க அச்சகம் | | - | 765,843 | 2,412,040 |
| மாகாணக் கல்வித் திணைக்களம், மேல் மாகாணம் | | 518,585 | 518,585 | 518,585 |
| எக்கோ பவர் லங்கா எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட் | | - | 5,805,000 | 5,805,000 |
| செயலாளர் - கல்வி அமைச்சு - ஊவா / வட மேல் மாகாணம் - NAMA | | 522,250 | | |
| பிரதம செயலாளர் - தெற்கு / கிழக்கு மாகாணம் - NAMA | | 1,955,680 | | |
| முற்பணம் - வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் (மத்திய மாகாணம்) - NAMA திட்டம் | | 2,214,750 | | |
| ஏனைய | | 8,596,168 | 1,559,592 | 4,576,704 |
| மொத்தம் | | 20,535,021 | 19,863,272 | 24,526,581 |

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது
(சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| குறிப்பு | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) | 2017 |
|---|---|---|---|
| **குறிப்பு 16 - காசும் காசுக்குச் சமமானவையும்** | | | |
| தே.சே.வ, சேமிப்புக் கணக்கு - 100610493406 | 173,410,145 | 166,914,053 | 166,914,053 |
| மக்கள் வங்கி, நடைமுறைக் கணக்கு - 078100188503576 | 25,214,869 | 8,512,421 | 8,512,421 |
| மக்கள் வங்கி, நடைமுறைக் கணக்கு - 078100278503576 | 4,620,071 | 4,620,072 | 4,578,684 |
| இலங்கை வங்கி, நடைமுறைக் கணக்கு - 8002630 | 933,764 | 960,864 | 960,864 |
| இலங்கை வங்கி, நடைமுறைக் கணக்கு - 74944408 | 76,202,054 | 11,228,284 | 11,228,284 |
| இலங்கை வங்கி, சேமிப்புக் கணக்கு - 75803419 | 134,548,641 | 153,868,425 | 153,868,425 |
| இலங்கை வங்கி, நடைமுறைக் கணக்கு - 80595356 | 37,878,950 | 46,116,605 | 46,116,605 |
| மொத்தம் | 452,808,494 | 392,220,724 | 392,179,336 |
| **குறிப்பு 18 - ஒத்தி வைக்கப்பட்ட மானியம்** | | | |
| மூலதன மானியம் 2008 | 33,770,435 | 33,770,435 | 33,770,435 |
| மூலதன மானியம் 2008 | 11,955,533 | 11,955,533 | 11,955,533 |
| வெளிநாட்டு மானியம் 2009 - ஜப்பான் | 24,165,380 | 24,165,380 | 24,165,380 |
| மூலதன மானியம் 2010- ஹம்பாந்தோட்டை சூரிய மின் பேட்டை | 46,693,991 | 46,693,991 | 46,693,991 |
| - கட்டுப்பாடற்ற மூலதன மானியம் | 10,646,819 | 10,646,819 | 10,646,819 |
| வெளிநாட்டு மானியம் 2010 - ஜப்பான் | 11,419,569 | 11,419,569 | 11,419,569 |
| மூலதன மானியம் 2011- இந்துறான சிறிய நீர் மின் திட்டம் | 15,523,945 | 15,523,945 | 15,523,945 |
| - கட்டுப்பாடற்ற மூலதன மானியம் | 68,798,341 | 68,798,341 | 68,798,341 |
| வெளிநாட்டு மானியம் 2011 - ஜப்பான் | 1,155,016,402 | 1,155,016,402 | 1,155,016,402 |
| - கொரியா | 191,097,075 | 191,097,075 | 191,097,075 |
| ஒத்திவைக்கப்பட்ட மானியம் 2012 - ஆ.அ.வ. | 15,082,346 | 15,082,346 | 15,082,346 |
| மூலதன மானியம் 2012 | 23,581,236 | 23,581,236 | 23,581,236 |
| ஒத்திவைக்கப்பட்ட மானியம் 2013 - ஆ.அ.வ. | 43,416,071 | 43,416,071 | 43,416,071 |
| ஒத்திவைக்கப்பட்ட மானியம் 2013 - கொரியா | 35,662 | 35,662 | 35,662 |
| மூலதன மானியம் 2013 - FARDF | 41,873,961 | 41,873,961 | 41,873,961 |
| மூலதன மானியம் 2014 | 20,487,827 | 20,487,827 | 20,487,827 |
| மூலதன மானியம் 2015 | 14,655,015 | 14,655,015 | 14,655,015 |
| மூலதன மானியம் 2016 | 17,855,251 | 17,855,251 | 18,752,051 |
| மூலதன மானியம் 2017 | 19,806,619 | 19,806,619 | 19,806,619 |
| கழி: | | | |
| - கடந்த ஆண்டுகளுக்கான ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | (957,038,514) | (865,758,409) | (865,758,409) |
| - ஆண்டிற்கான ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | (350,329,330) | (91,280,105) | (91,280,105) |
| மொத்தம் | 458,513,634 | 808,842,964 | 809,739,764 |

| குறிப்பு | 2018 | 2017 (மீளாய்வு செய்யப்பட்டது) | 2017 |
|---|---|---|---|
| **குறிப்பு 19 - ஏனைய செலுத்த வேண்டியவை** | | | |
| சக்தி வலு நிதியத்திலிருந்து அதிகார சபை நிதியத்திற்குச் செலுத்த வேண்டியவை | - | - | - |
| ஸ்விற்ச் ஏஷியா கட்டுப்பாட்டுக் கணக்கு | 4,548,176 | 4,548,176 | 4,548,176 |
| மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு | 500 | 500 | 500 |
| திரட்டிய செலவுகள் | 2,508,909 | 11,832,735 | 11,842,517 |
| குறிப்பிடப்படாத காசோலைகள் | 1,282,665 | 173,696 | 173,696 |
| புதுப்பிக்கத்தக்க சூரிய சக்தி வலு பதிவுக் கட்டணம் | 295,860 | 295,860 | 295,860 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 470,000 | 470,000 | 470,000 |
| UNDP - NAMA திட்டம் | 1,036,803 | 1,036,803 | 1,036,803 |
| UNDP - உயிரியல் திணிவு | 1,970,834 | 1,970,834 | 1,970,834 |
| கணக்காய்வுக் கட்டணம் | 2,058,636 | 1,332,636 | 1,332,636 |
| செலுத்த வேண்டிய VAT | 3,782,610 | | |
| ஜீவ சக்தி அசோஸியேட் - அளவைக் கட்டணம் | 252,875 | | |
| ஏல ஆவணம் | 5,000 | | |
| **கடன் வழங்குநர்கள்** | | | |
| புதுப்பிக்கத்தக்க சக்தி வலு ஈ-நெற் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 1,667,500 | 1,667,500 | 1,667,500 |
| சக்தி வலு கருவிகளைப் பெறுதல் | 326,025 | 326,025 | 326,025 |
| தக்க வைத்தல் | 3,168,918 | 4,154,251 | 4,154,251 |
| நாராஹேன்பிட்ட ஜாதிக பொல | 99,405 | 99,405 | 99,405 |
| **சில்லறைக் கடனாளிகள்** | | | |
| இலங்கை சுங்கம் | 310,748 | 310,748 | 310,748 |
| இ.நி.வ.அ.ச. நலன்புரிச் சங்கம் | 442 | 442 | 442 |
| **மீளப் பெறக்கூடிய வைப்பு** | | | |
| ஈ-நெற் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 10,000 | 10,000 | 10,000 |
| ENL ஆலோசகர் | 150,000 | 150,000 | 150,000 |
| சிக்மா டெக்னோலஜீஸ் | 10,000 | 10,000 | 10,000 |
| ரெயின்கோ ரினுவபிள் எனேர்ஜி கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | 30,000 | 30,000 | 30,000 |
| விதுல்க கண்காட்சி | 9,256 | 9,256 | 9,256 |
| இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனம் | 54,000 | 54,000 | 54,000 |
| மீளப் பெறக்கூடிய வைப்பு - வாகனங்கள் | 14,000 | 14,000 | 14,000 |
| ATA இன்டர்நஷனல் | 50,000 | 50,000 | 50,000 |
| விதுல்க சிம்போஸியம் - எனடர்டைமன்ட் லிமிட்டெட் | 25,000 | 25,000 | 25,000 |
| மீளப் பெறக்கூடிய வைப்பு - ஜென்சோ பவர் டெக்னோலஜீஸ் | - | 50,000 | 50,000 |
| மொத்தம் | 24,138,162 | 28,621,867 | 28,631,649 |

# கூட்டிணைப்புத் தகவல்கள்

## அதிகார சபையின் பெயர்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

## சட்ட அந்தஸ்து

2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது.

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

மட்டம் 5, 1வது மாடி, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | 0112677445 |
| தொலைநகல் | : | 0112682534 |
| மின்னஞ்சல் | : | info@energy.gov.lk |
| இணைய தளம் | : | www.energy.gov.lk |